கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI
11.11.2001
ரூ. 6.00



ஜூஸ் சிகிச்சை!



பாலே டீச்சர் பராக்!

கொஞ்ச நாள் 'டெலிஃபோன் மணி போல்' விஜய் தொலைக்காட்சியில் சிரித்துக் கொண்டிருந்தவர். அப்புறம் 'சன்'னில் 'இளமை, திறமை, புதுமை' என்று சொல்லிக் கொண்டு இளசுகளோடு அரட்டை – அடித்தவர் காயத்ரி ஜெயராம். துறுதுறு முகத்தில் குறுகுறு கண்களோடு இவர் வளைய வரும், தோரணையைப் பார்த்து, "ஜோதிகாவிற்குப் போட்டியாக சினிமாவில் நுழைகிற எண்ணம் உண்டா?" என்றபோது, "அய்யய்யோ அதெல்லாம் நமக்குச் சரிப்படாது" என்று பவ்யமாகப் பேட்டி கொடுத்தவர். இப்போது அந்தர்பல்டி அடித்து, அரை டஜன் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். "ஏனுங்க அம்மணி இப்படி ஏட்டிக்குப் போட்டியா நடக்குறது சரிதானுங்களா?" என்று 'ஸ்ரீ' படப்பிடிப்பில் சிக்கிய காயத்திரியை உசுப்பினோம்.

"மாடலிங் துறையிலே பெரிசா சாதிக்கணும்கிறதுதான் விருப்பமா இருந்தது. ஆனால் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்புக்கு வந்துட்டாலே, அடுத்து சீரியல், அப்புறம் சினிமான்னு வாய்ப்புகள் கதவைத் தட்டுது. கே. பாலச்சந்தர் சாரோட மருமகள் கீதா கைலாசம் மைக்ரோ தொடரில் நடிக்கிறியான்னு கேட்டாங்க. பெரிய வாய்ப்புதான். தயங்கினேன். "நடிப்பு மாடலிங்



கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



மாதிரிதான். பயப்படாமல் வா" என்று சுந்தர் கே விஜயன் இயக்கத்தில் 'அழுக்கு வேஷ்டி' தொடரில் நடிக்க வைத்துவிட்டார்கள். அப்புறம் 'நிழல் விளையாட்டு' தொடர். இந்தத் தொடரை இயக்கிய நாகா எனக்குள்ளிருந்த 'நடிகை'யை வெளியே கொண்டு வந்தார். அதன் பிறகு 'நாகபரணா' என்ற கன்னட கலைப் பட இயக்குனர் இயக்கிய 'நீலா' படத்தில் கதாநாயகி. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நீலா என்ற பாத்திரம். ஒரே பாத்திரம்தான். ஆனால் பத்துவிதமான பரிமாணங்களைக் கொண்ட பாத்திரம். படம் முடியும்போது நடிப்பு என்றால் என்னவென்று புரிந்துபோனது. இதன் பிறகுதான் தமிழில் பிரபுதேவாவுடன் 'மனதைத் திருடிவிட்டாய்' தீபாவளி ரிலீஸ். மனசு திக்திக்குன்னு இடையில் அடிக்கிறது" என்று நெஞ்சில் கை வைத்துக்கொண்டவரிடம் "சாம்ராட் அசோகா படத்தில் ஒற்றைப் பாடலுக்குக் கவர்ச்சி நடனம் ஆடியிருக்கிறீர்கள் ஏதாவது சென்டிமெண்ட்?" என்று கிடுக்கினால்...

"அது இந்தப் படங்களுக்கு முன்பு நான் ஒத்துக்கொண்டது. என்னோட அம்மா, சந்தோஷ்சிவன் காம்பினேஷனில் நிறைய விளம்பரப் படத்தில் நடிச்சிருக்காங்க. அவங்களை நீங்க 'ஹார்லிக்ஸ் அம்மா'வாக பார்த்திருக்கலாமே! 'சந்தோஷ்சிவன் பெரிய கிரியேட்டர். தயங்காமல் செய்யலாம்ன்னு அறிவுரை கொடுத்தாங்க. அந்த நடனம் கூட ரொம்ப ஏன்சியண்டாதான் தெரியும். அதுல கவர்ச்சி கிடையாது" என்று பதில் வருகிறது.

"மிஸ் இந்தியா ஆகி விடுவது என்ற தாகத்தோடு மும்பைக்குக் குடியேறி, அங்கே இதற்கென்று பயிற்சியெல்லாம் எடுத்தீர்கள் என்று கேள்விபட்டோமே?" என்றால், "அது 'பெமினா'வே நடத்திய நாற்பது நாள் பயிற்சி" என்று அதைப் பற்றிக் கொஞ்சம் சிலாகிக்கிறார்.

"இந்தியா முழுக்க இருந்து ஒவ்வொரு வருஷமும் முப்பது பேரைத் தேர்ந்தெடுக்கிறாங்க. அவங்க, அவங்க உடல் அமைப்புக்குத் தகுந்த மாதிரி முதலில் பிசிக்கல் டிரெய்னிங். அப்புறம் மாடலிங் செய்ய தேவையான உடல் மொழிகளைக் கத்து தராங்க. முக்கியமாக இங்கிலீஷ் டிக்ஷன் பயிற்சி. உலக அழகிப் போட்டின்னு போகும்போது நிறைய ஆங்கில வார்த்தைகள் பரிச்சயம் இருந்தால்தான் பேச முடியும். அதுக்காகவே இந்தப் பயிற்சி. கிட்டத்தட்ட இது பர்சனாலிட்டி டெவலப்மென்ட் பயிற்சின்னு சொல்லலாம். இந்த முப்பதிலிருந்து பதினைந்து, பதினைந்திலிருந்து ஒன்பது, ஒன்பதிலிருந்து ஐந்து, ஐந்திலிருந்து மூன்று என்று தேர்வு செய்றாங்க. என்னோட பாட்சில் முதலிடம் வந்த லாரா தத்தா மிஸ் யூனிவர்ஸ் ஆனாங்க. இரண்டாவது வந்த பிரியங்கா சோப்ரா மிஸ்வேர்ல்ட் ஆனாங்க. மூன்றாவது இடம் வந்த தியாமிஸ்ரா ஏசியா பசிபிக்காக கிரீடம் சூட்டப்பட்டாங்க. நாலாவதாக நான் வந்தேன். அந்த வகையில் எனக்குச் சந்தோஷம்தான்." என்ற காயத்ரி ஜெயராம் எஸ்.ஆர்.எம். கல்லூரியில் பி.எஸ்.ஸி ஸுவாலஜி படிக்கிறாராம். "நான் இப்போது நடித்துக் கொண்டிருக்கும் 'ஸ்ரீ' படத்தில் எனக்கு 'பாலே' கற்றுக் கொடுக்கும் டீச்சர் பாத்திரம். நான் பாலேவில் நிபுணியாக்கும்" என்றார் காயத்ரி. இந்தப் பாத்திரத்திற்காகவே ஒரு முன்னணி மாஸ்டரிடம் பாலே அசைவுகளை ரிவிஷன் செய்து பழகுகிறாராம். அவர் பிரபுதேவாதானே என்று கேட்டால்... "அய்யய்யோ அவர் தினேஷ் மாஸ்டர், தப்பா எழுதிடப் போறீங்க" என்று பதற்றப்படுகிறார். அதுவும் கூட அழகாகத்தானிருக்கிறது!

சந்திப்பு: **ஸ்ரீசக்கரம்**

கல்கி – பி.எம். சில்க்ஸ் பட்டுப் புடைவை பரிசுப் போட்டி முடிவு – 12

வைரக்கவிதைக் கேட்டிருந்தோம். குவிந்த கவிதைகளில் முதல் பரிசுக்குத் தேர்வு பெற்றது கீழே:

மனித வைரம்

வைரத்தால் நகைகள் செய்து
வகைவகையாய் அணிவதாலே
சாரம்தான் ஒன்றும் இல்லை;
சகத்தினில் நீயோர் குப்பை.
கோரமாம் பசியில் சிக்கி
கும்பிகள் காய்வோருக்கு
பூரண உண்டி ஈவோர்
புவியினில் மனித வைரம்!

– கே.பி. பத்மநாபன்,
கோவை - 641 005.

ஆறுதல் பரிசு பெறும் கவிதைகள்:

முத்துப்போன்ற பற்களென்றும்...
செம்பவள இதழ்களென்றும்...
ரத்தினப் பேச்சென்றும்...
தங்கமான குணமென்றும்...
ஒப்பனை வார்த்தைகளை
ஒருபோதும் கூறியதில்லை!
இருந்தபோதும் நீ ஜொலிக்கிறாய்
இதயத்துள் வைரம் போல!

– ராம் ஆனந்த், சென்னை – 17

தலைச்சன் பொட்டையா பொறந்தா
தழைக்காது குடும்பம்(னு)
பொம்பளை சாமி வந்துஆடி
பூசாரி சொன்னானாம்...

தங்கமும், வைரமும் இழைச்சு
பூட்டிப் பார்க்காத எங்கப்பன்...

நடுச்சாமங் கதவு தட்டுறப்பவாச்சும்
என் பேரைச் சொல்லிக்
கூப்பிடலாமில்லே?

– தஞ்சை ராகவ்,
மகேஷ்

உன் இமைக் கதவைத்
திறந்து வைக்காதே
இவ்வுலகில்
கயவர்கள் அதிகம்
உன் விழிகளுக்குள்ளிருக்கும்
கறுப்பு வைரம்
களவு போய்விடப்போகிறது...!

– ஜி. ஜெயந்தி,
பாண்டிச்சேரி



புவியினில் மனித வைரம்!

புதைந்து போ...
தோல்வியின் அழுத்தத்தில்..

வறுமை வெப்பத்தில்
உருகிப்போ...

கவலைப் பனியில்
உறைந்து போ...

எழுந்தெழுந்து விழுந்து
படிந்து போ...

காத்திரு
நீயும் கூட
நாளைய வைரம்...

– புன்னகை சேது,
வே. காளியாபுரம்.

உள்-ஆட்சி எப்படி?




• மெகாகுடும்பம்



• வெங்கட்ராஜ்

உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற சிலரின் வீட்டு 'உள்ளாட்சி'ப் பற்றி அறிய புறப்பட்டோம்:

முதலில் சந்தித்தது ஆலந்தூர் நகராட்சித் தலைவர் ஆர்.எஸ். பாரதியை. செல்போனில் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தவர் அவசரமாய்க் கட் பண்ணி விட்டு 'என்ன?' என்றார். 'உங்க வீட்டு உள்ளாட்சி...' என்று இழுத்ததுமே பலமாகச் சிரித்தார்.



• தனுஷ்கோடி

"ஆலந்தூர் நகராட்சிக்குத்தான் நான் தலைவர். வீட்டைப் பொறுத்தவரை என் மனைவி டாக்டர் சம்பூரணம்தான் சகலமும்" என்றவர் தம் மனைவியை அழைத்து, "இவங்ககிட்ட கேட்டுக்குங்க" என்றார் மீண்டும் 'செல்'லைத் தட்டி விட்டு.



• அனுராதா

"உங்க வீட்டு அதிகாரப் பகிர்வைப் பற்றிச் சொல்லுங்க?' என்றோம் திருமதியிடம். "எங்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்காரு எங்க வீட்டுத் தலைவர். முக்கியமான முடிவுகளுக்கு மட்டும் தலைவர்கிட்ட ஆலோசனை கேட்போம். மத்தபடி நான்தான். எங்க பசங்க சாய்லட்சுமிகாந்த், சாய் ஜெய்காந்த் (பயங்கர சாய்பாபா பக்தராம்) திடீர்னு வெட்டுத் தீர்மானம் கொண்டு வருவாங்க. எதிர்ப்புகள் பயங்கரமா இருக்கும். அந்தச் சமயத்துல தலைவர்தான் பிரச்னையைத் தீர்த்து வைப்பாரு. அப்படியொன்றும் பெரிய பிரச்னை இருக்காது. கிஷ்கிந்தா, எம்.ஜி.எம். சினிமா எங்கயாவது போறதா இருந்தா நாங்க ஒண்ணு சொல்வோம். பசங்க ஒண்ணு சொல்வாங்க. இதுல பிரச்னை முட்டுச்சுன்னா, கடைசியில பசங்க சாய்ஸ்தான். அந்தச் சமயத்துல நாங்க அடங்கிப் போய்விடுவோம்" என்ற சம்பூர்ணத்திடம், "பட்ஜெட் விவகாரமெல்லாம் சார்தானா?" என்றதுமே வேகமாக தலையாட்டி மறுத்தார் பாரதி.


"எனக்கு வீட்டு நிர்வாகம் பத்தி ஒண்ணும் தெரியாதுங்க. வரவு செலவிலருந்து, தினமும் எனக்கு பி.பி.டெஸ்ட், மத்த டெஸ்ட் பண்றது வரை அவங்கதான்" என்றார்.

"வீட்டு நிர்வாகத்துல நீங்க தலையிடறதில்லை. நகராட்சி நிர்வாகத்துல அவங்க தலையிடு...?" கேள்வியை முடிக்கும் முன்பே நிறுத்தினார் நம் பேச்சை.

"நான் கட்சியிலயும், நகராட்சி நிர்வாகத்துலயும் அதிக அக்கறை எடுத்துக்கறதாலதான் வீட்டு நிர்வாகத்துல தலையிட முடியலை, அதான் விஷயம். நகராட்சி விஷயத்துக்குள்ள அவங்க மூக்கை நுழைக்கறதே இல்லை" என்றார் மூன்றாவது முறையாக நகராட்சித் தலைவராகியிருக்கும் ஆர்.எஸ். பாரதி.

அடுத்தப் படையெடுப்பு பி.ஜே.பி. கவுன்சிலர் தனுஷ்கோடி வீட்டுக்கு. ஹார்டுவேர் பிஸினஸில் பிஸியாக இருக்கும் இவர்தான் வீட்டு உள்ளாட்சித் தலைவர்.

"அரசியல்னு வந்துட்டா குடும்பத்துல நேரம் செலவழிக்கிறது குறையுது; இதனால என் மனைவி அனுராதாவிலிருந்து வீட்ல எல்லோருக்கும் வருத்தம். அதுக்காக 'உள்ளாட்சி'யை விட்டுடலை; கட்டுக்கோப்பா வைச்சிருக்கேன். எல்லாருக்குமே முழு சுதந்திரம் உண்டு. நான்கு மகள்கள். படிச்சிட்டு இருக்காங்க. அவங்களுக்குன்னு ஒரு பட்ஜெட், மாதம் ஒதுக்கிடுவேன். அப்புறம் வீட்டுச் சமையலறைக்குக் கொஞ்சம். பெரிசா எதுவும் செலவு இல்லைங்கறதால அப்பப்ப என்ன தேவையோ அதைப் பண்ணிப்போம். மாதக



• ராஜேந்திரபாபு - மாலா



• ஆர்.எஸ். பாரதி - மனைவி மற்றும் மகன்களுடன்...

ராட்சியில ஒரு தீர்மானத்தின் மீது எதிர்க் கட்சிங்க விவாதிக்கிற மாதிரி முக்கியமான விஷயங்களை மட்டும் எல்லாரும் விவாதிப் போம். எந்த சைடுல இருந்து நல்லது வருதோ அதை எடுத்துப்போம்'' என்கிறார் தனுஷ் கோடி.

தனுஷ்கோடி அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தம்பி சுவாமிநாதன் பிஸிஸில் துணைத் தலைவர் நிலையில் இருப்ப தால் மேயர் மாதிரி வீட்டு நிர்வாகத்தில் செயல்பட முடிகிறதாம் இவரால்.

அ.தி.மு.க. தரப்பில், பேசுவதற்கே யோசித்த சில கவுன்சிலர்களுக்கு மத்தியில் 'நான் ரெடி' என்றார் நூற்றி ஐம்பத்து நான் காவது வார்டு கவுன்சிலரான ராஜேந்திர பாபு.


''எம்.ஜி.ஆர். காலத்திலயிருந்தே நான் அ.தி.மு.க.தான். ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்றேன். பொருளாதாரப் பிரச்னையில்லை. என் பகுதி மக்களுக்கு ஏதாவது செஞ்சி நல்ல பெயர் வாங்கணும். சென்னை மாநகராட்சி யிலேயே சூப்பர் பகுதியா என் பகுதியை மாற் றணுங்கறதுதான் என் விருப்பம்'' என்ற முன்னுரையோடு பேசிக் கொண்டே இருந்த வரிடம், விஷயத்தைச் சொல்லிக் கேட்டோம்.

''பளீர் வெள்ளை ட்ரெஸ்ல அரசியல்லயும் தொழில்லயும் இருக்கறதால 'வீட்டு உள் ளாட்சி'யை என் மனைவி மாலாதான் பாத்



ஸ்பிளாஷ் சேனல்!

சிறுவர், சிறுமியருக்காக இரண்டு வாரங்களுக்கு முன், பிரத்யேகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ஸ்பிளாஷ் சேனல்.



''குழந்தைகளுக்குக் கார்ட்டூன் சேனல் ரொம்ப பிடிக்கிறது என்றாலும், ஒரு குறிப்பிட்ட வயதுக்குப்பின், ஆர்வம் குறைந்து விடுகிறது. எம். டி.வி., சேனல் வி. போன்ற 'இளைய' சேனல்களில் பள்ளிப் பருவத்தினருக்கு வேண்டாத பல விஷயங்கள் தாராளமாக இடம் பெறுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மாணவப் பருவத்துக்குத் தேவையான விஷயங்களை மட்டும் கல்வி, தகவல், பொழுதுபோக்கு என்கிற மூன்று கோணங்களிலும் நிகழ்ச்சிகளை தருகிறது இந்த டி.வி.'' என்கிறார் இந்தச் சேனலின் துணைத் தலைவர் ரபிபெர்னாட்.

சென்னையைச் சேர்ந்த பென்டா மீடியா நிறுவனம் உட்பட ஒரு சில நிறுவனங்கள் முதலீடு செய்து ஆரம்பித்துள்ள புதிய நிறுவனமான இன்(ட்) டெலிவிஷன் இந்த ஸ்பிளாஷ் சேனலை ஆரம்பித்து, நடத்துகிறது.

மாணவப் பருவத்தினரின் கோணத்தில் நாட்டு நடப்புகளைச் சொல்லும் செய்திகள், பிரபலங்களுடனான சந்திப்பு, அறிவியல், விளையாட்டு என பல உருப்படியான விஷயங்கள் இந்த ஆங்கிலச் சேனலில் இடம் பெறுகின்றன.

சொந்தமாக தயாரிக்கிற நிகழ்ச்சிகள் தவிர, பி.பி.சி. ஹாலிவுட் படத் தயாரிப்பு நிறுவனங்கள் என பல்வேறு அயல் நாட்டுத் தயாரிப்புகளும் ஒளிபரப்பாகும்.

படிக்கிற குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம், தூக்கம் இரண்டிலும் நிறைய நேரம் போய்விடுவதால், இவர்களது பிரதான நிகழ்ச்சிகள், குழந்தைகள் பிற்பகல் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் நேரத்தில் தொடங்கி, இரவு ஒன்பது வரை ஒளி பரப்பாகும். அந்த ஆறு மணி நேர நிகழ்ச்சிகளே தினமும் மூன்றுமுறை மறு ஒளிபரப்பு செய்யப்படும். சனி, ஞாயிறுகளில் நாள் முழுக்க ஸ்பெஷல் புரோகிராம்கள்!

குழந்தைகள் பாடு ஜாலிதான்.

- கௌதம்

துக்கறாங்க. அவங்க பெங்காலி. காதல் திருமணம். விஜய்கார்த்திக், விஜய்தீபா, விஜய்மித்திலான்னு மூணு குழந்தைகள். வீட்ல பெங்காலி, இந்தி, தெலுங்கு, தமிழ்னு பலமொழியில பேசுவோம். (மினி இந்தியா?) பொதுவான விஷயங்கள்ல மனைவியே முடிவுகளை எடுத்துருவாங்க. எல்லாம் முடிச்சுட்டு என்கிட்ட வந்து அதைச் சொல்லுவாங்க. சில சமயங்கள்ல ஓ.கே. ஆகும். சில நேரம் பிரேக் ஆயிடும். அதுக்காக வீட்டு மெம்பர்கள் யாரும் வெளிநடப்பெல்லாம் செய்ய மாட்டாங்க.

"வீட்டு செலவுக்குன்னு பட்ஜெட் எதுவும் போடறதில்லை. எதெது எப்போ தேவையோ அந்த நேரத்துல பண்ணிக்கிறதுதான்'' என்றார்.

திருச்சி 34வது வார்டு கவுன்சிலர் (சுயேச்சை) மு. வெங்கட்ராஜை சந்தித்தோம்.

சுயேச்சையாக இரண்டாவதுமுறை வென்றிருக்கிறார் இவர். இவரை எதிர்த்து நின்ற தி.மு.க., அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு டெபாசிட் கூட கிடைக்கவில்லை.

வீட்டுக்குள் நுழைந்தால் 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் வருவது மாதிரி பல தலைகள்.

"என்ன அதிர்ச்சி ஆயிட்டீங்க. கூட்டுக் குடும்பம் என்னுடையது. தாத்தா, அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, குழந்தைகள்னு நிறைய பேர். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. வீட்ல சாப்டுட்டு, ஏதாவது வேலைகள் இருந்தா செய்யறதோட என் வேலை முடிஞ்சுது. வீட்ல கூட்டணி ஆட்சிதான். அப்பா, அம்மாதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிறது. அப்பா வீட்டுக்குப் பைனான்ஸ் பண்றவரா இருந்தாலும் அம்மாதான் அதைப் பகிர்ந்தளிக்க தலைவர் மாதிரி செயல்படறது. இதுவரைக்கும் அவங்க நிர்வாகத்துல ஒரு பிரச்னையும் வந்ததில்லை. ஏன்னா எதிலயும் கரெக்டா முடிவெடுப்பாங்க. ரொம்ப முக்கியமான விஷயத்துக்கு மட்டும் வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் கூடி ஆலோசிப்போம். விவாதிப்போம்னு வச்சிக்கலாம். அப்பவும் அம்மா பக்கமிருந்துதான் நல்ல தீர்வு வரும்'' என்று ஏகத்துக்கு அம்மா புகழ் பாடுகிறார், இந்த முப்பதுநான்கு வயது கவுன்சிலர்.

சீக்கிரம் வீட்ல கல்யாணம் பண்ணச் சொல்றாங்களாம். "ஒரு மெம்பர் கூடுமில்லை" என்கிறார். ஒரு வோட்டு என்பது சாதாரண விஷயமா என்ன?

— ஏக்ஜி, திருநாவு

படங்கள்: ஆல்பர்ட், ராஜன்

இன்றைய தமிழக அரசியலில் பல சவால்களைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர் சென்னை மேயர் ஸ்டாலின். முற்றிலும் சாதகமற்ற சூழலில் மாநகராட்சி நிர்வாகத்தை நடத்த வேண்டிய நிலை. அ.தி.மு.க போடும் வழக்குகளைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம்... எப்படிச் சமாளிக்கப் போகிறார்? கேட்டோம்...



எதையும் சந்திக்கத் தயார்!

—மேயர் ஸ்டாலின்



உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் பற்றி உங்கள் கருத்தென்ன?

"...துணையோடு ஆளும் கட்சி போட்ட ஆட்டம் பளிச்சென்று தெரிந்தது. ஆனால் அதே முறை கேடுகள் வடசென்னையிலும், 'அமைதியாக' நடந்தன என்பதுதான் உண்மை. அங்கு ஆளும் கட்சி, அதிகாரிகள், போலீஸ் ஆகியோரின் கூட்டணி எங்கள் வெற்றியைத் தடுத்துவிட்டது."

''வன்முறையை எதிர்க்க ஒரு துணிவு வேண்டும்'' என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். அ.இ.மு.கவினரின் வன்முறையை எதிர்க்கும் துணிச்சலை தி.மு.கவினர் இழந்துவிட்டார்களா?''

''எமர்ஜென்ஸியை எதிர்த்து துணிச்சலாகப் போராடியது நாங்கள் தான். அது ஒரு ஜனநாயக ரீதியான எதிர்ப்பு. ஆனால் இப்போது நடப்பது ரவுடி ராஜ்யம். சட்டத்தைக் காக்க வேண்டிய காவலர்களே ஆளும் கட்சி குண்டர்களுக்குத் துணை போகும்போது நாங்கள் என்ன செய்ய முடியும்? வாக்குச் சாவடிகளிலும், எண்ணிக்கை மையங்களிலும் அவர்கள் நடத்திய வெறியாட்டம் பற்றி நடுநிலையாளர்களே ஒப்புக் கொள்கின்றனர். முடிவுகள் குறித்து நீதி மன்றங்களில் வழக்குகள் இருக்கின்றன. பல உண்மைகள் வெளிவரும்.''

தி.மு.க அணியின் வெற்றி எதிர்பார்த்த அளவு இருந்ததா?

''மொத்தமாக ஐம்பது சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆளும் கட்சியின் அராஜகம், அத்துமீறல்களையும் மீறி இவ்வளவு வெற்றி கிடைத்திருக்கிறது. கடந்த 96 தேர்தலில் 90 சதவிகித வெற்றி கிடைத்தது. அதை ஒப்பிடும் போது, இப்போதைய ஆளும் கட்சி, மிகக் குறுகிய காலத்தில் மக்கள் நம்பிக்கையை இழந்திருப்பது 'பளிச்'சென்று தெரிகிறது. தி.மு.க அணி, திருப்தி கொள்ளத்தக்க அளவுக்கு வென்றதற்கு மற்றொரு காரணம், ஐந்தாண்டு கால தி.மு.க ஆட்சியில் ஊராட்சிகளில் நடந்த நலப்பணிகள்தான்.''

தி.மு.கவின் கோட்டை என்று சொல்லப்படும் சென்னையிலும் திமுகவின் செல்வாக்குத் தேய்வது போல் தெரிகிறதே!

''தேர்தலின்போதும், வாக்கு எண்ணிக்கையின் போதும், தென்சென்னையில் போலீஸ்

தி.மு.க தொண்டர்களிடம் பரவலாகப் பேசியதில் ''ஐந்தாண்டு கால எங்கள் ஆட்சியில் எந்தப் பலனும் இல்லை' என்றும் 'எதற்காக 'ரிஸ்க்' எடுத்துப் பாடுபட வேண்டும் என்றும் கேட்கிறார்கள் அவர்கள். தொண்டர்கள் போர்க்குணத்தை இழந்ததற்கு இந்த விரக்தி காரணமாக இருந்திருக்

குமோ?"

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கும் நிலையில் ஐந்தாண்டு கால கழக ஆட்சியில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்பதும் கட்சிக்கான ஆட்சியாக அல்லாமல் மக்களுக்கான ஆட்சியாக கலைஞர் ஆட்சி நடந்தது என்பதும் தெரிய வருகிறது. அதேசமயம், தி.மு.க தொண்டர்களுக்குக் கழக வரலாறு, இயக்கத்தின் லட்சியங்கள், சமுதாய நோக்கு, ஆகியவற்றைப் பற்றிய பாசறைக் கூட்டங்கள் நடத்தி, கழகத்தின் பால் இன்னமும் தீவிர ஈடுபாடு காட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டும்."

முன்பு எப்போதும் இல்லாத அளவுக்குக் கழகத்தில் கட்டுப்பாடு இல்லாமல் போய் விட்டதே? தி.மு.க அதிருப்தியாளர்கள்தான் தோல்விகளுக்குக் காரணம் என்று கூட்டணி கட்சிகள் பொருமுகின்றனவே?

"மிகக் குறுகிய கால இடைவெளியில் தேர்தல் வந்து விட்டதால், மேல்மட்ட அளவில் முடிவு எடுக்கப்பட்ட போதும் அந்த மெஸேஜ் கீழே வரை சரியாகப் போய்ச் சேரவில்லை; காரணம் நேரமின்மைதான். மேலும் பல லோக்கல் காரணங்களுக்காக, தி.மு.கவினர் தலைமையின் வழிகாட்டுதலைப் புறக்கணித்து கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடுகிறார்கள். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுத் தி.மு.கவுக்கு மட்டுமல்லாமல் மற்ற கட்சிகளுக்கும் பொருந்துமே!"

நீங்கள் முதலில் மேயர் பொறுப்புக்குப் போட்டியிட மாட்டேன் என்று சொன்னீர்கள். பிறகு முடிவை மாற்றிக் கொண்டதேன்?"

"உண்மைதான். ஐந்தாண்டு காலம் இருப்தியாக பொறுப்பு வகித்தபின் மற்றொருவருக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கலாம் என்ற நோக்கத்திலும், கழகத்தை வளர்க்க நிறைய சுற்றுப் பயணம் மேற்கொள்ளலாம் என்ற ஆசையிலும், முதலில் அந்த முடிவையெடுத்தேன். அதன்பின் கழக நிர்வாகிகள், தே.ஜ.கூ. தலைவர்கள் ஆகியோர் நான் போட்டியிட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஐந்தாண்டு கால பணிகளுக்கு ஒரு அங்கிகாரம் போல தேர்தல் வெற்றி அமையும் என்றும் சொல்லப்பட்டது. தலைமை கட்டளையிடவே தேர்தலில் நின்றேன்."



மாநிலத்தில் ஆளும் கட்சியாக அ.தி.மு.க. துணை மேயர் அ.தி.மு.க. உங்களைக் கசப்போடு பார்க்கும் மாநகராட்சி அதிகாரிகள். இப்படி கொஞ்சமும் சாதகமற்ற சூழலில் மேயர் பொறுப்பு ஒரு கடுமையான சவால் தானே!

"மாநகராட்சி என்பது அரசியல் பலத்தை காட்டும் தளமல்ல, மக்களுக்குத் தேவையான நல்ல பணிகள் செய்வதற்கே மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மன்றத்தில் நாங்கள் பெரும்பான்மையோடு இருந்தபோதும் கலந்து, விவாதித்து, எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு கொடுத்து, அவர்கள் கருத்தைக் கேட்டே மன்றத்தை நடத்தினோம். அப்படித்தான் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. வழக்கமான பணிகள் எந்தவித சிக்கலுமில்லாமல் நடக்கும். மற்றபடி புதிய திட்டங்கள், நிதி நிலையைப் பொறுத்தே மேற்கொள்ளப்படும். சென்ற ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட பணிகள் முழுமைப் படுத்தப்பட வேண்டும், முடிந்த பணிகள் பாதுகாக்கப் படணும். பெரும்பான்மை இருப்பினும் அ.தி.மு.கவின் ஆதரவு, மன்றத்தை நடத்துவதில் முழுமையாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். ஏதாவது பிரச்னைகள் வரும் என்றால் நிர்வாக ரீதியாக அதைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறேன்."

ஒரு பர்ஸனல் கேள்வி! மனத்தையும் உடலையும் எப்படி இளமையாக வைத்துக் கொள்கிறீர்கள்?

"ரொம்ப சுலபம், ஓய்வில்லாத உழைப்பு; நேரத்துக்குச் சாப்பிடாதது, சரியான தூக்கமின்மை. இதுதான் காரணங்கள் (சிரிக்கிறார்)."

சந்திப்பு: **ப்ரியன்**
படங்கள்: **ராஜன்**

**எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது தீபாவளி வாழ்த்துக்கள்**

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி


P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
**Old No. 102, New No. 138, USMAN ROAD, T. NAGAR,
CHENNAI - 600 017.**
PH: 4344442, 4327764 TUESDAY HOLIDAY

**திருஷ்டியைப் போக்கி, சகல செல்வங்களையும் தரும்
அதிர்ஷ்ட வினாயகர் ரூ. 50/-க்குக் கிடைக்கும்.**

குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. எனக்கு 20 வருட அனுபவம் உள்ளது. **P.R.** ஜுவல்லரி நிறுவனம் தொடங்கி 16 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். ஆர்டரின் பேரில் வைர நகைகள், தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் சிறந்த முறையில் செய்து தருகிறோம். பரிசுப் பொருட்கள் ரூ. 50 முதல் ரூ. 10,000 வரை கிடைக்கும். அனைத்து ராசிக் கற்களும், ஸ்படிக மாலைகள், ஸ்படிக வினாயகர், ஸ்படிக லிங்கம், பவழ வினாயகர், பவழ மாலைகள், முத்து மாலைகள் அனைத்தும் கிடைக்கும்.



நவரத்தினம்

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 7 வருடமாக அனைவரும் ராசிக் கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப் படியும், நடப்பு திசைப்படியும், எண் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக, நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுது ஜென்ம நட்சத்திரம், இராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால், அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. இது 9 கிரகங்களின் பலனைத் தரும். 6 கிராம் தங்கத்தில் நவரத்தின மோதிரம் ரூ. 6,250/-

நவரத்தினங்களின் பயன்கள், விலை விபரங்கள், அணிபவர்கள் வழிபட வேண்டிய ஸ்தலங்களின் விபரங்கள் :

1. சூரியன் – மாணிக்கம் **(RUBY)** அறிவு விருத்தியாகும். நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். தைரியத்தையும் துணிச்சலையும் தரும். செல்வம் தரும். சிம்மராசிக்காரர்களும், சூரிய தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- ஆகிறது. வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் சூரியனார் கோயில். தஞ்சை மாவட்டம். கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. சந்திரன் – முத்து **(PEARL)** ஞாபக சக்தி, செல்வம், வாக்கில் வலிமை, பலவித வசதிகள் ஏற்படும். கடக ராசிக்காரர்களும், சந்திரன் தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/-. வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 காரட் முத்து வைத்து மோதிரம். ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திங்களூர். தஞ்சை அருகில் உள்ளது.

3. குரு – புஷ்பராகம் **(PUSHPARAGAM)** வசதி, சுபகாரியங்கள், நன்மதிப்பு, செல்வம் ஆகியவை பெருகும். தனுசு ராசி, மீன ராசிக்காரர்கள் மற்றும் குருதசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளை, மஞ்சள் ஆகிய வண்ணங்களில் கிடைக்

கும். தங்கத்திலும், வெள்ளியிலும் அணியலாம். 4 கிராம் தங்கத்தில் ரூ. 2300/- ஆகும். வெள்ளியில் ரூ. 400/- ஆகும். வழிபட வேண்டிய ஸ்தலம் ஆலங்குடி கும்பகோணத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.


4. ராகு – கோமேதகம் **(GOMEDAGAM)** தடைபடும் காரியங்கள் நிறைவேறும். ராகு தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 250/- மோதிரம் விலை ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநாகேஸ்வரம் கும்பகோணத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

5. புதன் – மரகதப் பச்சை **(EMERALD)** கல்வி, செல்வம், ஞானம், ஆரோக்கியம், அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மிதுன ராசி, கன்னிராசிக்காரர்கள் மற்றும் புதன் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து வெள்ளி மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருவெண்காடு, மயிலாடுதுறை அருகில் உள்ளது.

6. சுக்கிரன் – வைரம் **(DIAMOND)** புகழ், செல்வம், அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். துலா ராசி, ரிஷப ராசிக்காரர்கள் மற்றும் சுக்ர தசை நடப்பவர்கள் அணியலாம். தங்கத்தில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 35,000/- 5 Cent வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் மோதிரம் ரூ. 4,250/- வழிபட வேண்டிய ஸ்தலம் கஞ்சனூர், கும்பகோணத்தில் இருந்து சூரியனார் கோயில் வழியில் 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

7. கேது – வைடூரியம் **(CATSEYE)** வியாபாரம் பெருகும். நிறைய வருமானங்களைக் கொடுக்கும். கேது தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 1000/- 20 Cent கல் வைத்து .மோதிரம் விலை ரூ.400/- வழிபட வேண்டிய ஸ்தலம் பெரும் பள்ளம் (வாணகிரி) மயிலாடுதுறை – பூம்புகார் வழியில் தர்மகுளம் அருகில் உள்ள நாகநாதசுவாமி கோயிலில் உள்ளது.

8. சனி – நீலம் **(SAPPHIRE)** அறிவு, மன அமைதி, பெயர், புகழ், செல்வம் ஆகியவை தரும். மகர ராசி, கும்பராசிக்காரர்கள் மற்றும் சனி தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநள்ளாறு. காரைக்காலுக்கு அருகில் உள்ளது.



9. செவ்வாய் – பவழம் **(CORAL)** மனதில் துணிவு, திருஷ்டியைப் போக்கும். செல்வம் மேலும் பல நன்மைகள் கூடும். மேஷ ராசி, விருச்சிகராசிக்காரர்கள், செவ்வாய் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 CARAT பவழம் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோயில். மயிலாடுதுறையில் இருந்து 14 கி.மீ. தொலைவில் வடக்கில் உள்ளது.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம். விலை ரூ.400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றி பெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, நேரம் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் கம்ப்யூட்டர் மூலம் ஜாதகம் கணித்து தருகிறோம். கட்டணம் ரூ. 50/- எங்கு ஜாதகம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ராசிக்கல் மோதிரம் வாங்கிப் பயன் பெறுங்கள். நாங்கள் தரும் கல் ஒரிஜினல் என முழு உத்தரவாதம் தருகிறோம். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

நவீன்




''சார், இந்த சீசன்ல எது வாங்கினாலும் இன்னொன்று ஃப்ரீ''

''அதுக்கென்ன?''

''இப்பதான் ஒரு மாச சம்பளம் வாங்கினேன்...''




''ஒரு கிலோ மைசூர் பாகுடன் ஒரு வெள்ளி சுத்தியல் ஃப்ரீ! (பாக்கு இடிக்கவும், படிப்பு ஏறாத பிள்ளைகள் தலையில் தட்டவும் வசதியாக.)''



''பயப்படாதே! ஒண்ணு எடுத்தா ஒண்ணு ஃப்ரீப்பா!!''

கொஞ்சம் ஃப்ரீயா சிரிங்க!



2001 நவம்பர் 11
விஷு ஐப்பசி 25
மலர் : 60
இதழ் : 15

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பயங்கரவாதத்தை வரவேற்பதா!

ராஜ்ய சபா தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்காக அரசியல் சாசனத்தையே திருத்த துணிந்திருக்கிற மத்திய அரசு, எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த எதிர்ப்பு எத்தனைக்கெத்தனை நியாயமானதோ அத்தனைக்கத்தனை நியாயமற்ற ஓர் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளன எதிர்க்கட்சிகள்-'பொடோ' சட்டத்தை ஜனாதிபதியின் ஆணை மூலம் அமுலுக்குக் கொண்டு வரும் முடிவை அவை வன்மையாக எதிர்த்துள்ளன.

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் ஆதரவு பெறாமல் இழுபறியில் கிடந்தது இந்தச் சட்டம். இப்போது, உலகெங்கும் தீவிரவாதமும் பயங்கரவாதமும் கோலோச்சுகிற காரணத்தால் அவசர ஆணை மூலம் அமுலாகவிருக்கிறது. அதன் விளைவாக காஷ்மீர்ப் பகுதியில் தீவிரவாதிகளையும் பயங்கரவாதிகளையும் கணிசமான அளவில் ஒடுக்க முடியும். வடகிழக்கு மாநிலங்களில் எல்லைப் பகுதிகளில் நிலவுகிற அச்சுறுத்தல்களைப் பெருமளவு கட்டுக்குள் கொண்டு வர இச்சட்டம் உதவும்.

இவ்வாறிருக்க, பொடோவை முற்றிலுமாக எதிர்த்து அது 'அரக்கத்தனமான சட்டம்'




என்று சோனியா காந்தி அறிக்கை விடுவது நல்லதற்கல்ல.

எதிர்க்கட்சிகளின் பணி, வெறுமே எதிர்ப்பது மட்டுமல்ல. ஆட்சி நல்ல விதமாக நடக்க விமர்சனம் மூலமும் மாற்று யோசனைகள் மூலமும் உதவுவதுதான். ஆனால், நமது நாட்டில், அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது என்பதே மரபாகிவிட்டது. அந்த வகையிலே 'பொடோ'வும் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்தச் சட்டத்தின் எந்த அம்சங்கள் ஆட்சேபகரமானவை? ஏன்? என்று விளக்கும் கடமை எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறது. அவ்வம்சத்தை அடியோடு நீக்குவதா அல்லது திருத்துவதா என்று ஆராய்ந்து, திருத்த வேண்டுமெனில் எவ்வாறு திருத்தலாம் என்றும் யோசனை கூறி உதவலாம்.

ஏற்கெனவே உள்ள சட்டங்களே போதுமானவை. அவற்றின் துணைகொண்டே பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் எதிர்கொள்ளலாம் என்கிறார் சோனியா காந்தி. இது மிகத் தவறான வாதம். ஒரு சராசரி அரசியல் ஊழல் குற்றத்தைக்கூட கண்டுபிடித்து உடனே சட்டபூர்வமாக நடவடிக்கை எடுப்பதென்பது நடக்காத காரியமாக இருக்கிறது. அரசு அமைப்பையே ஏய்க்க திட்டமிட்டு, நாசக் காரியங்களில் ஈடுபடுவோரை, எவ்வாறு சராசரி சட்டங்களுடன் எதிர்கொள்வது?

இன்று தீவிரவாதிகளின் கையில் இல்லாத ஆயுதங்கள் இல்லை; அவர்கள் அறியாத அழிவுத் தொழில்நுட்பம் இல்லை. கண்ணி வெடிகளும் மனித வெடிகுண்டுகளும் உலுக்கிய காலம்போய், இப்போது இரசாயன, உயிரியல் ஆயுதங்கள்கூட இந்த மூர்க்கமான பயங்கரவாதிகளின் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மினி அணுகுண்டுகள் கூட வைத்திருக்கிறார்கள் சில பயங்கரவாதிகள்! உலகம் குறுகிவிட்டதால் நவீன தொழில்நுட்பம்



அனைத்தும் பயங்கரவாதிகளின் உள்ளங்கைக்குள் வெகு சுலபத்தில் அடக்கமாகிவிடுகிறது. அத்தனையையும் அவர்கள் எப்படி, எப்போது பயன்படுத்துவார்கள் என்று யாரால் சொல்ல முடியும்? இன்னும் சிறிது காலத்தில் ஏவுகணைகள் தயாரித்து, அவற்றைச் செலுத்தி, செயற்கைக் கோள்களைச் சிதைக்கக் கூட பயங்கரவாதிகள் துணியலாம்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சிறப்புச் சட்டங்களின் உதவி இருந்தால்தான் ஒருவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்ய முடியும். நாடு கடந்து நடக்கும் நாச வேலைகளுக்கு ஆதாரம் சேகரித்துக் கொண்டிருந்தால், இங்கே விபரீதங்கள் நிகழ்ந்து முடிந்துவிடும்.

தடா சட்டம் அமுலில் இருந்தபோது அதனை காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சி அரசாங்கங்களும் பயன்படுத்தின என்பதை மறந்துவிடக் கூடாது.

தடா, மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்ததால் கைவிடப்பட்டது. அதனிடத்தில் உருவாக்கப்பட்டதுதான் பொடோ. தடாவிலுள்ள குறைகள் களையப்பட்ட ஒரு சட்டமாகவே இது அமைய பாடுபட்டிருக்கிறார்கள் அதனை உருவாக்கியவர்கள்.


எனவே பொடோவைப் புறக்கணிப்பதோ எதிர்ப்பதோ நிச்சயமாக உதவாது. அதனை அமுல்படுத்தும்போது ஏற்படக்கூடிய சில சிக்கல்களின் அடிப்படையில் அவ்வப்போது அவசியப்பட்டால் திருத்தங்கள்; மாற்றங்கள் செய்ய உதவ வேண்டுமேயொழிய, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைக் கட்சி அரசியலாக்கக் கூடாது.

சட்டத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாளவேண்டும் என்று வற்புறுத்த வேண்டியதுதான். ஆனால், எப்போதோ ஒருமுறை ஒரு அத்துமீறல் நடந்துவிடக் கூடும் என்பதற்காக இச் சட்டத்தையே எதிர்ப்பது, நாட்டில் பயங்கரவாதம் பரவ ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்பதற்கொப்பாகும்.

சீறுகிறார் சென்னை பத்திரிகையாளர்



* நய்ப்பால்



* ராகவசிம்மன்

"நோபல் பரிசு பெற கொஞ்சம்கூட தகுதியானவர் அல்ல நய்ப்பால்" என்று சீறுகிறார் சென்னையைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரான ராகவசிம்மன். அவரது கோபத்துக்குக் காரணம் என்னவென்று கேட்டோம்.

"நோபல் பரிசுக்கு லாயக்கற்றவர் நய்ப்பால்!"

"அது 1992ம் வருடம் ஆகஸ்ட் மாதம் என்று நினைக்கிறேன். எனது நண்பர் பத்திரிகையாளர் கனில், "லண்டனிலிருந்து நய்ப்பால் என்றொரு எழுத்தாளர் வந்திருக்கிறார். அவரை நீங்கள் சந்திக்க வேண்டும். 'இந்தியா - ஆயிரம் கலகங்கள்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறார் அவர். உங்கள் சந்திப்பு அவரது புத்தகத்திற்கு உதவியாக இருக்கும்" என்றார். சரி என்று தாஜ் கொரமண்டல் ஓட்டலில் அவரைச் சந்தித்தேன்.

"என்னை அவரது அறைக்குக்கூட அழைத்துப் போகாமல் 'லாபி'யிலேயே உட்கார வைத்துப் பேசத் துவங்கினார். என் முன்னோர்கள் பற்றி - என் இளமைக்கால வாழ்க்கையைப் பற்றி - ஆசார அனுஷ்டானங்களை மிக கடுமையாகக் கடைபிடித்துக் கொண்டு, ஒரு பத்திரிகையாளனாக லௌகிக வாழ்க்கையை எப்படி மேற்கொள்கிறேன் என்பது பற்றி - சின்ன சின்னச் சங்கதிகள் உட்படக் கேட்டார். நான் உணர்ச்சிக் குவியலாக அவரிடம் இதைச் சொல்லிக் கொண்டு இருந்தபோது ஒரு வெள்ளைக் காகிதத்தில் என்னைக் கையெழுத்துப் போடச் சொன்னார். என்ன, எதற்காக என்று கேட்கத் தோன்றாத மனநிலையில் அப்போது இருந்தேன் நான். அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டேன்.

"என் வீட்டுக்கு அழைத்துச் சென்று குடும்பத்தைப் பற்றிச் சொன்னேன். ஒரு நன்றி கூடச் சொல்லாமல் என்னிடம் விடை பெற்றுக் கொண்டு போனார் அவர். புத்தகம் தயாரானதும் கையெழுத்துப் போட்டு அனுப்புவதாகச் சொன்னார்.

"சில மாதங்கள் கழித்து அமெரிக்காவிலிருந்து என் நண்பர் ஒருவர், நய்ப்பால் புத்தகம் ஒன்றில் சொல்லியிருக்கும் சில விஷயங்கள் என் வாழ்க்கையை ஒட்டியதாக இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். இதற்கிடையில் அந்தப் புத்தகம் பற்றி 'ஹிந்து'வில் விமர்சனம் வந்தது. எனக்குக் காகுஸ்தன் என்று புனைபெயரிட்டு, என் வாழ்க்கையை நான் சொன்னபடி சுமார் 40 பக்கங்களில் எடுத்து வைத்திருந்தார். 'புத்தகத்தின் கதாநாயகனே காகுஸ்தன்தான்' என்று சொல்லியிருந்தது ஹிந்து. ஆனால் என்னால் பெருமைப்பட்டுக் கொள்ள முடியவில்லை. காரணம் நய்ப்பாலின் நடத்தை.

"என் உள்ளத்து உணர்ச்சிகளை வியாபாரமாக்கிக் கொண்டார் அவர் என்று உறுதியாகச் சொல்கிறேன். ஒரு நன்றி கூடச் சொல்லாமல் சென்றது என் மனத்தில் உறுத்திக் கொண்டே இருக்கிறது. சொன்னபடி புத்தகமும் அனுப்பவில்லை. இப்போது நினைத்தால்கூட நான் வெட்கப்படுகிறேன் - அந்த வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததை எண்ணி. எதற்காக அப்படி வாங்கினார்? இடையில் இரண்டு முறை தொலைபேசியில் பேசினார். ஒரு முறை "நீங்கள் குடுமி வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டு பதில் சொன்னவுடன் வைத்து விட்டார். மற்றொரு முறை நீங்கள் உடலில் பன்னிரண்டு திருமண் போடுவதுண்டா?" என்று கேட்டு 'ஆமாம்' என்று சொன்னவுடன் கட் பண்ணிவிட்டார். இப்போது சொல்லுங்கள் நய்ப்பாலைப் பற்றி நான் வைத்திருக்கும் மதிப்பீடு தவறா? அவர் எவ்வளவு பெரிய எழுத்தாளராக வேண்டுமானாலும் இருக்கட்டும். இலக்கிய கர்த்தாவாக இருக்கட்டும். ஆனால் குறைந்தபட்ச மனிதப் பண்புகள் இல்லாத அவருக்கு நோபல் பரிசு கொடுத்தது மகா தவறு!" என்று சொல்லி வருத்தப்படுகிறார் ராகவசிம்மன்.

"உங்கள் பரிசுக் கமிட்டி தவறான நபரைத் தேர்ந்தெடுத்து விட்டது" என்ற நோபல் அறக்கட்டளைக்கு விலாவாரியாக கடிதமும் எழுதியிருக்கிறார் இவர்.

- ப்ரியன்

படம் : ராஜன்

கோயில் ஓசைகள்

எங்கள் ஜனநாயக முன்னணி அரசுக்கு என்னமோ நேரம் சரியில்லை; இப்போதுதான் மார்தட்டிக் கொண்டார்கள் – 'எங்கள் மொஹல்லாக் கமிட்டி'க்காரர்கள் சமூகத்தில் ஒற்றுமையை வெற்றிகரமாக நிலை நாட்டி வருகின்றனர் என்று. மும்பையே அமைதிப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கும்போது, அவ்வளவு தடபுடலில்லாத தாலுகாவான மாலேகானில் இப்படி கலவரம் வெடிக்குமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை– அதுவும் சோனியா காந்தி மஹாராஷ்ட்ர மாநிலத்திற்கு வரப் போவதாக இருக்கும்போது.

அங்குள்ள மசூதியில் ஒருவர் அமெரிக்காவுக்கு எதிரான அறிக்கை ஒன்றை, பிட் நோட்டீஸ் போல் விநியோகித்ததை ஒரு கான்ஸ்டபிள் கண்டிக்கப் போக, அவர்கள் இவரைத் தாக்க, போலீசார் கண்ணீர்ப் புகை, தடியடி என்று அமர்க்களப்படுத்த, பன்னிரண்டு உயிர்கள் பலியாகி விட்டன. எண்ணற்றோர் காயமுற்றனர்; அக்கம் பக்கத்திலெல்லாம் கலவரம் பரவி வருகிறது. 223 பேர் கைதாகியுள்ளனர். ம்ம்ம்... அதற்குத்தான்... ரொம்ப அலட்டிக் கொள்ளக்கூடாது என்பது!

ஏக்கச்சக்கமாக அலட்டிக் கொண்டுதானே, அண்டர்வர்ல்ட் டான் அபுசலீமை கோட்டை விட்டார்கள்? இந்தி ஃபிலிம் இண்டஸ்ட்ரியை ஆட்டி வைத்துக் கொண்டிருந்த சலீமை, ஷார்ஜாவில் இண்டர்போல் பிடித்து விட்டதென்றும், அவனை இந்தியாவுக்கு விரைவில் கொண்டு வந்துவிடப் போவதாகவும் மும்பை போலீஸ் அறிவித்தது. ஆனால் அத்தனையும் பிசுபிசுத்துவிட்டது.

காரணம்...? சொன்னால் வெட்கக்கேடு! பிடிபட்டவன் தான் சலீம் என்பதை மும்பை போலீசால் நிரூபிக்க முடியவில்லையாம். இவர்கள் அனுப்பிய ஃபோட்டோ, பல காலங்களுக்கு முன்பு, அவனுடைய இரண்டு பேகங்களுடன், தாடியின்றி எடுத்த புகைப்படமாம். ஃபோட்டோ உருவத்திற்கும், இப்போதிருக்கும் உருவத்திற்கும் சம்பந்தமில்லை என்று அவனை விட்டு விட்டார்களாம். எப்படி இருக்கிறது கதை!



கதை போலத்தான் இருக்கின்றன மும்பையில் நடக்கும் நிகழ்வுகள். பாருங்களேன், அங்கே, இங்கே போய் கடைசியில் 'மந்த்ராலயா' (மராத்திய அரசு பீடம்)வுக்கே வந்து விட்டதே 'ஆந்த்ராக்ஸ் கலாட்டா! சகன் புஜ்பலுக்கு வரும் கடிதங்களைப் பிரிக்கும் பிரிவில் உள்ள இருவருக்கு, ஒரு கவரைப் பிரித்த

மாத்திரத்தில் கை அரிக்கத் துவங்கிவிட்டதாம். கையை அலம்பிய பின்னும் அரிப்பு தொடர்ந்ததில், அலறி அடித்துக்கொண்டு செயின்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருக்கிறார்கள். சிகிச்சைக்குப் பின் வீட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால் சந்தரகாந்த் பாத்யன் எனும் ஒரு ஊழியருக்கு ஹார்ட் அட்டாக் வந்து, ஐசியூ வில் அட்மிட் ஆகியுள்ளார். இருவரில் இவருக்கு மட்டும் ஆந்த்ராக்ஸ் தாக்கிய காரணம்? பிராந்திதான்.... சீச்சி... பயப் பிராந்திதாங்க!



• ஜெயின் கோயில்

பிராந்திய

நிழல் நோ...நோ...!

வழக்கென்று ஒன்று உண்டு... தெரியும்தானே? குஜராத்தியர்களுக்குக் கோயில் இருக்கும் இடத்தில் குடியிருக்க வேண்டும் என்ற ஒரு வழக்கம்... அதாவது வீட்டுக்கு அருகாமையிலேயே தினம் சென்று தரிசிக்குமளவில் பகவான் குடி கொண்டிருக்க வேண்டும். எனவே மும்பையில், ஒரு பில்டிங் கட்டுவதற்கு முன், அக்கம் பக்கத்தில் ஜெயின் கோயில் இருக்கிறதா? என்று பார்த்து பில்டர்கள் வேலை துவங்குவார்கள். அப்படி அமைந்து விட்டால், ஃப்ளாட் விலை எக்கச்சக்கத்துக்கு எகிறும். ஆனால் முலுண்டில் ஒரு பில்டிங்கின் மீது, பக்கத்திலுள்ள ஜெயின் கோயிலின் நிழல் விழுகிறதாம். அதனால் அந்த பில்டிங்கில் இருக்கும் ஃப்ளாட்டுகளை யாரும் வாங்க மாட்டேனென்கிறார்களாம்– முக்கியமாக குஜராத்தியர்! கோயில் ஒத்துக் கொள்ளும்; ஆனால் அதன் நிழல் ஒத்துக் கொள்ளாதாம்... வேடிக்கையாயில்லை?

வேடிக்கை உலகம்தான் இது; இல்லாவிட்டால் நல்லது செய்ததற்கென்று ஒருவரை உள்ளே தள்ளுவார்களா? நாய்களுக்குப் பிஸ்கட் போடுவதென்பது பாவகாரியமா என்ன? ஆனால் அப்படிப் போட்டதற்காக ஒரு பெண்மணி மீது அந்த சொஸைட்டியில் குடியிருப்பவர்களே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்! இவர் பிஸ்கட் போடுவதால் நாய்க் கூட்டம் தாளமுடியவில்லையாம்; அது குடியிருப்பவர்களுக்கு 'நியூசென்சாம்' நாய்களுக்கு உதவப் போவானேன்; இப்படி நாய் படும் பாடு படுவானேன்? நல்லது சில இடங்களில் கெட்டதாய்ப் போய்விடுவதுண்டு!

நல்ல படம் என்று இங்கே முழங்கிய 'சாந்தினி பார்' ஐப் பாருங்கள். குவைத், கதார், சவூதி எல்லா இடத்திலும் இதை படுமோசமான படம் என்று தடை விதித்து விட்டார்கள். தபுவுக்கு இஸ்லாமியப் பெயர் இருப்பதும் இதற்கொரு காரணமாக இருக்கலாமோ?

— ஜெயஸ்ரீ ராஜ்

மும்பை மசாலா

ஜூஸ் சிகிச்சை!



ஜூஸ் சிகிச்சை!

அப்போலோ மருத்துவமனையின் டாக்டர்களும், ஊட்டச் சத்து நிபுணர்களும் ஒருங்கிணைந்து உருவாக்கியுள்ள ஆரோக்கிய டெக்னிக் இது.

வழக்கமாக உடல்நலக் குறைவு உள்ளவர்களுக்குத் திட உணவுக்குப் பதிலாக கஞ்சியோ, பழச்சாறோ தருவது வழக்கம். ஆனால், இந்த ஜூஸ் தெரபி, உடல் நலக் குறைவானவர்களுக்கு மட்டுமில்லை; எல்லாருக்குமே.

ஒருசிலர், ஓரிரு நாட்களுக்கு வெறும் தண்ணீர் மட்டுமே உட்கொண்டு, உடல் நலனுக்காகப் பட்டினி இருப்பார்கள். ஆனால், வெறும் தண்ணீருக்குப் பதிலாக சத்தான, பழரசம் மட்டுமே பருகும் ஜூஸ் தெரபி, அதைவிட நன்மைகள் தரும்.

பொதுவாக நாம் உண்ணுகிற உணவு, குடிக்கும் தண்ணீர் முதலிய திரவங்கள், சுவாசிக்கிற காற்று, தோலில் தடவிக் கொள்கிற கிரீம்கள் என்று எல்லாமே, உடலில் உள்ள செல்களால் கிரகித்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றில் கலந்திருக்கிற ரசாயன மற்றும் நச்சுப் பொருட்கள் நாளடைவில் நம் உடலில் இருக்கிற செல்களில் படிந்துவிடுகின்றன. இதனால், செல்களின் மீது, நச்சுப் பொருட்களின் தாக்கம் அதிகரித்து, உடல் நலம் கெடுகிறது.

இந்த நச்சுப் பொருட்களால், உயிருக்கு உடனடி ஆபத்து இல்லாவிட்டாலும்கூட, நாளடைவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் ஆபாயம் உண்டு. எனவே, ஆரோக்கிய வாழ்வுதனை கருத்தில்

கொண்டு, ஒருவித முன்னெச்சரிக்கையாக இந்த ஜூஸ் தெரபியை நாம் கடைபிடிக்கலாம்.

பழச்சாறுகளில் உள்ள வைட்டமின்கள், தாது உப்புகள், என்ஸைம்கள் அனைத்துமாகச் சேர்ந்து, நம் உடல் நலனைப் பாதுகாப்பதோடு மட்டுமின்றி, நம் உடம்பில் உள்ள செல்களில் படிகிற நச்சுத் தன்மை கொண்ட, நின்று கொல்லும் சமாசாரங்களையும் அகற்றி விடுகின்றன. இதனால் மலச்சிக்கல், வயிற்றுத் தொல்லை



போன்ற பிரச்னைகள் தீர்கின்றன. உடம்பின் செல்களில் படியும் அதிகப்படியான கொழுப்பு அகற்றப் படுவதால், உடம்பு எடை குறைகிறது. ஜூஸ் தெரபி, கான்ஸரால் பாதிக்கப்பட்ட உடலின் செல்களுக்குப் புத்துணர்வைத் தருவதாகவும் டாக்டர்கள் சொல்கிறார்கள்.

காய்கறிகளையும், பழங்களையும் பச்சையாகச் சாப்பிடுவதற்கும், பழரசம் பருகுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஜூஸ் மனித உடலுக்கு உடனடி எரிபொருள் போலப் பயன்படுகிறது. பழங்கள், காய்கறிகளில் நார்ச்சத்து இருக்கும். எனவே, அவற்றைச் சாப்பிட்டால், அதை ஜீரணம் செய்ய, சக்தி செலவாகும். ஆனால் காய்கறி மற்றும் பழங்களைச் சாறு பிழிந்து பருகும்போது, ஜீரணம் மிகச் சுலபமாகிறது. திட உணவைச் சாப்பிட்டிருந்தால், அது செரிக்கத் தேவையான அளவுக்கு ஈரான சக்தி சேமிக்கப்படுகிறது. இதனால், உடல் நலக்குறைவு உடையவர்கள், இந்தத் தெரபியைக் கடை

ஜூஸ் தெரபி; சில டிப்ஸ்:

- ஜூஸ் பிழியத் தேவையான காய்கறிகள், பழங்களைத் தரமானவையாகப் பார்த்து வாங்குங்கள்.
- வாங்கி வந்த காய்கறி, பழங்களை நன்றாக அலசி, கழுவிய பின்னரே பயன்படுத்த வேண்டும்.
- பொதுவாக தோலை நீக்கி, சாறு பிழிவதுதான் முறை என்றாலும், கேரட்டை, நன்கு கழுவியபின், தோலை நீக்காமலேயே பயன்படுத்துவதுதான் நல்லது.
- பழங்களையும், காய்கறிகளையும் ஒன்றாகக் கலந்து சாறு பிழிய வேண்டாம்.
- அவ்வப்போது, சாறு பிழிந்து, ஃப்ரெஷ்ஷாகப் பருகுவதுதான் நல்லது. ஆனால், இது நடைமுறையில் சிரமம் என்பதால், மொத்தமாகச் சாறு பிழிந்து, காற்று புகாத பெட் பாட்டில்களில் ஊற்றி, நன்றாக மூடி, குளிர்ச் சாதனப்பெட்டியில் வைத்து, தேவையானபோது பருகலாம்.
- எல்லா ஜூஸ்களும் உடம்புக்கு நல்லதுதான் என்றாலும் சத்துணவு நிபுணர்கள் அதிசய ஜூஸ் என்று குறிப்பிடும் கேரட் ஜூஸுக்கு, ஜூஸ் தெரபியின்போது முக்கியத்துவம் தரலாம். மற்றவை ஆப்பிள், ஆரஞ்சு, மாம்பழம், திராட்சை, எலுமிச்சை, மாதுளை, தக்காளி, பீட்ரூட்.

பிடிக்கும் போது ஜீரணம் சுலபமாகி, விரைவில் உடல் குணமடைய ஏதுவாகிறது. உடல் பருமனானவர்கள், இத் தெரபியைக் கடைபிடித்தால் எடை குறையவும் வாய்ப்பு உண்டு. காரணம், பழம் மற்றும் காய்கறிச் சாறுகளில், கொழுப்புச் சத்து இல்லாததுதான்.

முதல் தடவையாக ஜூஸ் தெரபியைக் கடைபிடிக்க விரும்புகிறவர்கள் இரண்டு நாட்களுக்கு மட்டுமே இதைச் செய்து பார்க்கலாம். அதன்பின், சில வார இடைவெளிக்குப் பிறகு, மறுபடியும் முயற்சி செய்யலாம். பழகிய பின், நான்கைந்து நாட்களுக்குக் கூட ஜூஸ் தெரபியைப் பின்பற்றிப் பலன் காணலாம். திட உணவு ஏதும் சாப்பிடாமல், ஜூஸ் மட்டுமே பருகினாலும் உடம்பு நல்ல தெம்புடன்தான் இருக்கும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஜூஸ் தெரபியை பின்பற்றிய சிறிது காலத்துக்குள்ளேயே, உடம்பில் நல்ல விதமான மாற்றங்களை உணர முடியும் என்கிறார்கள்.



அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் சமீபத்தில் நடந்த ஆய்வின் படி, ஆப்பிள் ஜூஸ், கேன்ஸரால் பாதிக்கப்பட்ட செல்களை அழிக்க வல்லது என்றும், உடலுக்குக் கெடுதல் ஏற்படுத்தும் கொலஸ்டிரால்களைக் கட்டுப்படுத்தி, இதயம் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து நிவாரணம் தரும் என்றும் தெரிய வந்துள்ளது. இது தவிர மூட்டு வலி, உயர் ரத்த அழுத்தம், கிட்னி பிரச்னைகள், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள், கல்லீரல் பாதிப்பு போன்ற பல விதமான பிரச்னைகளுக்கும், ஜூஸ் தெரபி சிபாரிசு செய்யப்படுகிறது. புகைப்பிடித்தல், குடிப் பிரச்னை போன்ற பழக்கத்திலிருந்து விடுபட விரும்புகிறவர்களுக்கும்கூட, ஜூஸ் தெரபி பலன் தரும். ஆனாலும், ஏதாவது குறிப்பிட்ட பிரச்னைகள் உள்ளவர்கள், ஜூஸ் தெரபியைக் கடைபிடித்து, பலன் பெற விரும்பினால், அதற்குமுன் தங்கள் டாக்டரிடம் ஒரு வார்த்தை கலந்து பேசுவது உத்தமம்!

- மௌலி

நன்றி: **அப்போலோ மருத்துவமனை**

முன் அட்டையில் : **காயத்ரி**

அட்டை வண்ணப்படங்கள்: **ஆல்பர்ட் பால்.**

சரவணன் அப்பாவைப் பார்க்காமல் தவிர்க்க வேண்டுமென்று விரும்பினான். இரவு நடந்தவை எப்படியும் அப்பாவின் காதுக்குப் போய்விடும். அவர் கூப்பிட்டு ஏதாவது விசாரிப்பார். தான் ஏதாவது உளற நேரிடும் என்று சரவணன் பயந்தான். சரவணனுக்கும், அப்பாவுக்குமான உறவு அம்மாவுடனோ, பாட்டியுடனோ உள்ளதைப்போல திறந்த, எளிமையான உறவாக இல்லை. அதில் எப்போதுமே ஒரு தோரணையும், 'கெத்'தும் இருக்கும். சரவணனின் அப்பா தனது அன்பைப் பெரும்பாலும் கட்டளைகளாகவே வெளிப்படுத்துவார்.

"சரவணா ஏன்டா நேத்து ஸ்கூலுக்குப் போகலை. நேத்து டவுன்ல கடைவீதிப் பக்கம் திரிஞ்சயே... காலேஜிக்குக் கட் அடிச்சியா?"

"எதுக்குடா இப்ப காசு.. போன மாசந் தான் ஐந்நூறு ரூபா வாங்குன... அதுக்குள்ள இதென்ன ஃபீஸ்?"

"வர வர நீ செய்யறது ஒண்ணுஞ் சரியில்லை... ராத்திரி லேட்டா லேட்டா வீட்டுக்கு வர்ற..."

"அவங்கூட எல்லாம் ஏன் சேந்து சுத்துற... கெட்ட சகவாசம்."

இப்படிக் கேள்விகளாலும், குற்றச் சாட்டுகளாலும் நிரம்பியதாகத்தான் சரவணனின் அப்பா சிவராமனது உடையாடல் இருக்கும். எனவே இயல்பாக சரவணனது உரை





15

யாடல்கள் அதற்கான பதில்களாவே அமைந்ததில் வியப்பில்லை. சரவணன் தன் தந்தையிடம் பேசும்போது அதிகம் உபயோகிக்கிற வாக்கியங்கள் பின் வருமாறு...

"இப்ப என்னவாம்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை."

"யார் சொன்னா? நீங்க பாட்டுக்கு எதையாவது சொல்லிட்டிருக்காதீங்க."

"நான் ஒண்ணும் வேஸ்ட்டா எதும் காசு செலவழிக்கலை."

இப்படியாக தந்தை - மகனிடையே நிகழும் அனைத்துப் பேச்சுவார்த்தைகளும் ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போன்று மோதல் போக்கு உடையதாகவே இருந்து வந்ததால் பொதுவாகவே சரவணன் தந்தையுடன் நூற்றி இருபது செகண்டுகளுக்கு மேல் பேசுவதை விரும்பாதவனாக இருந்தான். சாதாரண நாட்களின் எண்ணமே இப்படி. இதில் நேற்று இரவு நடந்தவை அசாதாரணமான நிகழ்வுகள். எனவே தந்தையை இன்னும் ஒரு வார காலம் பார்க்காமலிருந்தால் கூட நல்லது தான் என்று நினைத்தான். ஆனால் அது சாத்தியமான விஷயம் அல்ல.

பானை செய்யும் ஆறுமுகம் முன்னிரவு தான் திருடனைப் பிடிக்கப் பாய்ந்து சென்ற வீரக் கதையை பல பேரிடமும் சொல்லிச் சொல்லி மகிழ விரும்பினான். இருந்தாலும் முதலில் சிவராமனிடம் சென்று சொல்லுதல்தான் முறை என்று அவனுக்குப் பட்டது. காரணம் பூவரச வீட்டுக்குத்தான் திருடன் வந்தான். அந்த வீட்டின் உரிமையாளர் சிவராமன். அடுத்தபடியாக தான் சென்று பிடித்து, நாலு அடி அடித்தது சிவராமனது மகனை. தவறாகவே செய்திருந்தாலும் சிவராமனது மகனை அடித்திருக்கக் கூடாதுதான். காரணம் சிவராமன் ஊரின் முக்கியஸ்தர். ஆறுமுகம் அவரை அண்டிப் பிழைக்கிறவன். எனவே 'எப்

பாஸ்கர் சக்தி

படிடா என் புள்ளை மேல கை வைக்கலாம்?' என்று கோபித்து அவர் ஆறுமுகத்தின்மேல் கைவைத்து விடக் கூடும்.

எனவே, தானே அவரிடம் சென்று விவரங்களைச் சொல்லி விட்டால் அவருக்குப் பெரிதாகக் கோபம் வராது என்று எண்ணி ஆறுமுகம் அவரைத் தேடி அலைந்தான்.

இதுல என்ன இருக்கா? எவ்வளவோ இருக்குடா. அந்த வீட்டுல நாம ஏன் வாழலை? ஏன் அதைப் பூட்டியே வச்சிருந்தோம். எல்லாம் மறந்து போச்சு ஒனக்கு. சாபம் வாங்குன வீட்லப்போயி ஆளுங்களைக் குடிவைக்கலாமா?

சரவணன், சிவராமனின் கண்ணில் படாமலிருக்க முயல, ஆறுமுகம் சிவராமனைத் தேடி அலைய... சிவராமனோ முதல் பஸ்ஸில் டவுனுக்குப் போய் விட்டு நிதானமாகத்தான் வந்து சேர்ந்தார்.

ஆறுமுகம் அவரை உள்ளூருக்கு விஜயம் செய்யும் அண்டை நாட்டு அதிபரை எதிர்கொள்வது போல் எதிர் கொண்டான். அவர் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டான்.

"அட விடு ஆறுமுகம். நான் தூக்கிட்டு வர மாட்டேனா?"

"இல்லைய்யா... இதிலென்ன இருக்கு. நான் கொண்டு வாரேன்."

"அப்ரமென்னா விசேஷம்!"

"விசேஷம் ஒண்ணில்லங்க..." என்று ஆரம்பித்துச் சொன்னான் ஆறுமுகம்.

"ராத்திரிதான் ஒரு சின்னக் கசமுசா நடந்து போச்சு... நம்ம பூவரச வீடுக்குள்ள ஒரு களவாணி பூந்துட்டான்."

சிவராமன் முகம் ஒரு கணம் இருண்டது.

"என்னடா சொல்ற?"

"ஒண்ணும் களவு போகலை. அந்த வீட்டுல குடியிருக்க பையனும் பொண்ணும் சப்தம் போட்டதால் நாங்க ஓடினோம். களவாணி ஓடிட்டான்."

சிவராமன் முகம் இன்னும் சாதாரண நிலைக்கு வரவில்லை.

"ஆளு வீட்டுக்குள்ள போய்ட்டானா!" என்று தனக்குள் ஒரிரு முறை சொல்லிக் கொண்டார்.

"நீங்க போறதுக்குள்ள தப்பிச்சிட்டானா?"

ஆறுமுகம், "ஆமாங்கய்யா. வீட்டுக்குள்ள களவாடணும்னு நொழைஞ்சிருக்கான். எங்க சப்தம் கேக்கவும் ஓடிட்டான். எதும் களவு போகலைய்யா ஒண்ணும் மனச்சங்கடப் படாதீங்க."

"ம்.."என்ற சிவராமனின் முகத்தில் இன்னும் இறுக்கம் அகலவில்லை.

"அப்புறம் இன்னொரு விஷயம்ங்கய்யா... களவாணியை விரட்டி வீட்டுக்குப் பின்னால ஓடுனப்போ அங்க நம்ம சரவணன் தம்பி வந்துச்சு. இருட்டில அவருன்னு தெரியாம புடிச்சு... ரெண்டு அடி அடிச்சுப் போட்டேன். மன்னிச்சுக்கங்க."

"என்னது சரவணன் அந்நேரம் அங்க இருந்தானா?"

"ஆமாங்க. நம்ம தம்பின்னு தெரிஞ்சா அடிச்சிருக்க மாட்டேன். கோச்சுக்காதீங்க."

"அதை விடுய்யா" என்ற சிவராமன் முகம் மேலும் இறுகியது. "இவனுக்கு அங்கென்ன வேலை? அந்த நேரத்தில?"

சரவணன் 'கம்'மென்று உட்கார்ந்திருந்தான். அப்பா கத்தத் துவங்கி இருந்தார். மிதமான கத்தல். இருந்தாலும் இந்தக் கத்தலின் பின்பு கடுமையான கோபம் இருப்பது நன்கு தெரிந்தது. எனவே சரவணன் பெரும்பலாலும் அமைதியாக இருந்து சமாளிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அமைதியாக இருந்தான். அத்துடன் கிருஷ்ணவேணியை சந்தித்த விவரம் தெரிந்து விடக்கூடாது என்ற பயமும் உள்ளூர இருந்தது.

"என்ன சோலி இவனுக்கு? அந்நேரம்

அந்த இடத்துக்கு எதுக்குப் போகனும்.. களவாணிப்பய.."

அம்மா, "அதான் அவன் வயிறு சரியில் லைன்னு அங்கிட்டுப் போனதா சொல்றா னில்லை."

"பொய் சொல்றாண்டி. வயிறு சரி இல்லைன்னா போற இடமில்லைடி அது.. இவன் வேற எதுக்கோ போயிருக்கான். எலேய் நெசத்தைச் சொல்ரா?"

சரவணன், "நான் நெசத்தைத்தேன் சொல்றேன். நீங்க, நம்பலைன்னா நான் என்ன செய்யறது?"

"உங்கூடவே திரிவாங்களே சிநேகிதங்க. அவங்க யாரும் கூட வந்தாங்களாடா?"

"இல்லை..."

"அதான் எனக்கு இன்னும் சந்தேகம். எப்பவும் கொடுக்கு மாதிரி கூடவே இருப் பாங்க. அவங்க இல்லாம நீ அங்க எங்கடா போன?"

பாட்டி சப்போர்ட்டுக்கு வந்தாள்.

"விடுறா... அவந்தான் சொல்றான் இல்லை. அதை நம்பாம திருப்பித் திருப்பி அவனைப் போட்டுக் குடையுற. விட்டுட்டு வேலையைப் பார்றா. சரவணா.. நீ போடா இங்கேருந்து.." சரவணன் இதைப் பயன்படுத்தி மாடிக்கு ஏறிப் போனான். அங்கிருந்து காதைத் நீட்டிக் கொண்டு கீழே நடக் கின்ற பேச்சுவார்த்தை யினைக் கவனித்தான்.

சிவராமன் பேச்சை விடுவதாக இல்லை.

"நீ சும்மா இரும்மா. அந்த வீட்ல கல்யாண மாகாதப் பொட்டைப் புள்ளைக மூணு இருக்கு. இவம்பாட்டுக்கு அந்நேரம் அந்தப் பக்கம் திரிஞ்சா. ஊர்ல கதையைக் கட்டி விட்டுற மாட்டாங்களா? எந் தலையில்ல உருளும்?"

பாட்டியும், சரவணனின் அம்மாவும் பரஸ்பரம் ஒரு நிமிடம் பார்த்துக் கொண் டனர்.

"ஆமா... பேசுனா பேசுனதுதான். நீ என்னத்துக்கு அந்த குடும்பத்தை அங்க கொண்டு வந்து குடி வச்சவன்?" என்றாள் பாட்டி.

அப்பா முகம் சுருங்கியது.

"ஏம்மா நான் ஒண்ணைச் சொன்னா நீயென்ன உளர்றே? அவங்க வீடு கேட்டாங்க. சும்மாதானே இருக்குன்னு வாடகைக்கு விட்டேன்."என்றார் அப்பா.

"அந்த வீட்டை வாட கைக்கு விட்டது தப்புடா. எங்கிட்ட கேட்டிருந்தேன்னா நான் சம்மதிச்சிருக்க மாட் டேன்." என்றாள் பெருமாயிப் பாட்டி.

"அந்தப் பொம்பளையோட புருஷன், செத்துப் போனவன் எனக்கு நல்ல பழக்கம்." அவன் சம்சாரங்கிறதால வீட்டை வாடகைக்கு விட்டேன். அவ் வளவுதான். இதில என்ன இருக்கு?"

பெருமாயிப்பாட்டி சொன் னாள். "இதுல என்ன இருக்கா. எவ்வளவோ இருக்குடா. அந்த வீட்டுல நாம ஏன் வாழலை. ஏன் அதைப் பூட்டியே வச் சிருந்தோம். எல்லாம் மறந்து



போச்சு ஒனக்கு. சாபம் வாங் குன வீட்லப்போயி ஆளுங் களைக் குடிவைக்கலாமா? அதும் பொம்பளைகளா இருக்காளுக அந்த குடும்பத்துல. அந்த வீட் டோட கதையை மறந்துட்டயா நீ, ஏன்டா!" என்றாள்.

சரவணனுக்குப் பாட்டி சொல்வது எல்லாமே வினோத மாக இருந்தது. அன்று குறி காரன் கூட சொன்னானே.

'சாபம் வாங்கிய வீடு...' என்று—

(தொடரும்)



* ரவுத்

டாக்டர் டி. ரவுத், நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர். ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் துணைத் தலைவர். மூளைப்பகுதியில் திடீரென்று இரத்தக் குழாய் வெடித்து மயக்கமுறும் நோயாளிகளை, அறுவைச் சிகிச்சை மூலம் காப்பாற்றும் நிபுணர். அவரிடம் பேசியபோது –

அபாயமான அனூரிசம்!

'அஞ்சு நிமிஷத்துக்கு ஒன்றுமே தெரியவில்லை; ப்ளாக் அவுட் ஆன மாதிரி இருந்தது' என்கிறார்களே, அதற்கும் மூளை இரத்தக் குழாய்க்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா, டாக்டர்?

உண்டு. மூளைக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய் வெடித்து, மூளைப் பகுதிக்குள் பரவி அங்கங்கே இரத்தம் படர்ந்து விடும். இதை ப்ரெயின் ஹெமரேஜ் என்பார்கள். பொதுவாக விபத்து மூலம் உடலுக்கு அல்லது அதிர்ச்சி மூலம் மனத்துக்குப் பாதிப்பு உண்டாகும்போது இந்த ஹெமரேஜ் உண்டாகிறது. இன்னொரு காரணம், இன்ட்ரா க்ரேனியல் அனூரிசம் எனப்படும் தலைக்குள் உண்டாகும் இரத்த அழுத்தம். பிறவியிலேயே இந்தக் குறைபாடு சிலருக்கு இருக்கும். ஆனால் ஐம்பது அல்லது அறுபது வயதுக்குப் பிறகு இது தாக்கும். இதை கஞ்சனிடல் ஸெக்யுலர் அனூரிசம் என்பார்கள்.

மூளைக்குள் இரத்தக் குழாய் வெடிப்பு ஏற்பட்டு, நூறு பேர் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அதில் ஐம்பத்தியோரு பேர் விஷயத்தில் இந்த அனூரிசம்தான் காரணமாக இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சமூகமும், மருத்துவத் துறையும் இதுநாள் வரை இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. பொதுவாகவே ஐந்து

சதவிகிதம் பேர் மூளைக்குள் அனூரிசம் பாதிப்பு உள்ளவர்கள்தாம். அதாவது, நூறு நோயாளிகளுக்கு இன்ட்ரா க்ரேனியல் அனூரிசம் இருந்தால் ஐந்து பேர்களுக்கு இரத்தம் வெளிவராமலே பாதிப்பு மட்டும் ஏற்படுவது உண்டு. மூன்று சதவிகிதம் பேர்களுக்கு, வருடா வருடம் மூளைக்குள் இரத்தம் வெளிப்படுவதும் உண்டு.

இது எவ்வளவு சீரியஸான விஷயம், டாக்டர்?

இப்படி மூளைக்குள் இரத்தம் வெளிப் படும் நோயாளிகளில் முப்பத்தைந்து சத விகிதம் பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுவதற்கு முன்னால் இறந்து விடு வார்கள். மருத்துவத் துறையில் மிக முன்னேறிய அமெரிக்காவிலும் இதுதான் நிலைமை. மீதி அறுபத்தைந்து சதவீதம் பேர் பல்வேறு நரம்பு நோய்களுக்கு ஆளாகக் கூடும்; நினைவுடனோ அல்லது கோமா நிலையிலோ இருப்பர். இம்மாதிரி நோயாளி களின் நிலை எத்தகையது என்று பெரும் பாலான மருத்துவர்கள்கூட உணர்வதில்லை. இது மிகவும் சீரியஸான நிலைமை, மூளைப் பகுதியில் இரத்தம் பாய்ந்து நோயாளி மயக்க மாகி இருக்கக் கூடும் என்பதை அறிந்து செயல்படுவோர் மிகக் குறைவு.

இப்படி வருவதற்கு முன் என்ன அறி குறிகள் இருக்கும்?

வாழ்நாளில் இதுவரை அனுபவித்திராத அளவுக்கு மிகக் கடுமையான தலைவலி வரும். வாந்தி வரும். கழுத்துப் பகுதியில் வலி இருக்கும்.

அதிக நோயாளிகள் மயக்கமுற்று, அதாவது 'ப்ளாக்அவுட்' ஆகி விடுவார் கள். மயக்க நிலை சில மணி நேரங்கள் நீடிக்கலாம். அல் லது கோமா நிலையிலேயே தொடர்ந்து இருக்கலாம். முன்பு இந்தப் பாதிப்புக்குக் காரணம் என்ன என்று புரியாமல் இருந்ததுபோய், இப்போது சுமார் முப்பது வருடங்களாக மருத்துவர் களிடமும், சமூகத்திலும் வந்திருக்கும் விழிப்புணர்வு காரணமாக, அதிக நோயாளி கள் சிகிச்சைக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

முப்பது வருடங்களுக்கு முன் ஏன் காரணம் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது?

பரிசோதனைக்குத் தேவையான கருவி கள் அப்போது இருக்கவில்லை. பிறகே தீவிர பரிசோதனை முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. இப்போது ஸிடி ஸ்கேன், எம்.ஆர். ஐ ஸ்கேன் எல்லாம் நோயைக் குறிப்பாக கண்டறிவதில் உதவி வருகின்றன. இப்போது அதிர்ஷ்டவசமாக Four vessels digital Subtraction Angiography செய்ய முடிகிறது. இந்த மாதிரி நிலைமைகளை இது துல்லிய மாக எடுத்துக் காட்டும். சில நோயாளிகள் விஷயத்தில் எம்.ஆர். ஆஞ்சியோகிராஃபி அல்லது ஸ்பைனல் ஸிடி போன்ற வசதிகள் மூலமே அறிந்துகொள்ளலாம்.

'அனூரிசம்' எங்கே ஏற்படுகிறது?

கபாலத்துக்குச் சற்றுக் கீழேயோ, மூளைக்குக் கீழேயோதான் பெரும்பாலான அனூரிசம்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. ஏனென்றால், மூளைக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் பிரதான இரத்தக் குழாய்கள்தான் இதற்குக் காரணமாக இருக்கின்றன.

இந்தப் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் விஷயத்தில், முப்பது சதவிகிதப் பேருக்கு மைனர் ப்ளீடிங் இருக்கும். இதை வார்னிங் ப்ளீடிங் என்பார்கள். இது அதீத தலை வலியோடு, அல்லது தலைவலி இல்லாமலே கூட வரலாம். சுமார் எழுபது சதவிகிதம் பேருக்குத்தான் அதிக ப்ளீடிங் இருக்கும்.



சென்ற இருபது வருடங்களுக்கு மேலாக, இந்த மைக்ரோ வாஸ்க்யுலர் அறுவைச் சிகிச்சையை, திருவனந்தபுரம் ஸ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவமனையில் செய்து வந்திருக்கிறேன். இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆபரேஷன்கள் செய்த அனுபவத்தில்தான் இந்த விவரங்களைச் சொல்லுகிறேன்.

முதலில், உறைந்த இரத்தத்தை அகற்றி விடுவோம். பிறகு இரத்தம் வெளிப்பட்ட, அனூரிசம் உருவான ரத்தக் குழாயைச் செப்பனிடுவோம். இதைக் 'கிளிப்பிங்' என்போம். தலையில் இரத்தக் குழாய்கள் ஓரிடத்தி லிருந்து இன்னோரிடத்துக்குக் கிளையாகப் பிரியும் முனைகளில் இந்த அனூரிசம் ஏற்படுகிறது.

குறிப்பிட்ட சமயத்தில் இரத்தம் அங்கே எவ்வளவு இருக்கிறதோ, அதைப் பொறுத்து, இரத்த அழுத்தம் அதிகரிக்கும்போது உயிருக்கு ஆபத்து ஏற்படவோ அல்லது மயக்கம் அடையவோ நேரும்.

உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்ளப் படாவிட்டால், சிலருக்குப் பத்து நாளுக்குள் மறுபடி இரத்தக் கசிவு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தாக முடியலாம்.

சில வேளைகளில் மைக்ரோ சர்ஜரி மூலம் மட்டுமே இந்த அனூரிசம் ஆபரேஷன்களைச் செய்ய முடியாமல் போகலாம். மிகப் பெரிய அனூரிசம்களை கார்டியோ - பல்மனரி பைபாஸ் முறையில் (அதாவது ஹார்ட் - லங் கருவியை உபயோகித்து) செய்ய வேண்டியிருக்கும். இது எல்லா மருத்துவமனைகளிலும் சாத்திய மில்லை. இப்படிப்பட்ட ஒரு நோயாளியையும் நான் 1990ல் அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறேன்.

சிலருக்கு, இரத்தம் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்ப் பாதை குறுகலாகும். இதை வாஸ்கோ ஸ்பாசம் என்பார்கள். இதற்கு அடுத்த நிலை இரத்தக் கசிவுதான். அதாவது, தலைக்குள் ஓர் 'ஆட்டம் பாம்' இருக்கிறது மாதிரி!

இன்ன வயதில்தான் வரும் என்று உண்டா, டாக்டர்?

ஐந்து வருடங்களுக்கு முன் 65 வயது ஒருவருக்கு ஆபரேட் செய்தேன். இப்போது பேரக் குழந்தைகளுடன் சௌக்கியமாக இருக்கிறார்.

கோவையிலிருந்து வந்த ஒருவரை டாக்டர் பி. ராமமூர்த்தி என்னிடம் அனுப்பி வைத்தார். இளைஞர். மூன்று முறை இரத்தக் கசிவு ஏற்பட்டிருக்கிறது அவருக்கு. ஆனால் வெளிப்படையாக எந்த நரம்புக் கோளாறும் இருக்கவில்லை. அவருக்கு அறுவைச் சிகிச்சை முடிந்து முற்றிலும் சரியாகி, இப்போது திருமணம் நடக்கப் போகிறது.

இன்னொரு தம்பதி. கணவனுக்கு வந்த மாதிரியே மனைவிக்கும் அனூரிசம்! அடுத்தடுத்து வந்தது. இரண்டு பேரும் அறுவைச் சிகிச்சை முடிந்து ஆனந்தமாக இருக்கிறார்கள்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மருந்துகள் உட்கொள்ள வேண்டும். ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். பதினைந்து நாட்களுக்குப் பிறகு வேலைக்குப் போகாலாம்.

இந்தப் பாதிப்பு இப்போது அதிகரித்திருக்கிறதா, இல்லை குறைந்து வருகிறதா?

எழுபதுகளில் வருடத்துக்கு முப்பது கேஸ்கள் வந்தன. 90களில் வருடத்துக்கு நூறு கேஸ்கள் வர ஆரம்பித்தன. 'ஆன்ட்டீரியோ வீன மால்ஃபார்மேஷன்'தான் பொதுவாக இரத்தக் கசிவுக்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. நோயாளியின் நிலையை 0 முதல் 6 வரையிலான நிலைகளில் பிரிக்கலாம். அறுவைச் சிகிச்சையும் 2-3 மணி நேரம் முதல் 10-12 மணி நேரம் வரை நீடிக்கும். இதில் நியூரோ அனஸ்தடிஸ்ட்டின் பணி முக்கியமானது.

சந்திப்பு : **சாருகேசி**

படங்கள் : **வெங்கடேஷ்**

"அடுத்த ஆண்டு அணுகுண்டு யுத்தம் காரணமா உலகமே அழியப்போகுதுன்னு அந்த பிரபல ஜோஸியர் சொல்லியிருக்கார்!"

"அய்யய்யோ! அப்படினா சீரியல் பார்க்க முடியாதா?"

- வே. ஆறுமுகம்



ரிமோட்

நீங்க எப்படி இருக்கீங்க? நான் நல்லா இருக்கேங்க. நீங்க எப்படி இருக்கீங்க? நானும் நல்லா இருக்கிறேங்க. உங்க படம்னா எனக்கு உயிருங்க. அப்படிங்களா? சந்தோஷங்க. நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க? நான் ஹவுஸ் ஒய்ஃபுங்க.

- இப்படியே நட்சத்திரத்துடன் நேரடியாகப் பேசும் (!) வளவளா நிகழ்ச்சி அர்த்தமில்லாமல் நீளுகிறது. பேசாமல் நிறுத்திவிடலாம் சன் டீ.வி.க்காரர்கள். It is not evil that is ruining the earth, but mediocrity என்றார் அமெரிக்க இசையமைப்பாளர் ஒருவர்.

இதுவரை வந்த நட்சத்திரப் பேட்டிகளுள் வடிவேலுவின் உரையாடல் தான் ரொம்பச் சாதாரணமாக அமைந்துவிட்டது. அதுவும், இருங்க, என் அண்ணன் பேசறாங்க, இருங்க... வேறொருவராக இருந்தால், வாழ்க்கை வெறுத்துக் காவி கட்டிக் கொண்டு காசிக்குப் போய் விட்டிருப்பார். வடிவேலு பொறுமை பூஷணம்.

நேயர்களில் ஒருவர், 'உங்களைக் குட்டி நாகேஷ்னு சொல்றாங்க. நீங்க ஏன் சர்வர் சுந்தரம், எதிர்நீச்சல், நீர்க்குமிழி என்று அவர் நடித்த மாதிரி ஹீரோவாக நடிக்கலே?' என்று கேட்டார். 'வாய்ப்புக் கொடுத்தால் தானே?' என்று வடிவேலு பதிலளித்தார். நாகேஷ் எங்கே, நான் எங்கே என்று சொல்லியிருந்தால் உண்மையாயும் இருந்திருக்கும், பெருந்தன்மையாயும் இருந்திருக்கும்.

வினோத்



ஜவாஹர்லால் நேரு ஒரு தலைசிறந்த ஜனநாயகவாதி. குறிப்பிட்ட பிரச்னையின் ஒரு பக்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அதன் மறுபக்கம் அவருக்கு ஞாபகம் வந்துவிடும். உடனே அதையும் சேர்த்துப் பேசுவார். அவருடைய பேச்சுக்களில் nevertheless என்ற சொல் அடிக்கடி இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

கே. பாலசந்தர் நேருஜியின் அபிமானி போலும்.

காவி கட்டிக் கொண்டு காசிக்குப் போகலாம்!

'பார்த்தாலே பரவசம்' படத்தைப் பற்றி ராஜ் டீ.வி.யில் விளக்கியபோது, "ஒரு டூயட் பாட வேண்டியது. உடனே காதல் வந்திட்டுது என்று சொல்வது. இதிலே எனக்கு நம்பிக்கை கிடையாது. பாடல் காட்சி என்றால் அதிலே ஒரு கதைக் கரு இருக்க வேண்டும் என்று நினைப்பவன் நான்." என்றவர், உடனே "ஆனால் நானும் இந்தப் படத்தில் அப்படியொரு டூயட் காட்சி சேர்த்திருக்கிறேன்" என்று ஒப்புக் கொண்டார். பிறகு, "இந்தப் படத்தில் ஒரு கருத்தைச் சொல்ல முயன்றிருக்கிறேன்" என்றவர், உடனே, "அது மிகப் பெரிய கருத்துன்னு சொல்ல முடியாது" என்று திருத்தம் சேர்த்தார். Why such an apologetic stance?

'பார்த்தாலே பரவசம்' படத்தின் ஷூட்டிங்கையும் இந்தத் தொகுப்பில் (விளம்பரத்தில்) இணைத்திருந்தார்கள். கவலையுடன் கவனித்துக் கொண்டேயிருந்த கே.பி. அந்தக் காட்சி திருப்தியாக வந்தவுடன் அகமும் முகமும் மலர 'ஹா!' என்று தலையை ஒரு வெட்டு வெட்டிக் கொண்டார். பார்த்தாலே பரவசம்!

மிகையான மேக்கப்பைக் குறைத்துக் கொண்டிருப்பதாலும் மட்டமான பணக்காரத்தனத்தை மட்டுப் படுத்திக் கொண்டிருப்பதாலும் மஞ்சுளாவின் பாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவு பெற்று வருகிறது 'மருமகள்' தொடரில்.



• பார்த்தாலே பரவசம்

அவருடைய மருமகனாக வருவதற்கு மூன்று பெண்கள் போட்டிப் போடுகிறார்கள் என்பதும், பிள்ளையாண்டானோ குஷ்புவிடம் ஒருதலைக் காதல் கொண்டிருக்கிறான் என்பதும், அம்மாக்காரி மனசுக்குள் ஒரு திட்டம் வைத்துக்கொண்டு வெளியே வேறு விதமாகக் காய் நகர்த்துகிறாள் என்பதும் கதைக்குச் சுவாரஸ்யம் ஏற்படுத்துகின்றன. ஆனால் எபிஸோட்களில் சீரமைப்பு இல்லை. ஹைஜாக், ஒரு பெண்ணின் கொலை, பிரேத அடையாளம் முதலிய அனைத்தும் ஒரே நாளில் அடைக்கப்பட்டது அமெச்சூர்த்தனம். பொறுமையுடன் விவரித்திருக்க வேண்டிய சம்பவங்கள் அவை. A handful of patience is worth more than a bushel of brains.

ஆச்சரியம் என்னவெனில், முறைப்பாகவும் விறைப்பாகவும் இதுவரை டி.வி. தொடர்களில் நடித்து வந்த நிழல்கள் ரவி, மாமியாரின் காலடியில் - காலடியில் என்றால் literally காலடியிலேயே - உட்கார்ந்து கோமாளித்தனமான சேஷ்டைகள் செய்வதுதான். என்ன ஆச்சு நிழலுக்கு?

டாப் டென் பாடல்களும் படங்களும் வரிசைப்படுத்துகிற சமாசாரங்கள், அந்தந்தச் சேனல்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப manipulate செய்யப்படுகின்றன என்று ஒரு வதந்தி உலவுகிறது. ஒரு சேனலில் ஏழாவது இடத்துக்குத் தள்ளப்படுகிற பாடல் இன்னொரு சேனலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றப்படுவதைக் கண்டால் அந்த வதந்தி உண்மைதானோ என்ற சந்தேகம் உண்டாகிறது. A kind of film-fixing?

புத்தம் புதிய 'கொண்டாட்டம் டீ.வி.' (கே.டீ.வி.) வரிசைப்படுத்துகிற வேலையில் இறங்கி, கால் பாட்டு, அரைப் பாட்டாகக் கசாப்புப்பண்ணவில்லை. 'காதல் காதல்' என்ற தலைப்பின் கீழ், அமர்க்களம், அரவிந்தன், அப்பு, மலபார் போலீஸ் முதலான படங்களிலிருந்து ஹீரோ ஹீரோயின்களின் துரத்தல் பிடித்தல்களை முழுசாகவே ஒளிபரப்பியது. நன்றி. அப்பாஸ், அஜீத், கார்த்திக், சரத்குமார் எல்லாரும் தோன்றினார்கள்.

பார்த்து முடிந்தபோது உதித்த சந்தேகம். ஹீரோயின்களின் கழுத்திலே அப்படி என்னதான் இருக்கிறது? ஹீரோ after ஹீரோ ஏன் அங்கேயே மோப்பம் பிடிக்கிறார்கள்?



• கே. பாலசந்தர்

அசுர வேகமான பாட்டும் அரக்க வேகமான ட்ரம்களும் சேர்ந்து அட்டகாசம் செய்தன ஸ்டார் ப்ளஸ்ஸின் நிகழ்ச்சியில். 'கேலோ தண்டியா' என்று பெயர் போட்டிருந்தார்கள். (குஜராத் நடனம் என்று தெரிகிறது.)

வண்ண வண்ணப் பொடிகள் பறந்து கொண்டிருந்த மேடையில் அசல் பாடகர்களும் அசல்நடனக்காரர்களும் ஆடிப்பாட, பரந்த மன்றத்தில் குழுமியிருந்த ஆண்களும் பெண்களும் தங்கள் தங்கள் இஷ்டத்துக்குக் கும்மாளம் போட்டார்கள். இந்த மாதிரி உல்லாச கலாட்டாவை எங்கேயும் பார்த்திருக்க முடியாது. கோலாட்டக் குச்சிகளால் வேறே தாளத்தோடு தட்டிக் கொண்டார்கள். என்ன ஆடுவது, எப்படி ஆடுவது என்று தெரியாமல் சில பேர் முழித்துக் கொண்டு நின்றார்கள். ஒரு புயல் கரையைக் கடந்ததும் மறு புயல் மேடையில் மையம் கொண்டது. மொத்தத்தில் குஜராத் பிரளயம்தான்.

கவலைகளை மறந்து கொஞ்ச நேரம் குஷியாக இருக்கச் செய்வதுதான் இதன் நோக்கம் என்றால் அந்த நோக்கம் நன்றாகவே நிறைவேறிவிட்டது. A happy heart is better than a full purse.

வலை வலையாம் காரணமாம்!

ஆண்டவன் படைப்பில் அற்பமானது என்று எதுவுமே இல்லை என்பதை உணர்த்துகிற அதிசயம் சிலந்திவலை. வீடுகளில் நமக்கு இடைஞ்சல் என்று கருதித் துடைப்பத்தால் சுற்றி அழிக்கும் ஒட்டடைகளாகட்டும், காட்டுப் பகுதிகளில் வித விதமான அழகுகளில் மரக்கிளைகளிலும் பாறைகளிலும் பற்றிப் படரும் 'மெகா' சிலந்தி வலைகள் ஆகட்டும் - எத்தனை பொறியியல் நேர்த்தியானவை என்பது தெரியுமா?

சிறுவயது முதலே சிலந்திப் பூச்சிகளை ஆர்வத்தோடு வேடிக்கை பார்த்தவர் பெர்ட்-இ-டக்டேல் என்னும் கட்டடப் பொறியாளர். ஒரு சிலந்திப்பூச்சி எப்படி வலை கட்டுகிறது என்பதைத் தொடக்கம் முதல், கட்டி முடிக்கிறவரை பொறுமையாகக் கைக்கெட்டிய தூரத்தில் அமர்ந்து கவனித்தார். டிராயிங் போர்டை வைத்துக் கொண்டு சிலந்தி வலை பின்னுகிற ஒவ்வொரு அசைவையும் அப்படியே பதிவு செய்து கொண்டார். இப்படி அவர் கவனித்தபோது, அற்பமான சிலந்திப் பூச்சிவலை பின்னுகிறபோது ஏற்படும் அதே சிரமங்கள் கட்டுமானப் பணிகளிலும் ஏற்படுவதை ஒப்பு நோக்கினார். தம்முடைய கவனிப்பின் முடிவுகளை ஒரு கட்டுரையாக எழுதினார்.

ஒரு மரக்கட்டையின் முனையிலிருந்து எதிர்ப்புறம் உள்ள ஒரு செடியின் இலைக்கு ஓர் இழையைக் கொண்டு போனதையும், அங்கிருந்து கீழ் நோக்கி ஓர் இழையை நீட்டிப் பாறைத்துண்டில் பற்றிக் கொண்டதையும், அங்கிருந்து முதல் இழையை நோக்கிப் போய் இணைப்புத் தந்ததையும் கவனித்தார்.

இப்படி முக்கோண வடிவில் அடிப்படை இழைகளை அமைத்துக் கொண்டு தான் தனக்குத் தேவையான வலைப் பின்னலை சிலந்தி தொடங்குகிறது.

குறுக்கிலும் நெடுக்கிலும் ஆரக்கால்களாகப் பத்திருபது இழைகளை அமைத்து அவற்றின் இணைப்பு மையத்தில் ஒரு துளைபோல் இடைவெளியை விட்டு,



அப்புறம் வட்டமாகச் சுற்றிச் சுற்றி ஓடி ஒரு சிலந்தி, வலையைப்பின்னி முடிக்கிறது. இந்த வேலைக்கு அது எடுத்துக் கொள்கிற நேரம் சுமார் நூற்றைம்பது நிமிடங்கள்.

அப்புறம் மையத்துளைப் பகுதியில் வசதியாக அமர்ந்து இரை விழும் என்று காத்திருக்கிறது. அவ்வப்போது பழுதுபடும் வலைப் பகுதிகளைச் சீராக்குகிற வேலையும் அந்தச் சிலந்தியைச்

ஏறும் ஜூடானின் விலை

பிரான்சு நாட்டின் கால் பந்தாட்ட வீரரான ஜூடானை 500 மில்லியன் பிராங்குகள் கொடுத்து ஸ்பெயின் நாட்டு கால்பந்து குழு, தங்களுக்காக விளையாட



ஒப்பந்தம் செய்துள்ளது. மாதம் ஒன்றுக்கு 24 மில்லியன் ஊதியமாகவும், ஜூடானுக்குத் தரப்படுமாம். கால்பந்தாட்ட உலகில் ஜூடானின் விலை ஏறிக்கொண்டே போகிறது.

— பாரீஸ் பார்த்தசாரதி



"பிறந்த நாளும் அதுவுமா தலைவர் ஏன் அடியாள் ஆறுமுகத்தைப் பக்கத்திலே நிக்க வைச்சிருக்கார்!"

"கேக் வெட்டணும்னு யாரோ அவர்கிட்ட சொல்லிட்டாங்க..."

— பி.ஆர்.பி

சேர்ந்ததுதான். எறும்புகள், கறையான்கள் மாதிரிக் குழு வேலை இல்லை. ஒற்றைப் பூச்சியாகத் தானே செய்து கொள்கிற ஏற்பாடுதான் இது.

எல்லா இடத்திலும் சிலந்தி வலை பின்னுவதில்லை. தனக்கு இரையாகக் கூடிய பூச்சிகளின் நடமாட்டம், சாதகமாக உள்ள பகுதியை முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. பற்றிக் கொண்டு வலை பின்ன எந்த மரக் கட்டை அல்லது செடி ஏற்றது என்பதையும் அது தீர்மானிக்கிறது.

சிலந்தி வலையின் இழைகள் இரண்டு வகையாக உருவாக்கப்படுகின்றன. சுற்றிச் சுற்றி வளையமாக வருகிற இழைகளில்தான் பசை போன்ற ஒட்டிக் கொள்கிற தன்மை உண்டு. இதில் தான் பூச்சிகள் மாட்டிக் கொள்ளும். வண்டிச் சக்கரத்தின் ஆரக் கால்கள் மாதிரி உள்ள இழைகளில், ஒட்டிக் கொள்ளும் தன்மை இல்லை. சிலந்தியைக் கூர்ந்து கவனித்தால் அவை ஆரக் கால்களில்தான் கால்களைப்பற்றி நகருவதைக் காணலாம். இரண்டு விதமான இழைகளும், பூச்சியின் அடிவயிற்றுச் சுரப்பியிலிருந்து வெளி வருகிற திரவத்திலிருந்தே 'நூற்கப்'படுகின்றன. காற்றுப்பட்டதும் திரவம் உறுதியான இழையாகி விடுகிறது.

சாதாரணமாகக் காணப்படுகிற சக்கர வடிவ வலைகளைத் தவிர புனல் வடிவத்திலும், சுரங்க வடிவத்திலும் கூடச் சிலந்தி வலைகள் காணப்படும். 'டாரண்டுலா' என்கிற ராட்சதச் சிலந்தியின் வலை கிட்டத்தட்டப் பத்தொன்பது அடி விட்டமுடையதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் பறவைகளே சிக்கிக் கொள்ளும் என்கிறார்கள். அப்படியானால் இந்த வலையின் இழை எவ்வளவு உறுதியாயிருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

சிலந்தி ஒன்றைப் பிடித்து அதன் இழைகளை ஓர் உலோக பிரேமில் சுற்றிச் சுற்றிப் பின்ன வைத்துச் செயற்கையான வலையாக்கி, மாசுக் கட்டுப்பாட்டுக்காக நுண்துகள்களை வடிகட்டும் ஆய்விலும், இங்கிலாந்தில் அணு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

— சுப்ர. பாலன்

படம் : யோகா

உங்கள் குழந்தைகளின் படிப்பு உங்கள் கையில்




A must for every home



ஆசிரியர் : திருவள்ளூர் என்.சி. ஸ்ரீதரன்
ராதா ஸ்ரீதரன்

- நேர்த்தியான கையெழுத்து - ஏன்?
- எழுத்துப் பிழை - ஏன்?
- படிக்கும் விதம் - எப்படி?
- சரிவிகித உணவு - என்ன?
- ஆங்கிலத்தில் பேசுதல் - எப்படி?
- மூளை பாதுகாப்பு - எப்படி?
- நண்பர்கள் - யார்?
- கீழ்ப்படிதல் - எப்படி?
- விளையாட்டு - எவ்வளவு?
- அடிக்கக் கூடாது - ஏன்?
- மன ஆரோக்கியம் - எப்படி?
- படிக்கும் இடம் - எங்கு?
- பொறுப்புகளைக் கொடுப்பது - எப்படி?
- 'ஞாபகமறதி' என்பதே கிடையாது.
- படிப்பது மனதில் பதிவது எப்படி?
- நினைவாற்றல் என்பது கடவுள் கொடுத்த வரம் அல்ல.
- எந்தக் குழந்தையாலும் நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியும்.
- நினைவாற்றல் பயிற்சிகள்.
- குறுகிய கால நினைவாற்றல் (Short Term Memory).
- நீண்ட கால நினைவாற்றல் (Long Term Memory).
- நினைவில் பதிந்ததை மனதிற்குக் கொண்டு வரும் வழிமுறை

விலை ரூ. 80/- (இரண்டு புத்தகங்கள், தபால் செலவு உள்ளிட்டு) கிடைக்குமிடம்:
The Time Foundation, No. 4, III Cresent Park Road,Gandhi Nagar, Adyar, Chennai - 20.



ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸஹஸ்ர நாமமும் மற்ற ஸ்ரீ லக்ஷ்மி ஸ்தோத்திரங்களும்
(தேவமொழி சமஸ்கிருதத்தில்)

மனஅமைதி இழக்கும் மனிதனுக்கு ஆறுதல் மருந்தாகச் செயல்படுவது, தெய்வமும், தெய்வ சிந்தனைகளும்தான். கடவுளை வேண்டு. மற்றவற்றை அவனிடம் விட்டு விடு என்பது ஆன்றோர் வாக்கு. அதுவும் தேவபாஷை என்று அழைக்கப்படும் சமஸ்கிருத மொழியில் உள்ள ஸ்லோகங்களை கேட்பதாலும், பாராயணம் செய்வதாலும் மனம் அமைதி அடைகிறது. தெய்வங்களிலே வாழ்க்கையில் வளத்தையும், எல்லாவிதமான செல்வங்களையும் கொடுக்கவல்ல ஸ்ரீ லக்ஷ்மியை துதி செய்யும் ஸ்லோகங்களை ஒலித்தட்டாக அன்பர்களுக்கு வழங்குவதில் சூப்பர் டேப் டிஸ்க் (பி) லிட் ஆனந்தம் அடைகிறது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸகஸ்ர நாமமும் மற்ற லக்ஷ்மி ஸ்தோத்திரங்களும் : இதில் மஹாலக்ஷ்மி ஸகஸ்ரநாமம், மஹாலக்ஷ்மி சுப்ரபாதம் (பாதூர் ராகவாச்சாரியா ஸ்வாமி) ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிய 'ஸ்ரீ ஸ்துதி' ஸ்ரீ யாமுனாச்சாரியாரின் 'சதுஸ் லோகி' ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய 'கனகதாரா ஸ்தோத்ரம்' மற்றும் அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம், மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம் ஸ்ரீ ராகவாச்சாரியாரின் மஹாலக்ஷ்மி மங்களம்.

பரம்பரை சங்கீத பாணியில் சென்னை மாநிலக் கல்லூரி பேராசிரியர் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி பிரிவின் தலைவர் பேராசிரியர் ஆர். தியாகராஜன் தலைமையில் திரு. பி.எஸ். ரகுராமன், ஸ்ரீ மாலோலக் கண்ணன், திரு பக்தவத்சலம் ஆகியோர் பாட இசையமைத்திருப்பவர் பிரபல இசையமைப்பாளர் திரு. வி. ஆர். மாணிக்க விநாயகம் அவர்கள்.

அனைவரும் ஸ்ரீமஹாலக்ஷ்மி அருளால் அனைத்துச் செல்வங்களும் பெற்று வளமோடு வாழ்வாராக!

SUPER TAPE & DISCS (P) LTD.
713, ANNA SALAI, CHENNAI - 600 006.
INDIA. FAX: 91-44-8523734 E-mail-super tape @yahoo.com
Available at Singapore - Mustafa Centre 393 3511
USA - Mr.Anil Prabhu Ph : 7326611700 Mobile : 7328417777

Super RECORDING

Audio Cassettes available @ Rs. 50/- & Audio Compact Discs available@Rs. 200/- Phone : 858 7009

பெரியவர், தன் எதிரே வந்து 'செய்தி' சொன்ன ஆளை நிமிர்ந்து பார்த்தார். உடன் இருந்தவர்களும் அவரைப் போலவே வந்த ஆளிடம் 'செய்தியை'த் தெரிந்துகொள்ள துடித்தனர்.

"எப்போ ஆச்சு...?"

"மத்தியானம் மூணு மணியிருக்கும்னு அந்தப் பொண்ணு சொல்லுது...! 'தலை வலிக்குது... காபி போட்டு எடுத்து வா...'ன்னு அதுகிட்டே சொன்னாராம். காபி வர்றதுக்குள்ளே மூச்சு அடங்கிடுச்சாம்...!" எதிரே நின்றவன் முழு சோகத்தோடு செய்தியைச் சொன்னான்.

பெரியவர் மீண்டும் அமைதியாக இருந்தார். அதற்குள் அவரின் குடும்பம் முழுதும் வெளியில் வந்தது.

"இருந்த வரைக்கும் அண்ணன் வேணாம்... அவரு உறவு வேணாம்... உறவுமொறைக் கூட்டமே வேணாம்னு திமிரோட காலத்தை ஓட்டியாச்சு...! இப்போ கட்டையை நீட்டிட்டாரு... யாரு போயி அங்கே நிக்கறது...?" பெரியவரின் மனைவிதான் முதலில் வாய் திறந்தாள்.

"ஆயிரம்தான் பங்காளிங்க சண்டைன்னாலும், யாரையாவது மதிச்சதுண்டா...? யாருக்காவது அடங்கியதுண்டா...? ஊருக்கே கட்டுப்படாம இருந்திட்டுப் போயிட்டாரே...?" யாரோ ஒருவர் அம்மணிக்கு ஒத்து ஊதினார்.

அங்கிருந்த ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றியதை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எல்லோருமே - 'போய்ச் சேர்ந்து விட்ட 'சின்னவர்' எவ்வளவு மோசமானவராக கோபக்காரராக, யாருக்கும் கட்டுப்படாதவராக, பொறுப்புணர்ச்சி இல்லாதவராக, கொஞ்சம் கூட பாச



அரும்பாத்தபுரம் மது

மில்லாதவராக சராசரி மனிதத் தன்மைகூட இல்லாதவராக தன் வாழ்வில் நடந்து கொண்ட விதங்களைப் பற்றி, தங்கள் போக்கில் சொல்லிக்கொண்டிருந்தனர்.

பெரியவருக்கு மனம் ஒரு நிலையில் இல்லை.

“அவன் போய்ச் சேர்ந்துவிட்டான்...! இப்ப என்ன செய்யறது..?” இதைத்தான் ரொம்ப நேரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார் அவர்.

“செத்து விழுந்தாக்கூட நமக்குள் எந்த உறவும் வேணாம்...”சின்னவனின் ஆவேசமான குரல், அவரின் சுயமரியாதையைச் சுண்டிப் பார்த்தது.

இருக்கும்போதே என்னை உதறிவிட்டான். இனிமேல் அவனைப் போய்ப் பார்த்துத்தான் என்ன செய்ய...? இனிமேல் பாசம் வந்துதான் ஆவதென்ன...? வராமல்தான் போனாலென்ன...? விரக்தி கொஞ்சமாக எட்டிப் பார்த்தது.

‘அங்கே’ போவதா...? வேண்டாமா...? அவருக்குப் புரியவில்லை.

அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட சண்டைகள் ஊருக்கே தெரியும். சாதிக் கட்டுமானம் ஊர்க் கட்டுமானம் என எதற்குமே கட்டுப்படாமல் நடந்துகொண்டார் சின்னவர். எவ்வளவோ நியாயங்களை அவர் சொல்லித் திரிந்தாலும், ஊர் என்னவோ பெரியவரின் பக்கமே நின்றது.

இயலாமையால் ஏற்பட்ட ஆவேசம், ஏமாற்றப் பட்டு விட்டோம் என்கிற நினைப்பில் எழுந்த எரிச்சல், ஊரார் மத்தியில் எடுபடாத தன் தரப்பு நியாயங்கள் - என

போட்டிக்கதை - 10

விடை தெரியாத வினாக்கள்



எல்லாமும் ஒன்று சேர்ந்து சின்னவரை கோபக்காரராகவே ஆக்கிவிட்டன.

ஆனால், பெரியவரின் சிந்தனையோ வேறு மாதிரியாக இருந்தது. "எது எப்படியிருந்தாலும் நான் அண்ணன். அவன் என் தம்பி...! நான் சொல்வதற்கு எதிர்ப்பேச்சு பேசுவதா...? ஊரே என் பேச்சுக்குக் கட்டுப்படுகிறது. இவன் மட்டும் அதில் குறுக்குசால் ஓட்டினால் எப்படி....?" என்று நொந்துகொண்டார்.

சொத்துக்களே இல்லாமல் இருந்திருந்தால் ஒருவேளை சொந்தங்கள் நிலைத்திருக்கும். ஆனால், வாழ்க்கைப் போராட்டத்தில் எதையும் எதிர்பார்க்காமல் வாழ முடிகிறதா என்ன...?

பெரியவர் மீது கோபம், பெரியவருக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் ஊரார் மீது கோபம், எல்லாமும் சேர்ந்து கோவில் திருவிழாவில் வந்து முடிந்தது.

திருவிழா நடத்துவதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் விதிக்கப்பட்ட வரியைக் கட்ட மறுத்தார் சின்னவர். அவராகத் தேடித் தேடி, ஓடி வந்து தன் தரப்பு நியாயங்களைச் சொல்லும்போது கண்டு கொள்ளாத ஊரார், இப்போது தாமாகவே ஒவ்வொருவராக அவரைத் தேடி வந்து உபதேசங்களைப் பொழிந்தனர்.

"உங்க குடும்ப பிரச்னையைப் போயி ஊர்ப் பொதுக் காரியத்திலா காட்டறது...? அதிலும் அம்மன் கோவில் திருவிழா... இதிலே போயி தகராறு பண்றது நல்லதில்லே...!" வந்தவர்கள் எல்லோரும் இப்படித்தான் ஆரம்பிப்பார்கள்.

"நான் எங்கே தகராறு பண்றேன்...? எங்கிட்டே எதுவுமே இல்லையே...? அதான் வரி தர முடியலை... போயி, 'இருக்றவன்'கிட்டே வரி வாங்கி கோவில் காரியங்களைப் பாருங்க...!" என்று சின்னவர் ஒரேயடியாக அலுத்துக் கொள்வார்.

சின்னவர் தன் அண்ணனைக் குறிவைத்தே இப்படியெல்லாம் பேசுகிறார் என்பதும், பெரியவர் தலைமையில்தான் திருவிழா நடக்க இருக்கிறது என்பதால் சின்னவரிடம் எவ்வளவு பேசினாலும் வரி கொடுக்க மாட்டார் என்பதும் ஊரார் எல்லோருக்குமே தெளிவாகத் தெரிந்தது. வேறு வழியில்லாமல், சின்னவர் வீட்டுத் திண்ணையைக் காலி செய்தனர் அவர்கள்.

அன்றிலிருந்து ஊர்க் கட்டுமானத்திற்கு ஆளானார் சின்னவர். அவர் வீட்டு முன்னால் தீபாரதனைக்காக உற்சவ மூர்த்தி சிலைகள் நிற்காமல் போயின. கோவிலுக்குள் நுழையவும் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது.

சின்னவர், இந்த நிலையை எதிர்பார்த்தோ என்னவோ அன்றுமுதல் கோவிலுக்குப் போவதையே விட்டொழித்தார். அதற்காக பக்தி இல்லாதவர் என்று அர்த்தமில்லை. எல்லாம் மனசுக்குள் இருந்தது. ஆனாலும் 'கடவுளுக்குக் கூட கண்ணில்லையே' என்கிற வருத்தமும் அதிகமாக இருந்தது. ஊராரிடம் பேசுவதுகூட குறைந்து போயிற்று...! தன் பாட்டுக்குத் தனி வழியில் நடந்துகொண்டிருந்தார் அவர்.

எப்போதோ இந்த உறவுக் கூட்டத்தையும் ஊராரையும் தலை முழுகிவிட்டு ஒரு நாடோடியாக எங்காவது போயிருப்பார். ஆனால், தாயில்லாத தன் பெண்ணை எண்ணியே தன் வெறுப்பையும் - கோபத்தையும் குறைத்துக் கொண்டு அந்த ஊரில் வாழ்ந்து வந்தார் அவர். ஆனால், அவர் பெண்ணுக்கு எந்த வரனும் வந்து வாய்க்காமல் அவரின் ஒரே ஆசையிலும் மண் விழுந்தது. பெண்ணின் திருமணம் என்பது, நாளுக்கு நாள் அவரின் நெஞ்சை உறுத்தும் நிகழ்வாகவே இருந்தது.

தன் பெண்ணை 'எப்படியாவது' கரையேற்றிவிட அவர் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகிப் போயின. நாளுக்கு நாள் அவரின் கவலைகளும் மனத்துன்பங்களும் அதிகமாகிக் கொண்டே இருந்தன. தன் கவலைகளை மட்டுமே தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு பெண்ணைக் 'கரையேற்றாமலே' போய்ச் சேர்ந்து விட்டார்.

> **"இந்தியாவை சிங்கப்பூரா மாற்றிக் காட்டுறேன்னு சொன்னீங்களே...?"**
>
> **"பெயர் மாற்றத்துக்கு எதிர்க்கட்சிக்காரங்க ஒத்துக்க மாட்றாங்களே...!"**
>
> **— சீர்காழி ரேவதி**

சேதி சொன்னவன் பெரியவரின் பதிலை எதிர்பார்த்து கைகட்டிநின்று கொண்டிருந்தான். சுற்றி இருந்தவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த போதும், பெரியவரின் நெடிய மௌனத்தைக் கண்டபோதும் அவனுக்குக்கூட நம்பிக்கை தளர்ந்து கொண்டிருந்தது.

"அந்தப் பொண்ணு பாவங்க...! என்ன செய்யறது...? ஏது செய்யறதுன்னுகூட தெரியாம தவிக்குது. பெரியவங்க சண்டையிலே அந்தப் பொண்ணு என்னங்க செய்ய முடியும்...? நான் பேசறது தப்பா இருந்தா என்னை மன்னிச்சிடுங்க...!"

ஊர்ப் பெரிய மனிதர்(?)களிடம் வராத சிந்தனையும் பேச்சும் அவனிடம் இருந்து வெளிப்பட்டன.

"...அங்க பொணத்துக்கிட்டே அந்தப்


பொண்ணைத் தவிர வேற யாருமே இல்லைங்க...! என்னையும், வெட்டியானையும் கூப்பிடக் கூட அதுக்கு ஆளில்லைங்க...! என்னதான் ஊர்க் கட்டுமானமா இருந்தாலும், இந்த மாதிரி நேரத்திலே நானும் வெட்டியானும் அதையெல்லாம் பார்க்க முடியுங்களா...? நான் வரேனுங்க...!"

அவன் கையெடுத்துக் கும்பிட்டு விட்டுச் சென்றான்.

பெரியவர் இன்னும்கூட மௌனமாகத்தான் இருந்தார்.

அவனின் குரல் அவரைக் கொஞ்சம் அசைத்துப் பார்த்தது.

"செத்துப் போனவன் தம்பிதான். செத்துப் போகும் அந்த நிமிஷம் வரைதன் எதிரி. இருந்தாலும் இப்போது அவன் தம்பியா...? எதிரியா? இரண்டும் இல்லை... 'பிணம்' என்று சொல்லி விட்டுப் போகிறானே இவன்...! அந்தப் பிணமா என்னோட எதிரி...? அந்தப் பிணமா என்னிடம் இவ்வளவு காலமாகப் பகைமை பாராட்டியது...?



பெரியவர் குழப்பத்தில் ஆழ்ந்துபோயிருந்தார்.

"பெரியவங்க சண்டையிலே பொண்ணு என்னங்க பண்ணும்...? பொணத்துகிட்டே அந்தப் பொண்ணு மட்டும்தான் இருக்கு. வேற யாரும் இல்லைங்க....!' அவன் குரல் அவருக்கு எதையோ உணர்த்துவதைப் போல இருந்தது.

"ஆமாம்... தம்பிதானே நம் எதிரி...! அவன் பெண்ணுமா...?"

அந்தப் பெண்ணின் முகம் அவரின் மனத்திரையில் இலேசாக எட்டிப் பார்த்தது!

பெரியவர் எழுந்தார்.

யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. பேசவும் இல்லை...! மடமடவென நடந்தார். தன் தம்பியின் வீட்டை நோக்கி!

ஊரார், அவரை உணர்ந்து கொண்டதைப் போல அவரின் பின்னால் அணிவகுத்தனர்.

"பெரியப்பா...!"

'தம்பி மகள்' ஓடிவந்து அவரைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

பெரியவர், அவளை ஆறுதலாக அணைத்த வாறே மெல்ல நடந்தார். வீட்டின் கூடத்தில் அமைதியாக 'படுத்துக்கிடந்த' தம்பியைப் பார்த்தார். கண்கள் மூடி, ஒரு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப் போல காட்சி தந்தார் சின்னவர்.

யார் துணையும் இல்லாமல், யாரையும் லட்சியம் செய்யாமல், யாருக்கும் கட்டுப்படாமல் அவன் வாழ்க்கை முடிந்து போயிற்று. ஊரையும் உறவையும் வென்று விட்டதாக அவன் நினைத்திருப்பானோ...? இல்லாவிட்டால் அவனின் முகத்தில் இத்தனை அமைதி இருக்குமா...?

பெரியவர் தன் தம்பியையே பார்த்துக் கொண்டிருந்தார். மூண்ட பகையில் தன்னைக் கடைசிவரை வெல்ல முடியாமல் சாய்ந்து விட்ட அவனைப் பார்த்து அவர் என்ன நினைத்தாரோ...

"கடைசிவரை நம்மிடம் சேராமலே போய்ச் சேர்ந்துவிட்டான் அவன். வென்றது அவனா...? நானா...?

நான் இருக்கும்போதே, அவன் போய்ச் சேர்ந்ததுதான், அவன் எனக்குக் கொடுத்த தண்டனையா...?"

அவருக்குப் புரியவில்லை.

தம்பி மகள் இதோ ஆதரவு தேடி ஆறுதல் தேடி... உறவைத் தேடி அழுது கொண்டிருக்கிறாள். தந்தையின் இழப்புக்குப் பின்னால் பழைய உறவுகளைப் புதுப்பித்துக் கொண்ட, இந்த தளிர்க்கொடிக்கு, இவளின் தந்தையின் சோகங்கள் தெரியுமா...?

பெரியவருக்கு ஏனோ கொஞ்சம் பயம் வந்தது... சமாளித்துக்கொண்டார்.

"டேய் யாரங்கே...?"

"அய்யா...!" இரண்டு குரல்கள் கேட்டன.

"போய்ப் பெரிய ரோசாப்பூ மாலை ஒண்ணு வாங்கிட்டு வா...! ஒருத்தன் போயி ஐஸ் கட்டிங்க வாங்கிட்டு வரட்டும்! முத்துசாமியைக் கூப்பிடு உறவுமுறைக்காரங்களுக்குச் 'சேதி' சொல்லி அனுப்பணும்!"

பெரியவரிடம் இருந்து உத்தரவுகள் சரமாரியாக வந்தன.

ஊரார் ஒவ்வொருவராக அந்த வீட்டின் முன்னால் வந்து சேர்ந்தனர். பெரியவருக்குக் கட்டுப்பட்டுத்தான் இதே ஊரார் சின்னவரை இவ்வளவு காலமாகப் புறக்கணித்தனர். இப்போதும் அதே பெரியவருக்காகத்தான் சின்னவரை 'வழியனுப்ப' வந்திருக்கின்றனர்.

பயமும் கவலையும் பெரியவரை ஒரு சேர சூழ்ந்தன.

அவர் 'ஓ'வென குரல் விட்டு அழுதார்.

"தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும் பாங்களே... இதோ தம்பியின் இழப்பை எண்ணி பெரியவர் அழுவதைப் பாருங்கள்...!" என்று ஊரார் கிசுகிசுத்துக் கொண்டனர்.

பெரியவர் இன்னமும் அழுதுகொண்டு தான் இருக்கிறார்! ○





சிவகாமியின் சபதம்

இருபத்து ஒன்பதாம் அத்தியாயம்

வழித் துணை

குதிரையைத் திருப்பி விட்டுக்கொண்டு பரஞ்சோதி பின்னால் வந்த குதிரையண்டை சென்றபோது அவன் மனத்தில் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த பீதியெல்லாம் கோபமாக மாறியிருந்தது. அந்தக் குதிரை மேல் வந்தவனுடைய மார்பில் பாய்ச்சுவதற்குச் சித்தமாக அவனுடைய வலது கையானது வேலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால், பரஞ்சோதி அருகில் நெருங்கியதும் அந்தக் குதிரை மீது வந்த மனிதன் செய்த காரியங்கள் வேலுக்கு வேலை இல்லாமல் செய்துவிட்டன!

அமரர் கல்கி

ஆஜானுபாகுவாய் முகத்தில் பெரிய மீசையுடனும் தலையில் பெரிய முண்டாசுடனும் விளங்கிய அந்த திடகாத்திர மனிதன், பரஞ்சோதி தன் அருகில் வந்ததும், ''ஐயையோ! ஐயையோ! பிசாசு! பிசாசு!'' என்று அலறிக்கொண்டு குதிரை மீதிருந்து நழுவித் 'தொபுகடீ'ரென்று கீழே விழுந்தான். அதைப் பார்த்த பரஞ்சோதிக்குப் பயம், கோபம் எல்லாம் பறந்து போய்ப் பீறிக்கொண்டு சிரிப்பு வந்தது. கீழே விழுந்தவன் போர்க்கோலம் பூண்ட வீரன் என்பதையும், அவனுடைய இடையில் கட்டித் தொங்கிய பெரிய வாளையும் பார்த்ததும் பரஞ்சோதி 'கலகல' வென்று சிரிக்கத் தொடங்

கினான். பேய் பிசாசுக்குப் பயந்தவன் தான் ஒருவன் மட்டும் அல்ல என்பதை நினைத்தபோது அவனுக்கு ஒரு வகையான திருப்தி உண்டாயிற்று.

கீழே விழுந்த மனிதன் மீண்டும், "ஐயையோ! பிசாசு சிரிக்கிறதே! பயமாயிருக்கிறதே!" என்று அலறினான். அந்த வேடிக்கையை இன்னும் கொஞ்சம் அனுபவிக்க விரும்பிய பரஞ்சோதி, குதிரை மேலிருந்தபடியே வேலை நீட்டிக் கீழே கிடந்தவனுடைய கையில் இலேசாகக் குத்தியவண்ணம், பிசாசு பேசுவது போல் தானாகக் கற்பனை செய்துகொண்ட அடித்தொண்டைக் குரலில்,

"அடே! உன்னை விடமாட்டேன்! விழுங்கிவிடுவேன்!" என்றான்.

அதற்கு அடுத்த கணத்தில் பரஞ்சோதி சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்று நடந்தது. அது என்னவென்பதையே அச்சமயம் அவனால் நன்கு தெரிந்துகொள்ளக்கூட முடியவில்லை. ஒருகணம் அவன் தலை கீழாகப் பாதாளத்தில் விழுவது போலிருந்தது. உடனே அவன் தலையின் மேல் ஆயிரம் இடி சேர்ந்தாற்போல் விழுந்தது! அடுத்தபடியாக அவனுடைய மார்பின்மேல் விந்திய பர்வதம் வந்து உட்காருவதுபோல் தோன்றியது. பிறகு ஒரு பிரம்மாண்டமான பூதம், 'ஹா ஹா ஹா' என்று பயங்கரமான பேய்க் குரலில் சிரித்துக்கொண்டு அவனுடைய தோள்களைப் பிடித்துப் பலமாகக் குலுக்கியது.

சற்று நிதானித்து, மனத்தைத் தெளிவு படுத்திக்கொண்டு சிந்தித்த பிறகுதான் பரஞ்சோதிக்கு நடந்தது என்னவென்பது புலனாயிற்று.

பரஞ்சோதி தன்னுடைய வேலின் நுனியினால் கீழே கிடந்தவனுடைய கையை இலேசாகக் குத்தி, "விழுங்கிவிடுவேன்!" என்று கத்தியவுடனே, அந்த மனிதன் பரஞ்சோதியின் வேலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஓர் இழுப்பு இழுத்தான். அவ்வளவுதான். பரஞ்சோதி குதிரை மேலிருந்து தடாலென்று தலை குப்புறக் கீழே விழுந்தான். உடனே, அந்த மனிதன் மின்னலைப் போல் பாய்ந்து வந்து பரஞ்சோதியின் மார்பின்மேல் உட்கார்ந்துகொண்டு, அவனுடைய தோள்களைப் பிடித்துக் குலுக்கினான். அதோடு "ஹா ஹா ஹா! நீ பிசாசு இல்லை, மனுஷன்தான்! பிசாசு மாதிரி கத்தி என்னைப் பயமுறுத்தப் பார்த்தாயல்லவா? நல்ல வேடிக்கை! ஹா ஹா ஹா" என்று உரத்த குரலில் சிரித்துக்கொண்டே கூவினான். பின்னர், பரஞ்சோதியின் மார்பின் மேலிருந்து எழுந்து நின்று பரஞ்சோதியையும் தரையிலிருந்து தூக்கி நிறுத்தி, "தம்பி! இந்த மயான பூமியில் ஒண்டியாகப் போக வேண்டுமே என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாய் வழித்துணைக்குக் கிடைத்தாய். நீ எங்கே போகிறாய், தம்பி?" என்று ரொம்பவும் பழக்கமானவனைப் போல் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு சல்லாபமாகக் கேட்டான்.

பரஞ்சோதி சற்று முன் நடந்த சம்பவங்களினால் பெரிதும் அதிர்ச்சியடைந்திருந்தான். ஒரு பக்கம் அவன் உள்ளத்தில் கோபம் பொங்கிக்கொண்டிருந்தது. அவமானம் ஒரு பக்கம் பிடுங்கித் தின்றது. தன்னை இப்படியெல்லாம் கதிகலங்க அடித்தவன் சாமானியப்பட்டவன் அல்ல; மகா பலசாலியான வீர புருஷன் என்பதை அவன் உணர்ந்திருந்தான். இதனால் அம்மனிதன் பேரில் ஒருவித மரியாதையும் அவன் மனத்தில் ஏற்பட்டிருந்தது.

ஆனால், "எந்த ஊருக்குப் போகிறாய், தம்பி?" என்று அந்த ஆள் கேட்

டதும், புத்த பிக்ஷு செய்திருந்த எச்சரிக்கைகள் ஞாபகத்துக்கு வந்தன. தன் தோள் மேலிருந்த அவனுடைய கைகளை உதறித் தள்ளிவிட்டு, ''நான் எந்த ஊருக்குப் போனால் உனக்கு என்ன?'' என்று வெறுப்பான குரலில் கேட்டான் பரஞ்சோதி.

''எனக்கு ஒன்றுமில்லை, அப்பா! ஒன்றுமே இல்லை. இன்று ராத்திரி வழித்துணைக்கு நீ கிடைத்தாயே, அதுவே போதும். ஏதோ இரகசியக் காரியமாய்ப் போகிறாயாக்கும். ஆனால்...''

இப்படிச் சொல்லி நிறுத்தி, அந்த வீரன் பரஞ்சோதியைச் சற்றுக் கவனமாக உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையின் கருத்தை உணர்ந்து கொள்வதற்குள்ளே, மறுபடியும் அவன் தரையிலே விழும்படி நேர்ந்தது. ஒரே நொடியில் அவ்வீரன் பரஞ்சோதியைக் கீழே தள்ளியதுமல்லாமல், தரையில் அவன் அருகில் உட்கார்ந்து கழுத்தை நெரித்துப் பிடித்துக்கொண்டான்.

''நீ வாதாபி ஒற்றனா, இல்லையா? சத்தியமாய்ச் சொல்'' என்று கடுமை நிறைந்த குரலில் கேட்டான்.

பரஞ்சோதிக்குக் கோபத்தினாலும் வெட்கத்தினாலும் கண்களில் ஜலம் வரும் போலிருந்தது. அவன் விம்முகிற குரலில், ''நீர் சுத்த வீரனாக இருந்தால் என்னோடு எதிருக்கெதிர் நின்று வாளோ வேலோ எடுத்துச் சண்டை செய்யும்...'' என்றான்.

''உன்னோடு சண்டை போட வேண்டுமா? எதற்காக அப்பனே? நீ வாதாபி ஒற்றனாயிருக்கும் பட்சத்தில் உன்னை இப்படியே யமனுலகம் அனுப்புவேன். நீ ஒற்றனில்லையென்றால் உன்னோடு சண்டை போடுவானேன்? நாம் இருவரும் சிநேகிதர்களாயிருக்கலாம். நீ ஒற்றனில்லை என்பதை மட்டும் நிரூபித்து விடு. இதோ, இம்மாதிரி ரிஷப இலச்சினை உன்னிடம் இருக்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே அவ்வீரன் இடது கையினால் தன் மடியிலிருந்து வட்ட வடிவமான ஒரு செப்புத் தகட்டை





எடுத்துக்காட்டினான். பல்லவ சாம்ராஜ்யத்தில் பிரயாண அனுமதி பெற்ற இராஜ தூதர்களுக்கு அடையாளமாகக் கொடுக்கும் ரிஷப முத்திரை பதித்த தகடு அது.

பரஞ்சோதி வேண்டா வெறுப்புடன் தன் மடியிலிருந்த மேற்படி முத்திரைத் தகட்டை எடுத்துக் காட்டியதும், அவ்வீரன் பரஞ்சோதியின் கழுத்தை விட்டதோடல்லாமல், அவனைத் தூக்கி நிறுத்தி ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்துகொண்டு, "தம்பி! என்னை மன்னித்துவிடு! உன் முகக் களையைப் பார்த்தாலே சொல்லுகிறது. நீ சத்ருவின் ஒற்றனாயிருக்க முடியாதென்று. இருந்தாலும், இந்த யுத்த காலத்தில் யாரையும் நம்பி எந்தக் காரியமும் செய்வதற்கில்லை. நல்லது, குதிரை மேல் ஏறிக் கொள், பேசிக்கொண்டே போகலாம்!" என்று கூறி அவ்வீரன் தன் குதிரையண்டை சென்று அதன்மேல் வெகு லாகவமாய்த் தாவி ஏறிக்கொண்டான்.

பரஞ்சோதி தனக்குள், 'இவனுடன் பேச்சு என்ன வேண்டிக் கிடந்தது? இந்த மலைப்பாதையைத் தாண்டியவுடன் இவனை ஒரு கை பார்த்து இவனுக்குப் புத்தி கற்பிக்காமல் விடக்கூடாது' என்று எண்ணிக் கொண்டே தன் குதிரை மீது ஏறிக் கொண்டான்.

மாலை மங்கி இருளாகக் கனிந்து கொண்டிருந்த முன்னிரவு நேரத்தில், வானமெல்லாம் வைரச் சுடர்களென மின்னத் தொடங்கியிருந்த நட்சத்திரங்களின் இலேசான வெளிச்சத்தில் இரு குதிரைகளும் சேர்ந்தாற்போல் போகத் தொடங்கின.



முப்பதாம் அத்தியாயம்

மயூரசன்மன்

அந்தக் காட்டுமலைப் பாதையில் சற்று நேரம் குதிரைகள் மெதுவாகக் காலடி வைக்கும் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் எதுவும் கேட்கவில்லை.

பிரயாணிகள் இருவரும் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

பரஞ்சோதியின் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. பெரிய மீசையுடனும், பிரம்மாண்டமான தலைப்பாகையுடனும் தன் பக்கத்தில் குதிரைமீது வரும் மனிதன் யாராயிருக்கும்? அவன் போர் முறைகளில் கை தேர்ந்த மகாவீரன் என்பதில் சந்தேகமில்லை. சற்று நேரத்துக்குள் தன்னை என்ன பாடு படுத்தி வைத்து விட்டான்? சடக்கென்று குதிரை மேலிருந்து தன்னை அவன் இழுத்துக் கீழே தள்ளியதையும், மார்பின் மேல் ஒரு கண நேரம் மலைபோல் உட்கார்ந்திருந்ததையும், மறுபடியும் தான் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று கீழே தள்ளி இரும்புக் கையினால் தன் கழுத்தைப் பிடித்து நெரித்ததையும் நினைக்க நினைக்கப் பரஞ்சோதிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கின. அதேசமயத்தில் மேற்கூறிய செயல்களில் அந்த வீரன் காட்டிய லாகவமும் திறமும் சாமர்த்தியமும் அந்த வீரனிடம் பயபக்தியை உண்டு பண்ணின. ஆஹா! இப்படிப்பட்ட ஒரு மகாவீரனுடைய சிநேகம் தனக்கு நிரந்தரமாகக் கிடைக்குமானால் அது எப்பேர்ப்பட்ட பாக்கியமாயிருக்கும்?

திருச்செங்காட்டங்குடியிலிருந்து காஞ்சிக்கு வந்தபோது வழியில் சிநேகமான புத்த பிக்ஷுவுக்கும் இந்த வீரனுக்கும் எவ்வளவு வித்தியாசம்? பிக்ஷு எவ்வளவோ தன்னிடம் அன்பாகப் பேசியிருந்தும், எவ்வளவோ ஒத்தாசை செய்திருந்தும் அவரிடம் தனக்கு ஏற்படாத பக்தியும் வாத்ஸல்யமும் தன்னைக் கீழே தள்ளி மேலே உட்கார்ந்த இந்த மனிதனிடம் உண்டாகக் காரணம் என்ன?

அதேசமயத்தில், அவன் கிளம்பும் போது புத்த பிக்ஷு கூறிய எச்சரிக்கை மொழிகளும் நினைவுக்கு வந்தன. "வழியில் சந்திக்கும் யாரையும் நம்பாதே! சத்ருவாக நடித்தாலும் மித்திரனாக நடித்தாலும் நீ போகுமிடத்தையாவது ஓலை கொண்டு போகும் விஷயத்தையாவது சொல்லி விடாதே! அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்துகொள்ள ஆசை கொண்டவர்கள் ஆயனரைத் தவிர இன்னும் எவ்வளவோ பேர் உண்டு. அதற்காக அவர்கள் உயிர்க் கொலை செய்யவும் பின்வாங்க மாட்டார்கள். எனவே நீ போகும் காரியம் இன்னதென்பதைப் பரம இரகசியமாக வைத்துக் காப்பாற்ற வேண்டும். அதை உன்னிடமிருந்து தெரிந்து கொள்வதற்குப் பலர் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்யலாம். அதிலெல்லாம் நீ ஏமாந்து விடக்கூடாது..."

இவ்விதம் புத்த பிக்ஷு கூறியதைப் பரஞ்சோதி நினைவு கூர்ந்து ஒருவேளை தன் அருகில் இப்போது வந்துகொண்டிருப்பவன் அத்தகைய சூழ்ச்சிக்காரர்களில் ஒருவன்தானோ, தன்னைக் குதிரையிலிருந்து கீழே இழுத்துத் தள்ளி படாதபாடு படுத்தியதெல்லாம் ஒரு வேளை பிக்ஷுவின் ஓலையைக் கவர்வதற்காகச் செய்த பிரயத்தனமோ என்று எண்ணமிட்டான். ஓலை தன் இடைக் கச்சுடன் பத்திரமாய்க் கட்டப்பட்டிருப்பதைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்துகொண்டு, அதைத் தன்



ளிடமிருந்து கைப்பற்றுவது எளிதில்லை என்று உணர்ந்து தைரியமடைந்தான்.

அப்போது சற்றுத் தூரத்தில் ஒரு நரி சோகமும் பயங்கரமும் நிறைந்த குரலில் ஊளையிடும் சத்தம் கேட்டது. அடுத்த நிமிஷத்தில் முறை வைப்பது போல் அநேக நரிகள்

சேர்ந்தாற்போல் ஊளையிடும் சத்தம் கேட்கத் தொடங்கியபோது, பரஞ்சோதிக்கு ரோமம் சிலிர்த்துத் தேகமெல்லாம் வியர்த்தது. ஒரு கூட்டம் நரிகளின் ஊளை நின்றதும், இன்னொரு கூட்டம் ஊளையிட ஆரம்பிக்கும். இவ்விதம் நரிகள் கூட்டங் கூட்டமாக முறை வைத்து ஊளையிடும் சத்தமும், அந்த ஊளைச் சத்தமானது குன்றுகளில் மோதிப் பிரதிபலித்த எதிரொலியுமாகச் சேர்ந்து அந்தப் பிரதேசத்தையெல்லாம் விவரிக்க முடியாதபடி பயங்கரம் நிறைந்ததாகச் செய்தன.

இத்தனை நேரமும் மௌனமாய் வந்த வீரன், "தம்பி! இப்பேர்ப்பட்ட காட்டு வழியில் முன்னிருட்டு நேரத்தில் தன்னந்தனியாக நீ புறப்பட்டு வந்தாயே, உன்னுடைய தைரியம்! என் நாளில் எத்தனையோ தடவை நான் தனி வழியே பிரயாணம் செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட எனக்கே இந்தப் பிரதேசத்தில் சற்று முன்னால் கதி கலக்கம் உண்டாகிவிட்டது!" என்றான்.

அப்போது பரஞ்சோதி சிறிது தயக்கத்துடன், "ஐயா! என்னைக் கண்டதும் தாங்கள் 'பிசாசு! பிசாசு!' என்று அலறிக்கொண்டு குதிரை மேலிருந்து விழுந்தீர்களே? அது ஏன்? உண்மையாகவே பயப்பட்டீர்களா? அல்லது என்னைக் கீழே தள்ளுவதற்காக அப்படிப் பாசாங்கு செய்தீர்களா? சற்று முன்னால் அப்படி அலறி விழுந்தவர், இப்போது கொஞ்சம்கூடப் பயப்படுவதாகத் தெரியவில்லையே!" என்றான்.

"ஆஹா! அது தெரியாதா உனக்கு? ஒருவன் தனி மனிதனாயிருக்கும் வரையில் ஒரு பிசாசுக்குக்கூட ஈடு கொடுக்க முடியாது. தனி மனிதனைப் பிசாசு அறைந்து கொன்றுவிடும். ஆனால், இரண்டு மனிதர்கள் சேர்ந்துவிட்டால், இருநூறு பிசாசுகளை விரட்டியடித்து விடலாம்! இந்த மலைப் பிரதேசத்தில் இருநூறாயிரம் பிசாசுகள் இரா வேளைகளில் "ஹோ ஹா!" என்று அலறிக் கொண்டு அலைவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவு பிசாசுகளும் சேர்ந்து வந்தாலும் இரண்டு மனிதர்களை ஒன்றும் செய்ய முடியாது! தம்பி! இந்தப் பிரதேசத்தைப் பற்றிய கதை உனக்குத் தெரியுமா?" என்று குதிரை வீரன் கேட்டான்.

"தெரியாது; சொல்லுங்கள்!" என்றான் பரஞ்சோதி.

அதன்மேல் அந்த வீரன் சொல்லிய வரலாறு பின்வருமாறு:

ஏறக்குறைய இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் வட தேசத்திலிருந்து வீரசன்மன் என்னும் பிராம்மணன் தன் சீடனாகிய மயூரசன்மன் என்னும் சிறுவனுடன் காஞ்சிமா நகருக்கு வந்தான். அவ்விருமே ஏற்கெனவே வேத சாஸ்திரங்களில் மிக்க பாண்டியத்தியம் உள்ளவர்கள். ஆயினும் காஞ்சிமா நகரின் ஸம்ஸ்கிருத கடிகை (சர்வகலாசாலை)யைச் சேர்ந்த மகா பண்டிதர்களால் ஒருவருடைய பாண்டியத்தியம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகுதான் அந்தக் காலத்தில் வித்தை பூர்த்தியானதாகக் கருதப்பட்டது. அதற்காகவே வீரசன்மனும் மயூரசன்மனும் காஞ்சிக்கு வந்தார்கள். ஒருநாள் அவர்கள் காஞ்சியின் இராஜ வீதி ஒன்றில் போய்க் கொண்டிருந்தபோது, பல்லவ மன்னனின் குதிரை வீரர்கள் சிலர் எதிர்ப்பட்டார்கள். வீதியில் நடந்தவண்ணம் ஏதோ ஒரு முக்கியமான சர்ச்சையில் ஈடுபட்டிருந்த குருவும் சிஷ்யனும் குதிரை வீரர்களுக்கு இடங்கொடுத்து விலகிக் கொள்ளவில்லை. இதனால் கோபங் கொண்ட குதிரை வீரன் ஒருவன் குதிரை மேலிருந்தபடியே வீரசன்மனைக் காலால் உதைத்துத் தள்ளினான். குருவுக்கு இத்தகைய அவமானம் நேர்ந்ததைக் கண்டு சகியாத சிஷ்யன் அந்த வீரன் கையிலிருந்த வாளைப் பிடுங்கி வீசவே அவன் வெட்டுப் பட்டுக் கீழே விழுந்தான். மற்றக் குதிரை வீரர்கள் மயூரசன்மனைப் பிடிக்க வந்தார்கள். அவர்களிடம் அகப்பட்டால் தன் உயிருக்கு ஆபத்து நேரும் என்பதை



அறிந்த மயூரசன்மன், கையில் பிடித்த வாளுடன் கீழே விழுந்த வீரனின் குதிரை மீது 'தாவி ஏறித் தன்னைப் பிடிக்க வந்தவர்களையெல்லாம் வீராவேசத்துடன் வெட்டி வீழ்த்திக் கொண்டு காஞ்சி நகரை விட்டு வெளி யேறினான்.

பல்லவ ராஜ்யத்துக்கே அவமானம் விளைவிக்கத்தக்க இந்தக் காரியத்தைக் கேட்டு, மயூரசன்மனைக் கைப்பற்றி வருவதற்காக இன்னும் பல குதிரை வீரர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால், அவர்களிடம் அவன் அகப்படவில்லை. கடைசியில், மயூரசன்மன் கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள ஸ்ரீபர்வதத்தை அடைந்து, அங்கேயுள்ள அடர்ந்த காட்டில் சிறிது காலம் பல்லவ வீரர்களுக்குப் பயந்து ஒளிந்து வாழ்ந்தான். பின்னர், அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மலைச் சாதியரைக் கொண்டு ஒரு பெரிய சைனியத்தைத் திரட்டியது மல்லாமல் அங்கே சுதந்திர ராஜ்யத்தையும் ஸ்தாபித்தான். பின்னர், அந்தப் பெரிய சைனியத்துடனே, காஞ்சியில் தன் குருவுக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்கவும் பொருட்டுப் புறப்பட்டு வந்தான். மயூரசன்மனின் சைனியமும் காஞ்சிப் பல்லவ சைனியமும் இந்த மலைக்காட்டுப் பிரதேசத்திலேதான் சந்தித்தன. ஏழு நாள் இடைவிடாமல் யுத்தம் நடந்தது. ஆயிரக்கணக்கான வீரர்கள் போரில் மாண்டார்கள். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி மலைப் பிரதேசத்தையெல்லாம் நனைத்தது.

அப்படி இரத்த வெள்ளம் ஓடிய இடத்திலேதான் சில காலத்துக்குப் பிறகு இந்தப் புரசங்காடு முளைத்தது. மேற்சொன்ன பயங்கர யுத்தம் நடந்த அதே பங்குனி மாதத்தில் ஒவ்வொரு வருஷமும் புரச மரங்களின் இலை உதிர்ந்து இரத்தச் சிவப்பு நிறமுள்ள பூக்கள் புஷ்பிக்கின்றன. அந்தப் போரில் இறந்த ஆயிரக்கணக்கான வீரர்களின் ஆவிகள் இன்னமும் இங்கே உலாவிக் கொண்டிருப்பதாக அக்கம் பக்கத்துக் கிராம ஜனங்கள் நம்புகிறார்கள். ஆவிக் குதிரைகளின் மீதேறிய ஆவி வீரர்கள் வாள்களையும் வேல்களையும் ஏந்தி 'ஹா ஹா' என்று கூவிக்கொண்டு இந்த நிர்ஜனப் பிரதேசத்தில் அலைவதாகவும், யாராவது பிரயாணிகள் இரவு வேளையில் தனி வழியே வந்தால் அவர்களைக் கொன்று இரத்தத்தைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்வதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இப்படி வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த பரஞ்சோதிக்குக் கொஞ்சம் நஞ்சம் பாக்கியிருந்த பயமும் போய்விட்டது. அங்கே ஆவிகள் அலைவது பற்றிய கதையெல்லாம் வெறும் மூடநம்பிக்கை என்ற உறுதி ஏற்பட்டது. "என்னைக் கண்டதும் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் செத்துப் போன வீரனின் பிசாசு தான் வந்துவிட்டதென்று நினைத்து அப்படி உளறி அடித்துக் கொண்டு விழுந்தீரோ?" என்று கூறி நகைத்தான்.

"இரத்தமும் சதையுமுள்ள மனிதனோடு நான் சண்டை போடுவேன். வில் போர், வாள் போர், வேல் போர், மல்யுத்தம் எது வேண்டுமானாலும் செய்வேன். ஆனால், ஆவிகளோடு யார் போரிட முடியும்?" என்று அவ்வீரன் சிறிது கடுமையான குரலில் கூறவே பரஞ்சோதி பேச்சை மாற்ற எண்ணி, "இருக்கட்டும் ஐயா! இங்கே நடந்த யுத்தத்தின் முடிவு என்ன ஆயிற்று? யாருக்கு வெற்றி கிடைத்தது?" என்று கேட்டான்.

"மயூரசன்மனுடைய சைனியத்தைப் போல் பல்லவ சைனியம் மூன்று மடங்கு பெரியது. ஆகையால், பல்லவ சைனியம் தான் ஜெயித்தது. மயூரசன்மனை உடம்பில் முப்பத்தாறு காயங்களுடன் கைப்பற்றிப் பல்லவ மன்னன்முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்...!"

"அதன் பிறகு என்ன நடந்தது?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டான் பரஞ்சோதி.

"என்ன நடந்திருக்குமென்று நீதான் சொல்லேன் பார்க்கலாம்!" என்று அவ்வீரன் கூறிப் பரஞ்சோதியின் ஆவலை அதிகமாக்கினான்.


(தொடரும்)

காணாமல் போன கட்டுப்பாடு

● இந்திய அரசின் கணக்குப்படிப் பார்த்தால் சூரிய ஒளி சக்தியில் எரியும் லாந்தர் கை விளக்குகளை நமது நாட்டில் லட்சக்கணக்கானோர் வைத்திருக்க வேண்டும். ஆனால்? விஷயம் என்ன?

இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி துறை சூரிய ஒளி லாந்தர் விளக்கு விற்பனையில், மாநிலங்களுக்கு மானியம் தருகிறது. ஒரு விளக்குக்கு 1500 ரூபாய் மான்யம். டஜன் நிறுவனங்கள் இந்த விளக்குகளைத் தயாரிக்கின்றன. ஆனால் இந்த நிறுவனங்கள் ஐந்தாயிரம், பத்தாயிரம் என்று விளக்கு விற்பனைக்கான கோட்டாவைப் பெறுகின்றனவே தவிர, உண்மையில் விற்பதில்லையாம். கோட்டாவுக்கு ஏற்றபடி போலி வவுச்சர்களைத் தயாரித்து, கோட்டா முழுவதையும் விற்றுவிட்டது போல கணக்குக் காண்பிப்பார்களாம். அதற்கேற்றபடி மானியத் தொகையை மட்டும் அரசிடமிருந்து கறந்து விடுவார்களாம். ஆனால் உண்மையில் மக்களுக்கு விற்கும் விளக்குகள் சொற்பமே! அதிகப்படியான கோட்டாவைப் பெற நிறுவனங்களுக்கு இடையில் நடக்கும் போட்டியில் அரசியல்வாதிகளுக்குத்தான் கொண்டாட்டம்!

● சென்னை மெட்ரோபாலிடன் வளர்ச்சி குழுமத்தில் இன்னமும் தி.மு.கவினர் செல்வாக்குத்தான் என்று பொருமுகின்றனர் அ.தி.மு.க பிரமுகர்கள். தி.மு.க ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அதிகாரிகளே முக்கியமான பொறுப்புகளில் இருப்பதால், மாஜி தி.மு.க மாண்புகளுக்கு இன்னமும் மரியாதை இருக்கிறதாம். பிளான் அங்கீகாரம் செய்யும் பொறுப்பிலிருக்கும் அதிகாரிகள், பதவி உயர்வு கொடுத்தும் இடத்தை விட்டு நகராமல், அமைச்சரையே 'தண்ணி' காட்டுகிறார்களாம். இந்தத் துறைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் ஏற்கெனவே கழற்றி விடப்பட்டு, புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பொறுப்பு ஏற்றவுடன் உள்ளாட்சித் தேர்தலில் அவர் பிஸியாகிவிட்டதால், அதிகாரிகளின் ராஜ்யம்தான் கொடி கட்டிப் பறக்கிறது என்று புலம்புகின்றார்கள்.



● ஆளும் கட்சியோடு சேர்ந்து ஆடினால் சென்னை மாநகராட்சி கமிஷனர் ஆச்சார்யலு மீது சி.பி.ஐ பிடி இறுகும் என்கிறார்கள்.

காதில் விழுந்தவை

● "எங்களைப் பொறுத்த வரை, பத்திரிகைகள் பெரிது படுத்துவது போல, நாங்கள் தோல்வி அடையவில்லை" என்கிறார்கள் பா.ம.க பிரமுகர்கள். "உண்மையில் பா.ம.க.வுக்கு நகரப் பகுதிகளில் எப்போதுமே பெரிதாக செல்வாக்கு கிடையாது. கிராமப் பகுதிகளில் நிறையவே வென்றிருக்கிறோம். நகரப் பகுதிகளில் தி.மு.க கை கொடுத்திருக்கலாம்; காலை வாரிவிட்டார்கள்" என்கிறார்கள் அவர்கள். சமீபத்தில் பா.ம.க தலைவர் மணி, கலைஞரைச் சந்தித்தபோது 'தொண்டர்கள் நாங்கள் சொன்னதைக் கேட்கவில்லை' என்று வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டாராம் கலைஞர். "தி.மு.கவில் கூட கட்சி கட்டுப்பாட்டுக்குப் பஞ்சம் வந்து விட்டது என்பதுதான் உண்மை" என்கிறார் பா.ம.க தலைவர்.

— சஞ்சயன்



• மணி

பாலபாட்டு

நீயும் அனுபவித்திருப்பாய்
அவமானத்தில் முங்கி
முகம் குலைந்து போயிருப்பாய்
புஜங்கள் குறுகி
பூச்சியாய் நகர்ந்திருப்பாய்
உனக்குக் கட்டுப்படாமல்
துடித்துக் கொண்டிருக்கும்
இதயம்
முடிந்து போனதாய்
முட்டியில் முகம்புதைத்து
அந்திவரையிலும் அழுதிருப்பாய்
உன் முகக் காட்டில்
சோக மிருகம்
கட்டற்றுத் திரிந்து கொண்டிருக்கும்
எந்திரமாய்
எழுந்து போவாய்
பெருமூச்செறிவாய்

ஆயினுமென்ன?
கிண்ணத்தில் நிரம்பும் சாம்பலில்
காதல் கோட்டையா
கட்டிவிட முடியும்?
இரவின் மிச்சங்களான சாம்பல்-
துயரங்களின் அஸ்தி
கண்ணீரில் கரைத்துவிட்டுக்
கரையேறு
மூழ்கிவிடாதே...



— நா.வே. அருள்

புதுயுக யோகா — 6

ஆஸ்த்துமாவை விரட்டும் 'மக்கராசனம்' பற்றி எழுதியிருந்தேன்... எந்த ஆசனத்துக்கும் இல்லாத அளவுக்குத் தொலைபேசி விசாரிப்புகள் வந்து குவிந்த போதுதான் ஆஸ்த்துமாவால் அவதிப்படும் ஆத்மாக்களின் எண்ணிக்கை மிக அதிக அளவில் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். 'ஆஸ்துமா நோய் ஏன் ஏற்படுகிறது?' என விசாரித்து வந்திருக்கும் பல கடிதங்களுக்குப் பதிலாக இந்த வார கட்டுரை அமைகிறது.





உள்ளே வெளியே 7 விட்ர்

டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார்

ஆஸ்த்துமா ஏற்பட பல காரணங்கள். வயிற்றுப் பாகத்திலுள்ள 'வாசோமோட்டார்' நரம்பு பாகம் அதிர்ச்சியடைவது, காற்றிலுள்ள தூசி, பூக்கள், பறவைகளின் இறக்கைகளிலிருந்து வரும் தூசியினால் ஏற்படும் அலர்ஜி, பரம்பரையாக ஆஸ்த்துமா நோய் உள்ளவர்கள் சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வது போன்ற பல காரணங்கள் உள்ளன.

இந்நோய் பெரும்பாலும் ஆண்களிடையே அதிகமாகவும் பெண்களிடையே குறைவாகவும் ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு இந்நோய் வருவதற்கு, பரம்பரை, மூக்கில் சதை வளர்ச்சி, கணைச்சூடு (உடலில் உஷ்ணம்) இழுப்பு முதலியவை காரணமாகலாம்.

பொதுவாக இந்நோயை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

முதல்வகை குழந்தைகளுக்கே வரும்: அதிலும் ஆண் குழந்தைகளுக்குக் குறிப்பாக, பரம்பரையில் வருவது.

இரண்டாவது வகை நடுத்தர வயதினருக்கு வரக் கூடியது. இருபத்தைந்து வயதுக்கு மேல் பெண்களை அதிகம் பாதிக்கும். இது மழைக்காலங்களிலும், குளிர்காற்று வீசும்போது இரவிலும் அதிகமாகும். இதன் நோய்க்குறிகள் யாவும் அதிகாலை

இந்தவார யோகா மொழி

அசனம் (உணவு)பாதி
ஆசனம் பாதி

மூன்று மணி முதலே தொடங்கி, தூங்க முடியாமல் தொந்திரவு தரும்.

நாம் உண்ணும் உணவிலிருந்து வெளிப்படும் சக்தி, அதிகாலை மூன்று மணிக்கு நுரையீரலுக்கு ஊடுருவுகிறது. அதிகபட்ச இயக்கம் விடியற்காலை நான்கு மணிக்கு பெற்று, அடுத்த ஒரு மணி நேரத்தில் முழுவதுமாகக் குறைந்து பெருங்குடலை அடைகிறது. அப்போது நோய்வாய்ப்பட்டு பலவீனமடைந்துள்ள நுரையீரல் அச்சக்தியைத் தாங்க முடியாமல் திணறுகிறது. சளி தொண்டையை அடைத்துக் கொள்வதால், மூச்சு விடவே சிரமமாகிவிடும். இழுப்பும் இருமலும் அதிகமாகி அவதிப்படுவர்.

மனித இயக்கத்துக்கே மிக முக்கியமானது நுரையீரல்கள்தான்! தேவையான ஆக்ஸிஜனை சுவாசிப்பதற்கு ஏற்ற வகையில், இதயத்தின் தசைகள் சுருங்கி விரிய, மார்பு எலும்புகள் ஒத்துழைக்கின்றன. நுரையீரலின் பைகளில் சென்ற காற்று, பிராண வாயுவைக் கொடுத்துவிட்டு, கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு வெளியேறுகிறது. ஒரு மனிதன் சுவாசிக்கும் போது ஏழு லிட்டர் காற்று உள்ளே போய் ஏழு லிட்டர் காற்று வெளியே வர வேண்டும். ஆனால் ஏழு லிட்டர் காற்றை உள் இழுத்துவிட்டு, இரண்டு அல்லது மூன்று லிட்டர் காற்றை மட்டும் வெளியேற்றினால் மீண்டும் பழைய அளவில் வெளிக் காற்றை உள்ளிழுக்க முடியாது. இதனால் மூச்சுத் திணறல் ஏற்படுகிறது.

உள்ளே இருக்கும் ஐந்து லிட்டர் காற்று வெளியேற முயற்சி செய்யும்போது இருமல் ஏற்படுகிறது. நுரையீரலின் உள்ளே சிறிய அறைகளில் தங்கியுள்ள காற்று வெளியேறும்போது, விஸில் சப்தம் வருகிறது. இதையே 'வீஸிங்' என்கிறோம்.

இழுப்பு நான்கைந்து நாட்கள் தொடர்வதுமுண்டு. இவ்வாறு அடிக்கடி வரும் போது, நுரையீரல், இருதயம் பலம் குறையும். இத்தகைய பிரச்னைக்கு யோகாசனம் மிக அருமையான தீர்வு. காலையில் சீக்கிரம் எழுந்து யோகாசனப் பயிற்சிகள் செய்து, பிராணாயாமம் முடித்து, அரைமணி நேரம் 'நடை' செல்லலாம். காலை உணவு மிதமாகவும், பகலுணவு பசிக்கேற்பவும், இரவில் மிகக் குறைவாக ஏழு மணிக்குள்ளும் எடுத்துக் கொள்ளவும்.

பச்சைக் காய்கறி, பழம், இட்லி, பொங்கல், பயத்தங்கஞ்சி போன்ற எளிய உணவு, கீரை உணவு, அத்தி, பேரீச்சை, உலர் திராட்சை, தேன் போன்றவற்றை அதிகமாக உபயோகிக்கலாம்.

தங்குமிடத்தையும், தூங்குமிடத்தையும் தூசி, தும்பு, துர்நாற்றம் வராத சுத்தமான சூழ்நிலையாக வைத்துக் கொள்வது மிக அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக மனத்தை நல்ல நிலையில், அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு யோகாசனம், தியானம், பிராணாயாமம் போன்றவை உதவி புரியும்.

ஆஸ்த்துமாவால் உயிருக்கு ஆபத்து ஏற்படாது. ஆனாலும் இந்நோயோடு வேறு வியாதிகள் இலவச இணைப்பாகத் தொற்றிக் கொண்டு, ஆயுளைக் குறைத்து விடும்.

ஆஸ்துமாவுக்கு நவீன மருத்துவத்தில் தற்காலிக நிவாரண சிகிச்சை முறைகளே உண்டு. நிரந்தர நிவாரணம் காண, இன்றே யோகாசனப் பயிற்சிகளைத் தொடங்குங்கள் நிச்சயம் புது வாழ்வு பெறலாம்.


தொடர்ந்து மக்கராசனம், அர்த்தசலபாசனம், புஜங்காசனம், மத்சியாசனம் போன்றவற்றைச் செய்து வந்தால் ஆஸ்துமா கட்டுப்படும்.

இந்த வாரம் ஆஸ்துமா விளக்கத்தோடு முடித்துக் கொள்கிறேன். 'சகலரோக நிவாரணி' எனப்படும் 'விபரீத காரணி' ஆசனப்பயிற்சி பற்றி விரிவாக அடுத்த வாரம் தெரிந்து கொள்வோம்.

(அப்ப அடுத்தவாரம்)

எச்சரிக்கை : இங்கே தரப்பட்டுள்ள யோகாசன பயிற்சி முறைகள் தகவலுக்காக மட்டுமே. இவை வழிகாட்டி முறைகள் அல்ல. யோகாசன நிபுணரின் நேரடி கண்காணிப்பில்தான் பயிற்சி தொடங்க வேண்டும்.

அஷ்டமி, நவமி எந்த மதத்திற்கும் சொந்தமில்லை



அஷ்டமி என்பது பிரதமி திதியிலிருந்து எட்டாம் நாள். நவமி என்பது பிரதமியிலிருந்து ஒன்பதாம் நாள். இந்த நாட்களில் கடவுளை எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வழிபட்டால் அதிக பலன் கிடைக்கும்.

இந்த வழிபாடு முடிந்தவுடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்

திருமண வைபவங்களுக்கு:- சீர் முறுக்கு, சீர் அதிரசம், சீர் முள்ளுத் தேன்குழல், சீர் அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் செய்துத் தரப்படும்.

Sarathy

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு.
சென்னை – 600 020.
போன்: 4915662, 4914213

"நள்ளிரவு. அமாவாசை கும்மிருட்டு. வழக்கம்போல் மீனாட்சியம்மன் கோவில் மேல் தளத்தில் காவல் பணி தொடர்கிறது. திடீரென்று அம்மனின் தங்க விமானத்தில் நிழல் போல் சில உருவங்கள். உற்றுப் பார்த்தால் மூன்று பேர் தங்க விமானத்தை அறுத்துக் கொண்டிருக்கும் ஓசை. உடனே சப்தமில்லாமல் ஊர்ந்து சென்று திருடர்களை ஒரே அமுக்காய் அமுக்கினோம். அறுத்து எடுத்த தங்கத்தையும், திருடர்களையும் காவல் துறையிடம் ஒப்படைத்தோம்!" நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவத்தை நினைவு கூர்கிறார் திரவியம்பிள்ளை!

மதுரையில் தலைமுறை தலைமுறையாய் தங்க விமான காவல் செய்து வரும் குடும்பத்தைச் சேர்ந்தவர் இந்த திரவியம்பிள்ளை. இந்த தங்க விமான காவல் பணி பாண்டிய மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது. "முதல் யுகத்துத் தங்கம் இது. கடுமையான வெயில், காற்றுடன் கூடிய பலத்த மழை, தூசி இதையெல்லாம் தாண்டி நிறம் மங்காமல் பளபளவென்று ஜொலிக்கின்றன சுவாமியின் தங்க விமானமும், அம்மனின் தங்க விமானமும்" என்கிறார் திரவியம் பிள்ளை.




"கி.பி. 1330ஆம் ஆண்டு முஸ்லீம் மன்னரான மாலிக்காபூர் இந்தியாவில் உள்ள முக்கிய கோவில்களில் உள்ள நகைகளையும், நவரத்ன, வைரங்களையும் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விலை மதிப்பற்ற நவரத்னங்களும், தங்க வைர நகைகளும் இருப்பதையறிந்து மதுரைக்குப்படையெடுத்து வந்தான். இந்த செய்தி கிடைத்ததும் கோவிலில் உள்ள ஸ்தானிகக் குருக்களும், ஊழியர்களும் (சுவாமி) மூலஸ்தானத்தை மணல் போட்டு மூடிவிட்டனர். மூலஸ்தான லிங்கம்போல ஒரு டூப்ளிகேட்லிங்கம் செய்து வைத்து விட்டு மானாமதுரைக்குச் சென்று விட்டனர்.

"சுரங்கப்பாதையைக் காவல் காக்கும் பணியை குமாரபிள்ளையும், முடி சூடியா பிள்ளையும் ஏற்றுக் கொண்டனர். மதுரை வந்த மாலிக்காபூர் மீனாட்சியம்மன் கோவிலுக்கு வந்து டூப்ளிகேட் லிங்கத்தைத் தோண்டி அதற்குக் கீழே பார்க்க, அங்கே நவரத்னங்கள் இல்லை! பயங்கரமான கோபத்துடனும் ஏமாற்றத்துடனும் கோவிலை திறக்கக் கூடாது என்று ஆணையிட்டுச் சென்றான் மாலிக்காபூர்.

"முஸ்லீம்கள் ஆண்ட 48 வருடங்கள் தமிழகத்திலுள்ள மிக முக்கியமான கோவில்கள் திறக்கப்படவில்லை. மதுரை, ஸ்ரீரங்கம் கோவில்களில் உள்ள சுவாமி சிலைகள் திருப்பதி கோவிலுக்கு அனுப்பப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டன. இன்றும் சிலைகள் பாதுகாக்கப்பட்ட இடத்தில் போர்டு வைக்கப்பட்டிருப்பதைத் திருப்பதியில் காணலாம். மாலிக்காபூர் தமிழகத்தை விட்டு வடக்கே சென்று விட்டான் என்று, திருச்சியை ஆண்ட நாயக்க மன்னர், மதுரை மன்னர் திருமலை நாயக்கருக்குத் தெரிவிக்க, மீனாட்சியம்மன் கோவில் திறக்கப்பட்டது.

தங்கச்சிகர காவலர்!



"அதற்குப் பிறகு கோவிலைத் திறந்து டூப்ளிகேட் லிங்கத்தை அகற்றி மணல் மூட்டைகளை எடுத்து மூலஸ்தானத்தைப் பார்த்தபோது தீபம் ஒன்று அணையாமல் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர்! அந்த டூப்ளிகேட் லிங்கம் இன்றும் துர்க்கை சன்னதிக்கு எதிரே உள்ளது. அந்த 48 வருடங்களும் கோவில் உள்ளே காவல் புரிந்தது எங்கள் முன்னோர்களான குமாரசாமி பிள்ளையும் முடி சூடியா பிள்ளையும்தான். அவர்கள் வழி வந்தவர்கள்தான் நாங்கள்!'' என்று விவரிக்கிறார் இரவியம்பிள்ளை.

"எம்ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த சமயம். மதுரை வந்தார். கோவிலில் உள்ள சுரங்கப் பாதை பற்றி கேள்விப்பட்ட அவர், அதைத் தோண்ட உத்தரவிட்டார். ஆனால் சுரங்கப் பாதையைத் திறக்க யாரும் முன்வரவில்லை. அப்போதைய தொல்பொருள்துறை இயக்குனர் நாகசாமியும், நானும் சுவாமி சன்னதியின் வெளிப்புற வீதியில் உள்ள லெட்சுமி சன்னதி அருகே உள்ள சுரங்கப் பாதையின் வாயிற் கதவைத் திறந்து உள்ளே சென்றோம். மணலால் மூடப்பட்டிருந்தது. இரண்டு வண்டி மணல் அள்ளினோம். ஐந்து அடிதூரம் உள்ளே சென்றோம். அறை போல கட்டப்பட்டிருந்தது. நூறு வருடங்களுக்கு முன்னால் கட்டிய கருங்கல் சுவர் காணப்பட்டது. அதற்குமேல் செல்ல தயக்கமாக இருந்ததால் திரும்பி வந்துவிட்டோம். மணல் கொட்டி மூடி சுரங்க பாதையைப் பூட்டி விட்டோம். எம்ஜி.ஆரிடம் நடந்ததைச் சொன்னோம். இன்றும் சுரங்க வாசல் இருக்கும் இடத்தை மெய்க் காவல் புரிவோர், கணக்கப்பிள்ளை ஸ்தானிக பட்டர், சிகரம் காவல்புரிவோர் ஆகிய நான்கு பிரிவினரும் பூஜை செய்து வணங்கி வருகிறோம்!'' என்கிறார் இரவியம்பிள்ளை.




• திரவியம் பிள்ளை

வருடம் முழுவதும் 24 மணி நேரமும் இந்த சிகர காவல் பணி தொடர்கிறது. இவர்களின் காவல் திறனைப் பாராட்டி மன்னர் திருமலை நாயக்கர் இவர்களுக்குப் பல வகைகளிலும் முதல் மரியாதையை அளித்துள்ளார்.

"திருட்டு சம்பவத்துக்குப் பிறகு இரண்டு விமானங்களுக்கும் மின் விளக்கு வசதி செய்யப்பட்டு விட்டது. சிகர காவல் பணியை நானும் எனது சகோதரர்களும் கவனித்து வருகிறோம். இந்தப் பணியைச் செய்வது அம்மனுக்கு நாங்கள் செய்யும் தொண்டு. ஊதியத்தைவிட அம்மனின் அருகிலேயே இருப்பது பெரிய பாக்கியம். எனக்குப் பிறகு வரும் தலைமுறையும் சிகர காவல் பணியைத் தொடரும்'' என்கிறார் தங்கச் சிகர காவலரான இரவியம்பிள்ளை!

கட்டுரை, படங்கள் : **எஸ். குமார்**



• விழாவில்

அம்மா இருக்கும் திசை நோக்கி...!



• நினைவகம்

மருது பாண்டியர்களின் இருநூறாவது ஆண்டு நினைவு நாள் விழா அரசு விழாவாக திருப்பத்தூரில் நடந்தது. பன்னீர் செல்வம் முதல்வராகப் பதவியேற்ற பின்பு கலந்து கொண்ட முதல் அரசு விழா.

மருது சகோதரர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்திலான விழா மேடைக்குப் பன்னீர்செல்வம் வந்தபோது ஒரு மணி நேரம் தாமதம். அரை மணி நேரத்திற்கு முன்பாகவே சபாநாயகர் காளிமுத்து வந்து காத்திருந்தார்.

விழாவில் கலந்து கொண்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், "புரட்சித்தலைவி அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி' என்ற வரியை உச்சரித்த பின்பே பேசத் தொடங்கினர்.

''அன்பு, அடக்கம், பண்பு, பழக்க வழக்கங்களில் எளிமையான முதலமைச்சராமே? அடக்கமானவராமே? என்று புதிய முதல்வரைப் பார்க்க ஆவலோடு வந்த மக்களே!" என்று பேசத் தொடங்கினார் மலைச்சாமி, எம்.பி.

பன்னீர்செல்வம் எளிமையானவர் என்றால் அவருக்கு முன்னால் இருந்த முதல்வர்கள் எளிமையும், அடக்கமும் இல்லாதவர்களா? என்ற கேள்வியைக் கட்சிப் பிரமுகர்கள் வாய்க்குள் முணுமுணுத்தனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஜஸ்பீர் சிங் பஜாஜை ''பஜாஜ் ஆட்டோ''வுடன் ஒப்பிட்டுக் கிண்டலடித்த எஸ்.எஸ். சந்திரனின் பேச்சு அருவருப்பான நகைச்சுவை!

மருது பாண்டியர்களின் வரலாற்று நிகழ்வுகளின் சாரத்தைத் தொகுத்துப் சபாநாயகர் காளிமுத்து பேசிய பேச்சு கூட்டத்தினரை அசத்திவிட்டது. ''புரட்சித் தலைவி ஆட்சிக்கு உள்ளே இருந்தாலும், வெளியே இருந்தாலும் அவரின் ஆட்சிதான் நடக்கிறது' என்ற உண்மையையும் சொன்னார் அவர்.

நிறைவுரையாக முதல்வர் பேச ஆரம்பித்த போது, கூட்டம் கலையத் தொடங்கிவிட்டது. முதல்வர் பேசிய 15 நிமிடங்களுக்குள் பாதி கூட்டத்தைக் காணவில்லை.

முதல்வர் கலந்து கொள்ளும் விழா என்றால் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் கட்டாயம் இடம் பெறும். இந்த 'முதல்' விழாவில் அது இல்லை.

கடந்த ஆண்டில் கட்டப்பட்ட 'மருது பாண்டியர் நினைவகம்' இன்றுவரை திறக்கப்படவில்லை. அதற்கு முன்பாக 1992ல் இதே நினைவு மண்டபத்தை ரூ. 4.95 லட்சம் மதிப்பீட்டில் சிறிய மண்டபமாகக் கட்டி அப்போதைய முதல்வர் ஜெயலலிதா திறந்ததையே, புதிய மண்டபத் திறப்பு விழாவாக எடுத்துக் கொண்டுள்ளனர் செய்தி மக்கள் தொடர்புத் துறையினர்.

திறக்கப்படாத நினைவரங்கத்தினுள் முதல்வர் சென்று வழிபாடு நடத்தினார். விழாவில் பேசிய அனைவரும் 1992ல் புரட்சித் தலைவியால் திறக்கப்பட்ட நினைவிடம் என்றே பேசினார்கள்.

திறப்பு விழா காணாத மருதுபாண்டியர் நினைவரங்கம் யாருக்காக காத்திருக்கிறது? என்பதுதான் திருப்புத்தூர் மக்களின் கேள்வி. மருது பாண்டியர்களின் வாரிசுகளுக்கு விழா அழைப்பிதழ் அனுப்பாததுடன், அன்று நினைவிடம் சென்று வழிபடக்கூட அனுமதி வழங்கப்படாதது சோகம்!

— கி. சிங்காரவடிவேல்

காஞ்சனா தாமோதரன்



பத்துப் பிரிவு நெடுஞ்சாலையில் போக்குவரத்து ஸ்தம்பித்துப் போயிருந்தது. ஏதாவது விபத்தாக இருக்குமோ? எந்தப் பக்கம் விபத்து என்று சொல்வது கடினம். எதிர்ச்சாரி விபத்தை வேடிக்கைப் பார்ப் பதற்காக இந்தப் பக்கத்துக் கார்க்காரர்களும் தங்கள் வேகத்தைக் குறைப்பது வழக்கம். ஆனால், கண்ணுக் கெட்டும் தூரம் வரை போலீஸோ, ஆம்புலன்சோ தெரியவில்லை. விபத்தாக இருக்க முடியாது. நல்ல வேளை.

ரஞ்சி ரேடியோவை இயக்கினாள். செய்திகள். அணைத்தாள். ஸ்டியரிங் வீலின் மேல் விரல் நுனி களால் மெல்லத் தாளம் போட்டாள். சுற்றிலும் பார்த்தாள். பக்கத்துக் கார்க்காரர்கள் அனைவரின் காதுகளிலும் செல்போன்கள் முளைத்திருந்தன. ஒரு நிமிடத்தைக் கூடத் தனிமையில், மௌனத்தில் கழிக்க முடியாத மனிதர்கள்.

அவளுக்குப் போக்குவரத்து நிறுத்தங்கள் பிடிக் கும். ஏன், எதற்கு என்று தெரியாமல் ஓடிக் கொண்டேயிருக்கும் வாழ்க்கையில், எதிர்பாராமல் கிடைக்கும் சில ஆசுவாசக் கணங்கள். யார் யாருக்கோ சொந்தமாகிப் போன அவளது நேரம் எதிர்பாராமல் அவளுக்கே சொந்தமாகும் ஒரு சில கணங்கள். என்னவொரு நிம்மதி.

விதுவை நினைத்துக் கொண்டாள். விதுவின் கதையையும் மத்தியானச் சாப்பாட்டையும் முடிப் பதற்கு முன்னாலேயே ரஞ்சியின் செல்போன் குறுக் கிட்டது. கம்பெனி பிரெசிடெண்ட்டின் உதவி யாளர். ப்ரெசிடெண்ட் அவசரமாக ஃப்ரான்சுக்குக் கிளம்ப வேண்டியிருக்கிறது. சாயங்காலம் அவளிடம் பேசுவதாக இருந்த விஷயத்தை இப்போதே முடித்து விட விருப்பம். அவளால் உடனே வர முடியுமா? சிரமத்துக்கு மன்னிக்கவும்.

விதுவின் கையை அழுத்திப்பற்றி, இப்போது ஓட வேண்டும். சாயங்காலம் அவளிடம் மீண்டும் பேசலா மெனச் சொன்னபோது விதுவின் முகத்தில் எவ்வளவு ஏமாற்றம்! பாவம்.

அலுவலக அழுத்தத்தில் விதுவின் பிரச்னை பின்னுக்கு நகர்ந்தது. சரிந்து கொண்டிருக்கும் தேசப் பொருளாதாரம் மேல்நோக்கித் திரும்பும் வரை சில ஆயிரம் பேரை வேலையை விட்டு அனுப்புவதாக முடிவு. திறமையில்லாத பலருக்கும் சீட்டுக் கிழித் திருக்கிறாள். ஆனால் இந்த நிலைமை வேறு. வேலைக் குறைப்புப்பட்டியல் பற்றிப் பிரெசிடெண்ட்டிடம் பேசி முடித்து வெளியேறும் போது அவள் மனம் கனத்திருந்ததை முகம் காண்பித்திருக்க வேண் டும் - கண்ணாடிக் கதவுக்கு வெளியே உட்கார்ந்திருந்த

இக்கண



6


பிரெசிடெண்டின் உதவியாளர், "உடம்பு சரியில்லையா? நான் தண்ணீர் கொண்டு வரவா?'' என்று கேட்கும் அளவுக்கு.

இது அவளுக்கு மீறிய விஷயம். தெரியும். அவளுக்கு மீறிய விஷயங்களைப் பற்றி வேதனையும் குற்ற உணர்வும் இருப்பதால் பயனில்லை. தெரியும். ஆனால்.. அவள் பட்டியலில் வெறும் பெயர்களாகத் தெரிபவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கும். எல்லாக் கம்பெனிகளும் வேலைக் குறைப்புச் செய்து கொண்டிருக்கும் சூழலில் இவர்களுக்கு நிச்சயம் வேறு வேலைகள் கிடைக்கப் போவதில்லை. ஆறு மாதச் சம்பளத்தோடுதான் வெளியே அனுப்பப்படுகிறார்கள். ஆனால், ஆறே மாதங்களில் பொருளாதாரம் சீராகிப் புது வேலைகள் கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

வாழ்க்கையில் எதற்குத்தான் உத்தரவாதம் இருக்கிறது? தன் கல்யாண நாளில் விதுகூடத்தான் நினைத்திருப்பாள், அது நிலைத்து நிற்கும் உறவென்று. இப்போது அதே உறவு இன்னும் எவ்வளவு காலத்திற்கு என்று கேட்கிறாள்.

"ரஞ்சி, உன் அமெரிக்க நண்பர்களில் எத்தனையோ பேர் விவாகரத்து வாங்கினவங்க. சிலர் இரண்டு மூணு தரம்கூட. என் விஷயம் அந்த அளவுக்கு இன்னும் போகலை. பின்னே உனக்கு ஏன் இவ்வளவு அதிர்ச்சி?''

விதுவின் கேள்வியில் கொஞ்சம் நியாயமிருந்தது. ஏன் இவ்வளவு அதிர்ச்சி? விதுவும் ரமேஷும் ஒரு சராசரிச் சந்தோஷத் தம்பதியென்று நினைத்ததனாலா. அல்லது



"அந்தாளு சன் டீ.வியும், ஜெ.டீ.வியும் மாறி மாறிப் பார்க்கிறாராம்!"

"அதான் மெண்டல் மாதிரி பேசறாரா...?"

– சீர்காழி ரேவதி

தாய்நாட்டினருக்கும் அமெரிக்கருக்கும் வெவ்வேறு மதிப்பீட்டு முறைகள் இயல்பாகவே மனத்துள் இருப்பதினாலா. எவ்வளவுதான் தனித்துவம் பேசினாலும் கடைசியில் சமூகம் விதைத்த மதிப்பீடுகள் தான் ஆழ்மனத்தில் ஒளிந்து கிடக்குமோ.

ரமேஷையும் விதுவையும் தனியாகச் சந்தித்ததில்லை. வாராந்திர விருந்துகளில், அல்லது தமிழ்ச் சங்க விழாக்களில் பார்த்ததோடு சரி. விருந்துகளிலும்கூட, ஆண்களும் பெண்களும் தனித் தனிக் கூட்டங்களாகப் பிரிந்து விடுவதால், விதுவைத் தெரிந்த அளவு ரமேஷைத் தெரியாது. மரியாதையான புன்சிரிப்போடு ஒதுங்கி விடுவான். மிஞ்சி மிஞ்சிப் போனால் எந்தக் கம்பெனியின் பங்குகளை வாங்குவது விற்பதென்று அவளிடம் கேட்பான்.

"அந்த மனுஷரைச் சுத்தி எவ்வளவு பெ..ர்...ரீ...ய சுவர் தெரியுமா, ரஞ்சி? எம்பி எம்பிக் குதிச்சாலும் எட்டிக் கூடப் பார்க்க முடியாத உயரச் சுவர்."

விது சொன்னதைவிட அவள் அதைச் சொன்ன தொனி ரஞ்சியை என்னமோ செய்தது. கோபமோ வெறுப்போ வருத்தமோ இல்லாத, தட்டையான ஒரு தொனி. தன் உறவுக்குத்தானே அந்நியமாகித் தொலைவாகிப் போன மூன்றாம் மனிதரின் தொனி. பதினாறு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்த ஒருவனைப் பற்றிப் பேசும் ஒரு பெண்ணிடம் ரஞ்சி சிறிதும் எதிர்பாராத தொனி.

"எந்த அர்த்தத்தில் இப்படிச் சொல்றே, விது?"

"அதோட சரியான அர்த்தத்தில்தான் சொல்றேன் ரஞ்சி. அவர்கிட்டே நெருங்க முடியாது."

விதுவின் புத்தகத்தில் நெருக்கம் என்பதற்கு அர்த்தம் வேறு மாதிரி இருக்கிறதோ. எந்நேரமும் ஒருவரை ஒருவர் கொண்டாடி, உணர்வுகள் முழுதையும் மொத்தமாய்க் கொட்டிப் பகிர்ந்து, ஈருடல் ஒருயிரென இரண்டறக் கலந்து...

"எந்த இரண்டு மனுஷங்களுக்கு நடுவிலேயும், இடைவெளி கொஞ்சம்கூட இல்லாத நெருக்கம் சாத்தியம்னு நீ உண்மையிலேயே நம்புறியா விது?"

"அப்படி இருக்கணும்னு நீ நினைக்கலியா, ரஞ்சி?"

ரஞ்சி நினைத்துப் பார்த்தாள். ஈருடல் ஒருயிர் சாத்தியமா? என்கிற கேள்வி கிடக்கட்டும். ஏன் அப்படி இருக்க வேண்டும் என்ற கேள்வி நெருடியது. அப்படி இருப்பது பல சங்கடங்களை உருவாக்கும் என்று தோன்றியது.

"இல்லை விது. நான் அப்படி நினைக்கலை. ஓரளவு நம்ம எல்லாருக்குமே தனிப்பட்ட இடம் 'ஸ்பேஸ்' வேண்டியிருக்கு. நான் செய்கிற எல்லா காரியங்களிலும் பங்கு வேணும்னு க்ரிஸ் நினைச்சா எனக்கு அலுப்புத் தட்டும். அதே மாதிரி, எல்லாத்துக்கும் நான் க்ரிஸ்ஸோட ஒட்டிக்கிட்டா அவருக்கும் வாழ்க்கையே வெறுத்துப் போகும். ஒருத்தர் மத்தவரோட 'ஸ்பேஸை' மதிக்கிறது உண்மையான நெருக்கத்துக்கு ரொம்ப முக்கியம்னு தோணுது. நீ வேணும்னு சொல்ற நெருக்கம், ஒரு விதமான ஆக்கிரமிப்புன்னு எனக்குத் தோணுது. அதிலே 'நான்' என்கிற சுய அடையாளம் மொத்தமாவே அழிஞ்சு போகும்."

"கல்யாணங்கிறதே சுய அடையாளத்தை அழிக்கிற சடங்குதானே, ரஞ்சி!"

ரஞ்சி சாப்பிடுவதை நிறுத்தினாள். இதையே பலரும், பல விதங்களில், பல காரணங்களுக்காகச் சொல்லிக் கேட்டாயிற்று. விது டெல்லி ஜே.என்.யூ. மாணவச் சூழலில் வளர்ந்தவள். பெண்ணியத்திலிருந்து பசுமைப் புரட்சி வரை விவரமாக விவாதிக்கும் திறமை உள்ளவள். ரஞ்சிக்கு அதனால் அவள் மீது ஒரு தனி மரியாதை. ஆனால் இது பட்டிமன்றம் இல்லையே.

"விது, பொதுவாச் சொல்லணும்னா, இன்னைக்குப் பல பெண்கள் மட்டுமில்லை, சில ஆண்களுமே கூட மாறியாச்சு, இப்படிக் காலம் மாறும்போது, கல்யாணங்கிறதோட காரணமும் அர்த்தமுமே மாறும் இல்லையா? அதை ஒரு சமமான மரியாதை உள்ள நட்பா, உற்சாகமான உறவா வளர்த்து எடுக்கலாம். அல்லது நீ சொல்ற மாதிரி சுய அடையாளத்தை அழிக்கிற வெத்துச் சடங்குன்னு ஒதுக்கித் தள்ளலாம். எல்லாத்துக்கும் அர்த்தம் குடுக்கிறதே நாமதானே..." ரஞ்சி சட்டென்று நிறுத்தினாள். பிரச்னை புரிவதற்கு முன் இப்படிப் பேசுவது தப்பு.

பிறகு மென்மையான குரலில் தொடர்ந்தான். "விது, உன் மனசை ஏதோ ரொம்ப அரிச்சுக்கிட்டிருக்கு. இந்தச் சமயத்திலே, பொதுவான விவாதங்கள் வேணுமா? விவாதங்கள் முடிவே இல்லாத சுழல் மாதிரி போய்க்கிட்டே இருக்கும். அதை விடு. உன் பிரச்னையை விரிச்சிச் சொல்லு. அப்படிப் பேசறதுனால உனக்கே கூட அதைப் பத்தி ஒரு தெளிவு உண்டாகலாம். எனக்கும் புரிஞ்ச மாதிரி இருக்கும்..."

அப்போதுதான் செல்போன் குறுக்கிட்டு, அலுவலகத்துக்கு ஓடி வரும்படி சொன்னது. விது மனம் திறந்து பேச ஆரம்பிக்கும் நேரத்தில் இப்படி ஒரு தடை. எரிச்சல்.

அலுவலகத்துக்குத் திரும்பிப் போகும் வழியெல்லாம் விது சொன்னவற்றின் நினைவு. விது நிச்சயமாகக் குழம்பிப் போயிருக்கிறாள். உண்மையான பிரச்னை என்னவென்று அவளால் உடன் சொல்ல முடியவில்லை. சிறிய பிரச்னைகளைக் கற்பனையில் பெரிதாக்கி இருப்பாளோ? என்னவாக இருந்தாலும் இதைத் தனக்குள்ளேயே வைத்துப் பொறுமிக் கொண்டிருந்தால் அவளுக்கும் நல்லதில்லை. ரமேஷுக்கும், முக்கியமாகக் குழந்தைகளுக்கும் நல்லதில்லை. அழகிய உறவாக இருக்க வேண்டிய ஒன்று உடைந்து சிதறி விடக் கூடாது.

'ப்ளாப்'. சப்தம் நினைவைக் கலைத்தது. விண்ட்ஷீல்ட் மேல் ஒரு குண்டுருண்டை மழைத்துளி வீழ்ந்து, தட்டையாய்ச் சிதறி, நேர்க்கோடாய்க் கீழே வழிந்தது.

"கடலிலே மழை பெய்த பின் எந்தத் துளி மழைத்துளி..." மனம் தானாய்ப் பாடியது. கான்க்ரீட் வெளியில், நெருங்கி நெய்த கார்களின் நடுவில், செல்போன் காதாளர்களின் அரங்கில் இந்தக் கவிதை வரிக்கு இடமில்லை என்று உடனேயே தோன்றியது. அதனாலேயே அது இன்னும் கொஞ்சம் தனிப்பட்டு அழகாய்த் தெரிந்தது.

ஐயோ! இதுவரை மறந்திருந்ததைப் பாட்டு ஞாபகப்படுத்தியது. பிள்ளைகளுக்கு நாளை பள்ளி விடுமுறை. ரஹ்மான் பாட்டு கேட்பதற்காக ஆலன் இன்று சாயங்காலம் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருந்தான். இப்படிப் போக்குவரத்தில் சிக்கியதால் தாமதமாகப் போவதை அனுகாவுக்குத் தெரிவிக்க வேண்டும். செல் போனில் வீட்டு எண்ணை அழுத்தினாள்.

(தொடரும்)



செவி மடுக்குமா?

✉ பாரதிய ஜனதா கட்சி என்றால் ஒரு 'தனித்துவம்' இருந்தது. அந்தப் பெருமை சிறுகச் சிறுக குறைந்து, பத்தோடு பதி னொன்றாகப் பரிணமித்து மாறி வருவதை அக்கட்சியின் செயல்பாடுகள் நிருபணம் செய்து வருகின்றன. ஜார்ஜ்பெர்னாண்டஸ் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளது பி.ஜே.பி.க்கு ஒரு கரும்புள்ளி. தலையங்கக் கருத்தைச் செவிமடுக்குமா, வாஜ்பேயி அரசு?

சென்னை, கே.என்.கோபாலகிருஷ்ணன்

நேரில் சென்று வந்த திருப்தி!

✉ பரிசு பெற்ற ஹரிகிருஷ்ணனின் பயணக் கட்டுரையைப் படித்ததும் நாங்களும் நேரில் சென்று வந்த திருப்தி ஏற்பட்டது.

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்

ஜனநாயகப் படுகொலை!

✉ அரசியல் சாக்கடைக்குள் உள்ளாட்சித் தேர்தலை மூழ்கடித்துத் தமிழகம் நாறிப் போகும்படியான நிலைமையை ஏற்படுத்தியது வெட்கக்கேடும், வேதனையும் கலந்த ஜனநாய கப் படுகொலையாகும். நூற்றுக்கு நூறு அரசி யல் கலப்படமின்றி வருங்காலத்தில் உள்ளாட் சித் தேர்தலை நடத்த அறிவுரை கூறும் அர்த்த முள்ள தங்கள் தலையங்கம் அனைத்துக் கட்சி யினரின் இதயக் கதவைத் தட்ட வேண்டும்.

இனாம் மணியாச்சி, ச.ஆ.கேசவன்

எம்.ஜி.ஆர். அல்ல!

✉ ஜாய்ஃபுல் சிங்கப்பூர்; கலர்ஃபுல் மலே சியா பாடல் பாடியது எம்.ஜி.ஆர். அல்ல. வருவான் வடிவேலன் என்ற படத்தில் விஜயகுமார் பாடியது.

திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்

அரசியலையாவது பிரிப்பதாவது!

✉ தலையங்கம் பிரமாதம், ஆனால் அதைச் செயல்படுத்துவது எப்படி சார்? பாலிலிருந்து நீரைக்கூட பிரித்து விடலாம். உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து அரசியலையாவது, பிரிப்பதாவது! 'மனிதன் தோலை உரித்து மாட்டுக்குச் சொக்காய்த் தைக்கலாம்' என்று சொல்வதுபோல் இருக்கிறது.

ஆதமங்கலம் புதூர், கே. சண்முகம்

அடக்கம், அமைதி!

✉ பாடகர் ஸ்ரீனிவாஸ் பேட்டியில் அடக்க மும் அமைதியும் தெரிந்தது. 'உசேலே' அவரை



விரைவில் பெரிய அளவில் பேச வைக்கும்.

மதுரை, ஆர். லட்சுமி

பதில் கவிதைக்கு வாய்ப்பில்லை!

✉ இறையன்புவின் எழுத்து நடையே - ஆழ்நத அறிவுடன் எளிய நடையில் - சிறு சிறு விஷயங்களைக் கூடப் பல கண்ணோட் டத்தில் ஆராய்ந்து தெளிவுபடுத்தும் வகை யில் கொண்டு சென்று, முடிவினை வாச கரிடமே விட்டு விடுவதென்பது. அப்படி யிருக்க, ஹைக்கூ கவிதை ஒன்றுக்குப் பதில் கவிதையோ - உரையோ எழுத வேண்டு மென்ற கண்ணோட்டத்தில் எழுதியிருக்க வாய்ப்பில்லை. ஒவ்வொரு கவிதையிலும் பொதிந்துள்ள உள்ளார்ந்த உணர்வுகளைத் தெளிவாக்க வேண்டும் என்றே நினைத் திருப்பார் இறையன்பு.

ஆம்பூர், நமிதா

சுமிக்குப் பாராட்டு!

✉ சுமி எழுதிய புத்தக விமர்சனங்கள் நடு நாயகமாக இருந்தன. கவிஞர்கள் வஸந்த் செந்தில், இறையன்பு ஆகியோரின் நூல் களில் காணப்படும் நிறை குறைகளை ஒளிவு, மறைவு இல்லாமல் நாகரிகமாகச் சுட்டிக் காட்டிய 'சுமி'க்கு ஆயிரமாயிரம் பாராட்டுக் களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை, சு. சம்பத்

வட்டமேஜை

தற்காலிக முதல்வரே நிரந்தர முதல்வரானால்...?



• அன்று செய்தது...

● எஸ். பவதாரிணி ஸ்ரீநிவாஸன், திருத்துறைப்பூண்டி.

? ஸ்டாலினுக்குக் கிடைத்த வெற்றி ஜெயலலிதாவுக்குத் தனிப்பட்ட முறையில் தோல்வி என்று கருதலாமா..?

! ஊழல் செய்தாவது ஸ்டாலினைத் தோற்கடிக்க வேண்டும் என்று கருதிய 'ஜெ', நீங்கள் கூறுவது போல் நினைத்துத்தான் பொருமிக் கொண்டிருப்பார். ஆனால், ஸ்டாலின் மேற்கொண்ட பொதுப்பணிகளுக்கு மக்கள் தந்த பரிசு இது என்று அவர் கருதினால் புத்திசாலி யாவார்.

● எஸ். சந்தியா, திருச்சி - 17.

? அமெரிக்கா, மனிதாபிமானத்தின் அடிப்படையில் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிய உணவுப் பொட்டலங்களை, தலிபான் தீவிரவாதிகள் எரித்து விட்டார்களாமே!

! நூற்றுக்கணக்கில் அப்பாவி உயிர்களைப்பலி வாங்கிவிட்டு, வீடு வாசல்களைத் தரை மட்டமாக்கிவிட்டு, அதே ஆப்கன் மக்களுக்கு உணவுப் பொட்டலம் தருகிறேன் என்றால், தலிபான் என்ன... தன்மானமுள்ள எந்த மனிதனும் இப்படித்தான் நடந்துகொள்வான்.

● பி.வள்ளி, மதுரை.

? மேயர் ஸ்டாலின் வெற்றி பெற்றதை உடன் அறிவிக்காமல் கமிஷனர் ஆச்சார்யலு இரண்டு மணி நேரத்துக்கு மேல் மறைத்துவிட்டது பற்றி..?

! ஏமி ஆச்சர்யமு லேது!

● கலை அரசு, கோவை - 42.


? மகாத்மா காந்தியைப் போல ஜெயலலிதாவும் 'மை எக்ஸ்பெரிமெண்ட்ஸ் வித் ட்ருத்' என்ற தலைப்பில் தனது சுயசரிதை எழுதினாலென்ன?

! எழுதலாம். தலைப்பைச் சற்றே திருத்தி 'Untruths' என்று!

● யமுனா ரெங்கநாதன், சென்னை- 97.

? இறைவன் என்பவன் பகுத்தறிவுக்கு உட்பட்டவனா அப்பாற்பட்டவனா..?

! கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே;
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணருளும் கண்ணே.



• 'கிலி'யில் காவலர்!

● அதிரை யூசுப், சென்னை - 19.

? மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டார்கள். எங்கே ஸ்டாலின்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கிவிடுவாரா ஜெயலலிதா..?

! ஜோக் அடிக்கறீங்களா..? இப்படி நீங்க ஏதாவது கேட்டு வைக்கப் போறீங்களேன்னுதான் ஸ்டாலினைத் தோற்கடிக்க தில்லுமுல்லுக்களில்கூட இறங்கினாங்க. 'ஜெ'யைப் பொருத்தமட்டில் தமக்கு ஒரு நியாயம்தான்; மற்றவர்களுக்கு ஒரு நியாயம்தான். ❑

● பி.ஆர்.பார்த்தசாரதி, ஸ்ரீரங்கம்.

? வீடுகளில் மழை நீரைச் சேமிக்கும் முறை கட்டுப்படி ஆகக்கூடியதா..?

! ஆரம்பச் செலவு (முதலீடு) சற்று அதிகம் தான் என்றாலும் தண்ணீர் வாங்கும் செலவும் நேரமும் மிச்சப்படும் என்பதால் நிலையான, லாபகரமான முதலீடுதான்.

● எம். சிவகுருநாதன், சென்னை - 42.

? ஒரே நாளில் தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க.வுக்கு மாறிய மதுரை முன்னாள் துணை மேயர் மிசா பாண்டியன், அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தால்தான் தன்னை மக்கள் சபாஷ் பாண்டியன் என்பார்கள் என்று சொல்கிறாரே..?

! அ.தி.மு.க.வில் எழுந்துள்ள முணுமுணுப்பு அக்கட்சித் தொண்டர்களுக்குக்கூட ரோசம் உள்ளதை உணர்த்துவதால் அவர்களுக்கும் போடலாம் சபாஷ்!

● சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை. *


? நரகாசுரன் அரக்கன்தான்; ஆனாலும் ஒருவனது மரணத்தை இப்படிக் கொண்டாடுவது மனிதாபிமான செயல்தானா..?



• இழப்பும்...



• ... லாபமும்!



• ரோசம் வளர்த்தவர்!

! நரகாசுரன் தீமையின் உருவகம். கண்ணன் நன்மையின் உருவகம். தீமையை நன்மை வெல்லும்போது அந்த வெற்றியைக் கொண்டாடுகிறோம்.

● எஸ். பொன்னுசாமி, உடுமலை.

? எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகளைச் சம்பளமில்லாத கௌரவப் பதவியாக்கிவிட்டால் அரசுக்குச் செலவுகள் குறையுமே..?

! சரியாப் போச்சு! சம்பளத்துக்கும் சேர்த்து லஞ்சம் வாங்கி நாட்டை மேலும் குட்டிச்சுவராக்கவா!

● ஆர். ராஜலட்சுமி, கரூர் - 4.

? பக்திப் பத்திரிகைகள் பெருகி வருகின்றனவே, இதனால் நாத்திகம் மறைந்து விடுமா..?

! அதெப்படி..? ஆத்திகம் இருக்குவரை நாத்திகமும் இருக்கும் ஐயா!

● எம். ரத்தினகுமார், சென்னை - 15.

? தமிழ்நாட்டில் நிறுவவிருந்த அமெரிக்க GEC கம்ப்யூட்டர் கம்பெனிக்கு அனுமதி வழங்குவதில் பேரம் பேசப்பட்டதால், அந்தக் கம்பெனி பெங்களூருக்குப் போய் விட்டது. 24 மணி நேரத்தில் கர்நாடகம் அந் நிறுவனத்துக்கு அனுமதி அளித்து விட்டதாமே...? இது உண்மையெனில் தமிழ் நாட்டின் கதி என்ன..?

! அதோகதிதான்! 24 மணி நேரத்தில் தொழில் வளர்ச்சியில் 24வது இடத்துக்குப் போய்விடுவோம்.

● வி.பரமசிவம், அரசரடி.

? '96ல் செல்லாத வோட்டுக்கள் 13,000. இந்த மேயர் தேர்தலில் செல்லாத வோட்டுக்கள் 42,000...?

! கள்ள வோட்டும் வன்முறை வோட்டும் அதிகரித்ததன் நிரூபணம்தான்.

● கே.என். பாலகிருஷ்ணன், சென்னை - 91.

? தற்காலிக முதல்வரே நிரந்தர முதல்வராகும் நிலை ஏற்பட்டால்..?

! ஊர்க்காவலுக்குப் போனேன், வீடே கொள்ளை போச்சு என தைரியமாக காமென்ட் அடித்ததற்கே என்ன 'கிலி'யில் இருக்கிறாரோ பன்னீர்செல்வம் - இப்படியெல்லாம் கிளப்பி விடாதீங்க, ப்ளீஸ்!

● டி.. சித்ரா, சென்னை - 88.

? அன்று காந்தியடிகள் சுதந்தரம் வாங்கித் தராமல் இருந்திருந்தால் நம் நாட்டில் இத்தனை அரசியல் கட்சிகள், ஊழல்கள் போன்றவை இல்லாமல் இருந்திருக்குமே..?

! நாம் பிறக்காமலே இருந்திருந்தால் நோய் நொடியே வராமல் இருந்திருக்குமே என்று அங்கலாய்ப்பதுபோல் இருக்கிறது நீங்கள் சொல்வது!

● எஸ். குமரேசன், மதுரை - 9.

? தமிழக அரசு எப்போது செயல்படத் தொடங்கும்..? தமிழக அமைச்சர்கள் எப்போது பேசுவார்கள்?

! ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அரசு போய் வேறு அரசு வந்தால், அப்போது...

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
அதிரை யூசுஃப்
15, டி.எச். ரோடு,
தாங்கல்,
சென்னை - 600019.

* ரூ.50 பரிசு பெறுபவர் :
சின்னஞ்சிறு கோபு,
1/313, 1, காமராஜர் தெரு,
சீனிவாசபுரம்,
மயிலாடுதுறை - 609 001.

செ.ஏக்நாத் ராஜ்

ஓரி உலகெல்லாம்
உலகெல்லாம் சூரியன்
சூரியன் தங்கைக்கும்
சுந்தரவல்லிக்கும்
நாளை கல்யாணம்.

கையில் இருந்த ஒரு கூழாங் கல்லை மேலே தூக்கிப்போட்டு அது கீழே வருவதற்குள் தரையில் இருந்த ஆறு கற்களையும் வலக்கையால் அள்ளி, மேலிருந்து வந்தக் கல்லையும் லாவகமாய்ப் பிடித்தாள் ஆவுடை. எதிரில், மேலே சென்று வரும் கல்லையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் உடையம்மை.

பொதுவாக இதுபோன்ற கழச் சிக்கல் விளையாட்டுகளில் ஐந்து அல்லது ஆறு பேர் ஆடுவதுதான் வழக்கம். ஆனால் இன்று வெறிச் சோடிக்கிடக்கிற தெருவில் வீட்டின் வெளித் திண்ணையில் அமர்ந்து இவர்கள் இருவர் மட்டுமே ஆடிக் கொண்டிருந்ததற்குக் காரணம் இருந்தது. ஏனென்றல் உடையம்மை சிறிது காலமாக தெரு குமரிகளிடமிருந்து தனிமைப்பட்டிருந்தாள். அவளுடன் யாரும் பேசுவதில்லை. பேசக் கூடாதென அவள் வயசையொத்த குமரிகளின் அம்மாக்கள் ஒட்டுமொத்தமாய்த் தீர்மானித்து எடுத்திருக்கிற முடிவு இது.

இந்த முடிவையும் மீறி வாய்க் காலுக்குத் தண்ணிக்குப் போகும் போது சிலர் அவளிடம் பேசவதுண்டு. ஆவுடை, உடையம்மைக்குச் சித்தி மகள் என்பதால் இப்போது அவள் மட்டுமே அவளுக்குத் தோழி.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்தான் அந்தச் சம்பவம் நடந்து முடிந்திருந்தது.

மாத்ராங்குளத்துப் பொத்தைக் கருகில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான் மணி. பத்து செம்மறியும் ஏழு வெள்ளாடும் அவனுடையது. அவனுடையது என்றால் அவனின் அப்பா, "இத வச்சித்தான் நீ பொழச் சிக்கிடணும்" என்று உறுதியளித்து விட்டு, அவனுக்கு அவற்றைத் தானம் செய்திருந்தார். அதில் சில ஆடுகள் பயிருக்குள் சென்று மேய, வேகமாகச் சென்று மேட்டுக்கு விரட்ட



ஆட்டம்



விட்டுப் பெரிதாகக் கிளை பரப்பி விரிந்து நிழல் கொடுத்துக் கொண்டிருந்த அரச மரத்தின் கீழ் துண்டை விரித்துப்படுத்திருந்தான். அவன் தூக்கம் கலைந்து எழுந்தபோது நல்ல வெயில். ஆடுகளில் சில அவனின் அருகிலேயே படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன.

அப்போதுதான் தூரத்தில் பாவாடை சட்டைத் தாவணியில் ஓர் இளம் பெண் தூக்குச் சட்டியோடு வருவது தெரிந்தது. அக்கம்பக்கத்தில் யாரும் இல்லை. அவள் நெருங்கி வரவர அவனுக்குள் இனம்புரியாத மாற்றம் நிகழ்வதை உணர்ந்தான். அருகில் வந்த பிறகுதான் அவள் மேட்டுத் தெரு பொன்னுசாமி மகள் என்பது தெரிந்தது. இது மணிக்குக் கூடுதல் வசதியாகிவிட்டது.

அவள்கிட்டே வந்ததும் மரத்தின் அடியிலிருந்து எழுந்த அவன், ஒரு வித கிரக்கத்துடன் அவளிடம்...!

ஈரெண்டு எடுக்கவே
எலந்தம் பழுக்கவே
குழந்தை சமையவே
கொட்டுச் சத்தம் கேக்கவே

டபக்கென்று இரண்டு கற்களை மேலேபோட்டு தரையிலிருந்த ஐந்து கற்களையும் எடுத்து மேலிருந்து வந்ததையும் பிடித்தாள் ஆவுடை. எதிரில் மௌனம் கலையாமல் உடையம்மை.

விவசாய சங்கத்தில் ஊரே கூடியிருந்தது. கீற்றுக் கொட்டகைப் போடப்பட்டிருந்த இடத்தில் தலைவரும் துணைத் தலைவரும் இருந்தார்கள். அவர்களின் இரண்டு பக்கமும் மேட்டுத் தெரு ஜனங்களும் மேலத் தெருக்காரர்களும் கூடியிருந்தார்கள்.

சங்கத்திற்குக் கொஞ்சம் தள்ளி இருந்த வேலு டீக்கடையில் யாரோ

வெளியூர்க்காரர்கள் பேசிக் கொண்டிருக்கும் சப்தம் தவிர வேறு எந்த சப்தமும் இல்லை.

சிறிது நேரத்திற்குப் பின் தூணில் சாய்ந் திருந்த தலைவர் கேட்டார் :

"எங்கல கல்றகுறிச்சா மவன?"

"இன்னா நிக்காம்லா, ஏல முன்னால வந்து நின்னம்ல, ஆட்டுத் தலைக்குக் காத் தால பொறத்தப் போயி நிக்க." கூட்டத்தில் ஒருவர் சொல்ல, அவன் தலையைத் தொங்க போட்டவாறு முன்பக்கம் வந்து நின்றான்.

தலைவர் அவனுக்குச் சொந்தம் என்றாலும் விவகாரம் என்று வந்துவிட்டால் அவர் நியாயத்தின் பக்கம். ஒரு வயக்காட்டுப் பிரச்னையில் தன் சொந்த தம்பிக்கே தண்டனை தந்து நியாயஸ்தன் என்பதை நிருபித்தவர் அவர்.

"அந்தப் புள்ளய எங்க?" - தலைவர்தான்.

கொஞ்சம் தள்ளி சில பெண்களின் அரு கில் நின்று கொண்டிருந்த அவள் முன்னே வந்து நின்றாள்.

"ஏல அந்தப்புள்ள சொல்லுதெல்லாம் நெசமால?"

அவன் பேசவில்லை. தரையைப் பார்த் துக் கொண்டு நின்றான்.

"கேக்கம்லால, வாயில ஈரமண்ணையா வச்சிருக்கே?"

பிறகு சுதாரித்து மெதுவாகப் பேச ஆரம் பித்தான் மணி :

"நான் ஒண்ணுமே பண்ணலை. அப் பனுக்குச் சோறா கொண்டு போறேன்னு கேட்டேன், அவ்வளவுதான்" என்றான் குனிந்த தலை நிமிராமல்.

"த்தூ.. நாயே.. யாருமத்த இடத்துல நீ என்னத்தைக் கேட்டிருப்பேன்னு தெரியும். முன்னால ஒரு தடவை இலஞ்சியா வீட்டுச் சுவத்தை ஏறிக் குதிச்சவன்தான நீ.. பொய்யா பேசுத. சாத்துனம்னா.. கடுவாப் பல்லு உடைஞ்சிரும் படுவா.. பேசுதாம்பாரு."

பிறகு அந்தப் பெண் ஏதோ சொல்ல, அவளின் தந்தை ஆரம்பித்தார் :

"கொஞ்ச நேரத்துல அந்த இடத்துக்கு ஓடியாரலனா ஏதாவது ஆயி போயிருக்கும் தலைவரே. என்னமோ ஏசிட்டு இரைஞ்சி அப்பா அப்பான்னு கூப்பாடு போட்டா. தாழைக்குப் பின்னால நின்னுட்டிருந்த எனக்கு இந்தச் சப்தம் மட்டும்தான் வந்தது. நம்ம புள்ள சப்தம் மாதிரிலா இருக்குன் னுட்டு ஓடியாந்தேன். இவரு, 'ஏன் தொண்ட டைய போடுதே'ன்னு அவ வாயை பொத்தப் போனாரு. அதுக்குள்ள நான் சப்தம் போட் டுட்டே ஓடி வந்ததைப் பார்த்ததும் தூரப் போயிட்டாரு."

"சரி... அதான் உன் மவ வெவரமா சொல்லிட்டாளே நீயும் என்னத்தைச் செல்லுத" என்றார் துணைத் தலைவர்.

"அவன்தான் அவள ஒண்ணுமே பண்ண லையே. ஆள் வந்ததும்தான் வுட்டுட்டுப் போயிட்டானே" என்றார் அவனுக்கு ஆதரவாக ஒருவர்.

"யார்ல அது, வாரியலை எடு வெறுவா கெட்ட பயல... உன் அக்கா, தங்கச்சியை இப்படிக் கையப் புடிச்சி இழுத்துட்டு ஆள் வந்ததும் வுட்டுட்டுப் போனாம்னா சும்மா விட்டுருவியால. பேசுதாம் பாரேன்." என்று கோபத்தில் அவனை அடிக்க எழுந்த தலைவரை இரண்டு மூன்று பேர் பிடித்துக் கொண்டார்கள்.

மூவன்னா ராவன்னா
முத்துச் சரவணா
முத்துக்குளிக்கப் போவானா..

மூன்று கல்லை மேலே போட்டு...

அம்மனுக்கு இரண்டு விட்டர் எண்ணெ யும், உடையம்மையின் காலில் எல்லோர் முன்பும் விழுந்து அவன் மன்னிப்புக் கேட்டதையும் ஊரில் கூட்டம் கூட்டமாய்ப் பேசிக் கொண்டார்கள்.

உடையம்மையைப் பொருத்தவரை விஷயம் வேறாகியிருந்தது.

அவள் ஏதோ தப்பு செய்துவிட்டாள் என்பது போலவும் அவள் உறவினர்களே அவளை வித்தியாசமாகப் பார்க்க ஆரம் பித்துவிட்டனர்.

"இதுல ஏதோ விஷயமில்லாம இருக் குமா? ஒரு மாசமா அந்த வழியாதான் அப் பனுக்குச் சோறு கொண்டு போறா. தென மும்தான் அவன் அங்கன ஆடு மேய்ச்சிட் டிருக்கான். ரெண்டு பேருக்கும் பழக்கம் வந் திருக்கும்ங்க. இல்லேன்னா அவன் அவளை இழுப்பானா? இவ அழகுக்கு அவன் இழுத்

"எந்த வருஷமும் இல்லாத அளவுக்குச் சந்தோஷமா இந்த வருஷம் தீபாவளி கொண்டாடறியே அப்படி என்ன நடந்தது."

"தீபாவளிக்குப் பட்டுப் புடைவை வாங்கப் போன என் மனைவி இன்று வரை வீடு திரும்பலே!"

- எஸ். வீமராஜன்

தடதே பெரிசுதான். இவ கொழுந்தச் செரிக்கி, சம்பவம் நடந்த அன்னைக்கி அப்பன் பாத்துருவாம்னு கத்தியிருப்பா. என்ன சொல்லுத...''

இப்படித்தான் அந்தச் சம்பவத்திற்குக் கண், காது, மூக்கு வைத்து அதை ஒரு பெரிய பிரச்னையாக்கி இருந்தார்கள்.

இந்தக் காரணங்களால் உடையம்மையின் வயசையொத்த குமரிகளை அவளிடம் பேசக்கூடாதென, தெரு பெண்கள் ஒரு மனதாக முடிவெடுத்திருந்தார்கள். அவளைப் பார்த்து தங்கள் பிள்ளைகளும் கெட்டுவிடுமென்று.

நாளை எழுதிக்கோ
எம்பேரச் சொல்லிக்கோ
தாழையடியில
தண்ணிப் பந்தல் போட்டுக்கோ.

நான்கு கற்களை மேலேபோட்டு...

உடையம்மாளின் மாமன் மகன் பக்கத்து ஊரிலிருந்து வந்திருந்தான். அவளைத்தான் கல்யாணம் முடிப்பேன் என்று ஒத்தக் காலில் நிற்பவன். தெருவில் யாரோ, நடந்த விஷயத்தைக் கிசுகிசுவாக்கி எழுதிப் போட்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும்தான் அவசரமாக ஓடி வந்தான்.

வந்தவன் அவளைப் பார்க்கவில்லை. உறவினர்கள் ஒவ்வொருவராக அவனிடம் கதை கட்டி விட்டிருந்தார்கள். எல்லோருமே ஒரே விதமாகச் சொல்வதைக் கேட்டு, மனத்துக்குள் கிரீடம் சூட்டி மகிழ்கின்ற தனது காதலி - வருங்கால மனைவிமீது வெறுப்படைந்தான்.

மனம் முழுவதும் சோகம் அப்பிக்கிடக்க, எதையோ இழந்தவன்போல இருந்தான் அவன்.

அவன் வந்து பார்ப்பானென்று காத்திருந்தாள் உடையம்மை. இதுக்காக பீடி சுற்ற சித்தி வீட்டுக்குச் செல்வதைக்கூட நிறுத்தியிருந்தாள். இரட்டைச் சடைப்பின்னி, பவுடர் பூசி, புதுசு மாதிரியான பாவாடை சட்டையை அணிந்து கொண்டு எதிர்பார்த்திருந்தாள் அவள்.



அவன் வந்திருப்பது இந்த விஷயங்களைக் கேள்விப்பட்டுதான் என்பது அவளுக்குத் தெரியாது. அந்த நாள் முழுவதும் இவளைப் பார்க்க அவன் வரவில்லை. அவளுக்குச் சந்தேகம் தொற்றிக் கொண்டது.

மறுநாள் காலையில் குடத்தோடு தண்ணிக்குச் செல்கையில் தெருக்காரிகள் ஜாடைமாடையாக, ''இந்த விஷயத்தைக் கேட்டுக் கொதிச்சப் போயில்ல வந்திருக்காம்'' என்று சொல்லவும், அவளுக்குப் புரிந்தது அவன் வந்ததன் நோக்கம்.

அடுத்த சில நிமிடங்களிலேயே அவளின் கருநிற முகம் வாடிப்போனது.

யாரை மலைபோல் நம்பியிருந்தாளோ அவனே இவளிடம் கேட்காமல் ஊர்ப்பேச்சைக் கேட்டுச் செல்கிறானே என்று மனத்துள் புழுக்கம்.

அஞ்சலம் குஞ்சலம்
தம்பி சிதம்பரம்
தங்கச்சி மாப்ள
வெண்கலம்

ஐந்து கற்களை...

தெப்பக்குளத் திண்டில் ஒரு காலை மேலும் ஒரு காலைத் தரையிலுமாக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்த மணியின் அருகில் உடையம்மையின் மாமன் மகன்.

தான்தான் அவளின் வருங்கால கணவன் என்றும், ஊரில் பேசுவது கேட்டு உண்மையை அறிய வந்திருப்பதாகவும் அவன் சொன்னதைக் கேட்டதும் மனத்துள் சிரித்தான் மணி.

இப்படி நேரிடையாகக் குற்றவாளியிடமே வந்து 'என்ன குற்றம் செய்தாய்?' என்று கேட்பது அவனைப் பொருத்தவரை வேடிக்கையாக இருந்தது. 'நான் அவளைத் தொட்டுட்டேன்' என்று பொய் சொன்னால்கூட அவன் நம்பி விடுவான் என்று நினைத்தான் மணி.

ஏதோ தெரியாத்தனமாக நிமிட நேர தடுமாற்றத்தில் செய்த பிழை இவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்தியிருப்பதை நினைத்து வருந்தினான்.

அவனிடம் இதை எப்படி விளக்குவது என்று உள்ளுக்குள் அசை போட்டான்.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

இருவருக்கும் முன்பே 'காதல்' இருந்து அது இப்படி ஆகியிருக்குமோ? ஒரு வேளை அவள் மேல் இவனுக்கு ஆசையிருந்தால் தாம் கழன்றுவிடலாம் என்று கூட நினைத்தான் அவளின் மாமன் மகன்.

திடீரென்று ஏதோ நினைத்தவனாக, அங்கு நிலவிய மௌனத்தை மணியே உடைத்தான். தனது வலக்கையைத் தூக்கி அவன் தலையில் வைத்து, "என் அம்மா மேல ஆணையா சொல்லுதேன். எந்தத் தப்பும் நடக்கலை. நான்தான் அவசரப்பட்டு..." என்று ஆரம்பித்து விளக்கினான் மணி. இந்தத் திடீர் சத்தியப் பிரமாணத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

மணி சொன்னதை அவன் ஏற்றுக் கொண்டானா? இல்லையா? என்பதும் அவனுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

இருவரும் அங்கிருந்து பீடி குடித்தனர். பிறகு, "நான் உங்களைப் பார்த்ததைத் தயவு செஞ்சி யார்ட்டயும் சொல்லாண்டாம்." என்ற வேண்டுகோளோடு விடை பெற்றான் அவளின் மாமன் மகன்.

ஆக்கூர் அடித்தட்டு
சோளப் பொறித்தட்டு
சொக்கநாதர் தீ தட்டு

ஆறு கற்களை மேலே போட்டு...

உடையம்மை அவனை எதிர்பார்க்கவில்லை. திடீரென்று அவள் முன் வந்து நின்றான் மாமன் மகன்.

அவளுக்கு வெட்கமும் புன்னகையும் மாறி மாறி வந்தன. இரண்டு நாட்களுக்கு முன்பே வந்த அவன் தன் வீட்டுக்கு வராததால் அடைந்திருந்த கோபமும் எரிச்சலும் இப்போது மாறியிருந்தது. அவனை நேரெதிராய்ச் சந்தித்ததும் உள்ளுக்குள் உறைபனி குளிர்.

"உள்ள வாங்க" என்றாள். சின்ன ஸ்டூலை துடைத்து உட்காரச் சொன்னாள். மடித்திருந்த வேட்டியை கீழே இறக்கிவிட்டுவிட்டு அதில் அமர்ந்தான்.

"ரெண்டு நாளக்கி முன்னாலயே வந்திருந்தீங்க..."

"ஆமா உடையம்ம... சும்மா ஒரு விஷயமா வரவேண்டியிருந்தது. அப்படியே வந்தேன். உன்னைப் பாத்தா நான் பெறவு ஊருக்கே போவ முடியாதுன்னுட்டுதான் உடனே போய்ட்டேன்."

உடையம்மாளுக்குத் தெருக்காரிகளின் மீது கோபம் வந்தது. அன்றைக்கு வாய்க்காலில் ஜாடைமாடையாய்ப் பேசியவளை வாரியலால் சாத்தலாம் போலிருந்தது.

விஷயத்திற்கு வந்தான் அவன்.

"ஏன் உடையம்ம... என்னமோ விவாரம் நடந்ததுன்னு ஊருக்குள்ள பேசிக்கிட்டாவுளே.." ஒன்றுமே தெரியாததுபோல கேட்டான்.

"... ..."

"தெருவுல உன்னய எல்லாரும் ஒரு மாதிரியா பேசுதாவோ.. ஆனா... நான் எதையும் நம்பலை..."

அவள் மௌனமாகவே நின்றாள். இப்போது திடீரென புன்னகை மறந்து சிறிதாக சோகம் குடி வந்தது அவள் முகத்தில்.

"நீ விரும்பலைன்னா வேண்டாம் உடையம்ம.. உன் மனசு வாடுனா என்னால தாங்க முடியாது. தெருக்காரன் ஆயிரம் சொன்னாலும் நான் உன்ன உயிரா நெனக்கேன். நீ பத்தரைமாத்து தங்கம். உன் மேல நான் சந்தேகப்படமாட்டேன். நீ எனக்குனே பொறந்தவ.."


அவன் புகழ்ந்துகொண்டே போக, தலையைக் குனிந்து கொண்டு நின்றாள் அவள், சோகம் மாறிய முகத்துடன். ●

கிம்ஹே தலைநகர் அயோத்தி!

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் அயோத்தியை ஆண்ட மன்னரின் இளவரசி ஒருவர், கொரியாவிலுள்ள 'காயா' நாட்டு அரசரான 'கிம் சூரோ' என்பவரை மணந்ததாக தென் கொரியர்கள் இப்பொழுது நம்புகிறார்கள். 1997ல் 'கிம் சூரோ' அரசரின் சந்ததியில் வந்த பேராசிரியர் கிம் என்பவர் அயோத்தியில் முன்பு மன்னர்களாக அரசாட்சி செய்தவர்களின் இன்றைய வாரிசான 'மிஸ்ரா' என்பவரைச் சந்தித்துப் பேசினார். கொரியாவிலுள்ள 'காயா' நாடு இப்போது 'கிம்ஹே' என்று அழைக்கப்படுகிறது. அந்நகரத்தின் தலைநகரமாக அயோத்தியைக் கருதி, அதன் அபிவிருத்திக்காக 200 கோடி ரூபாய் செலவிட கொரியர்கள் திட்டமிட்டுள்ளனராம். படத்தில் கொரியப் பிரதமருடன் மிஸ்ரா.



- ஆர். மார்க்கண்டன்




கடமை தவறாதவர்!


ஒரு பள்ளியின் ஆசிரியரான சேதுராமய்யர் என்பவர், மிகவும் கண்டிப்பான, கடமை தவறாதவராகப் பணியாற்றியிருக்கிறார். அந்த ஆசிரியர் விடுமுறை என்பதையே அறியாதவர். ஒரு நாள் மாணவர்கள், அந்த ஆசிரியரை உள்ளூர் மருத்துவமனையில் பார்க்கிறார்கள். சேதுராமய்யர், கைகளில் இறந்துபோன தன் குழந்தையோடு நிற்கிறார். குழந்தை இறந்துவிட்டதால், நம் ஆசிரியர், இன்று பள்ளிக்கு

அடி உதவுதல் போல்...!

'அடி உதவுதல் போல அண்ணன் தம்பி உதவமாட்டான்' என்று ஒரு வழக்கு உண்டு. இதன் உட்கருத்து வேறு. துன்ப காலத்தில் அண்ணன் தம்பிகள் ஒருவருக்கொருவர் உதவுவது இயல்பு. ஆனால் இறைவனின் திருவடிகளில் பக்தி பண்ணினால், திருவடிகள் உதவுதல்போல அண்ணன் தம்பி கூட உதவ மாட்டான் என்பதுதான் மெய்யான உட்கருத்தாகும்.

– வித்தக விநாயக வடிவம்மை கூறியது. : குமரி சோமசுந்தரம்





அருகில்வாடி!

சேலம் மாவட்டத்தில் உள்ள சிற்றூர் அரிகலம்பாடி! அரிகலம்நெல் கண்டு முதல் ஆனதால் அரி, கலம், பாடி என அழைக்கப்பட்ட ஊர். நாளடைவில் மருவி, அருகில் வாடி என மாறிவிட்டது.

– எஸ்.கே. மூர்த்தி

உயிர்காத்த ரோஸ்லி!

நியூயார்க்கில் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கட்டடங்கள் சமீபத்தில் தாக்குதலுக்கு உள்ளான போது 78வது மாடியில் இருந்தார் ஒருவர். பார்வையற்றவர். ஆயினும் ஆச்சர்யமான விதத்தில் உயிர் தப்பினார்! 78வது தளத்திலிருந்து கீழ் தளத்துக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தார். எப்படி?

ரோஸ்லியின் உதவியுடன்!

ரோஸ்லி?

அவர் வளர்த்து வந்த நாய்!

லாப்ரடார் வகையைச் சேர்ந்தது. வயது மூன்றரை.

– வாசுதேவன்



தே ன் கூ டு

வரமாட்டார் என்று மாணவர்கள் பேசிக் கொள்கிறார்கள். பள்ளிமணி ஒலித்த சரியான நேரத்தில், ஆசிரியர் சேதுராமய்யர் பள்ளிக்கு வந்து பாடத்தை நடத்திக் கொண்டிருக்கிறார், முகத்தில் துக்கத்தின் எவ்வித அறிகுறியுமின்றி.

நான்காவது பாடவேளை அவருக்கு ஓய்வு வேளையாக இருந்ததால், அதோடு உணவு இடைவேளையையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, வீட்டிற்குச் சென்று தன்னுடைய குழந்தையின் இறுதிக் கடனை நிறைவேற்றிவிட்டு, பிற்பகலில் மீண்டும் பள்ளிக்கு வருகிறார். இது ஒரு கற்பனையோ என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. இல்லாத தாத்தாவையும் பாட்டியையும் பலமுறை இறந்து விட்டதைப் போன்ற பொய்க்காரணங்களைக்காட்டி விடுப்பு எடுக்கிற அலுவலர்கள் மத்தியில், இப்படிப்பட்ட கடமைதவறாத ஆசிரியரும் பணியாற்றியிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பொன்னீலன் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து)
இரா. சக்கரபாணி

உண்மையானவன்!

நெரும்பச்சேரியைச் சேர்ந்த கே. சிவதாசன் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போயிருந்தார். திருடன் பூட்டை உடைத்து ஸ்டீரியோ மற்றும் மோதிரத்தைத் திருடிச் சென்று விட்டான். ஆனால் சில நாட்கள் கழித்து சிவதாசனின் ஸ்டீரியோ அழகாக பேக்கிங் செய்யப்பட்டு அவர் வீட்டு வாசலில இருந்தது. அதில் ஒரு சிறுகுறிப்பு... "பாட்டு கேட்க எடுத்துச் சென்றேன். பயன்படுத்தியபின் திரும்ப வைத்து விட்டேன்."

இப்படிக்கு....
உண்மையானவன்.
தகவல்: ராஜிராதா

அடி உதவுவது போல்...


அமெரிக்காவில் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் உள்ள ஒரு ஹோட்டலின் பெயர் 'மெக்ஸிகன் ரெஸ்டாரண்ட்.' இந்த ஹோட்டலின் பெயர் மற்றும் அதன் சின்னத்தையும் கையில் பச்சைக் குத்திக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் இந்த ஹோட்டலில் இலவசமாக 'மதிய உணவு' மட்டும்(!) சாப்பிடலாம்!

— சி. மணி

ZOOவுக்கு முன்னோடி.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீன அரசனுக்கு வினோதமான ஆசை தோன்றியது. அந்த ஆசையின் விளைவாக தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து பல விதமான மிருகங்களைக் கொண்டு வரச் செய்தான். அவற்றைத் தனது அரண்மனைக்குப் பக்கத்திலேயே தோட்டத்தில் வைத்து வளர்த்தான். அந்தத் தோட்டத்தை 'அறிவுத் தோட்டம்' என்றே அழைத்தான். இதுதான் மிருகக்காட்சிசாலை என அழைக்கப்படும் ZOOவுக்கு முன்னோடி.

– ஆர்.ஆர். பூபதி





வெங்கட்ராமன்





நமக்குத் தெரிந்தெல்லாம், செம்மண், கரிசல், களி மண், வண்டல் இத்யாதி... ஆனால் வானவில்லின் ஏழு வண்ணங்களிலும் கிடைக்கிறது இந்த மண். அட! நம்புங்கள்! அதன் பெயர் பாலிமர் டெக்கோ சாயில். திரு நெல்வேலி அல்வா என்றெண்ணி அள்ளிச் சாப்பிடத் தோன்றும், இந்த கொழுக், மொழுக் ஜெல்லிமண் ஒரு பெட்ரோலிய பைபிராடக்ட். இதை வைத்துக்கொண்டு என்ன செய்து விட முடியும் என்றால், இதில் செடிகளை வளர்த்துக் காட்ட முடி யம் என்று சாதிக்கிறார்கள் கே.வி. சகோ தரர்கள்.

வீட்டின் ஜன்னல் வழியே கைநீட்டும் செடிகளோடு சினேகம் பாராட்டுகிற வாய்ப்பு, அபார்ட்மெண்ட் வாழ்க்கையில் கிட்டவில்லையே என்று வருந்துகிறவர் களுக்கு வரப்பிரசாதம் இந்த டெக்கோசா யில் தாவரங்கள். 'சூரிய வெளிச்சம் தேவைப்படாத 'சிங்ரோனியம்' வகையைச் சேர்ந்த பத்துக்கும் அதிகமான அழகிய செடிகள், இந்த டெக்கோஜெல்லியில் வேர் விட்டு வளர்கின்றன. நான்கு அங்குலம், ஆறு அங்குலம் ஆகிய உயரங்களில், அழகிய தோற்றம் கொண்ட கண்ணாடி ஜார்களில், நீங்கள் விரும்பும் பாலிமர் மண்ணை நிரப்பி அதில் செடிகளை வளர்த்துக்கொள்ளலாம். உங்கள் மேசை, தொலைக்காட்சி, குளியலறை ஜன்னல் என்று விரும் பும் இடத்தில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு விஷயத்தை நீங்கள் மறந்து விடக்கூடாது. பாலிமர் மண்ணில் வளரும் தாவரம், உயிருள்ள செடி. எனவே அதற்குத் தண்ணீர் விடுவதும், புதிதாக தோன்றும் கிளைகளை மறக்காமல் கத்தரித்து விடு

வண்ண வண்ண



• கப்போ ப்ளாண்ட்ஸ்



• டெக்கோ சாயில் தாவரங்கள்

வதும் மிக அவசியம்.

ஆர்வ மிகுதியில் தினசரி, தண்ணீர் விட்டால் முடிந்தது. கண்ணாடி ஜார் நிரம்பி வழிந்து, அதிலிருந்து பாலிமர் மண் வெளியேறி விடும். இந்த வகை மண் ஈரப்பதத்தை நீண்ட நேரம் காப்பாற்றி வைத்திருக்கும் தன்மை கொண்டது. எனவே மூன்று நாட்களுக்கு ஒருமுறை, ஒரு தேக்கரண்டி அளவு தண்ணீர் விட்டாலே போதும்.

கப்போ பிளாண்ட்ஸ் என்று இன்னொரு வகை. நான்கரை அங்குல உயரமுள்ள சின்னச் சின்ன பிளாஸ்டிக் பூந்தொட்டிகளில், கரிசல் மண் நிரப்பி அதில் செடிகளை வளர்த்துத் தருகிறார்கள். தொட்டியில் இருக்கும் மண் தெரியாமல் இருக்க, அதில் மார்பின் ஜல்லிகளைப் போட்டு மறைத்து விடுவது மேலும் அழகு கூட்டுகிறது. கப்போ பிளாண்டுகளுக்குத் தினசரி ஒரு தேக்கரண்டி நீர் விட்டால் போதும். இதை டைனிங் டேபிள், தொலைக்காட்சி பெட்டி, குளிர்சாதனப் பெட்டி என்று உள் அலங்காரத்திற்கு அழகு கூட்டும் எந்த இடத்திலும் வைத்துக்கொள்ளலாம். இதன் விலை ரூபாய் முப்பது. டெக்கோ பாலிமர் ஜாரின் விலை வெறும் எழுபத்தைந்து.

"இன்ஸ்கேப் கார்டன் என்ற பெயரில் கடந்த ஆண்டு நர்சரி தொடங்கினோம். ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள எங்கள் தோட்டத்திற்கு, நேரடியாக வந்து வாங்கிச் செல்லும் வாடிக்கையாளர்கள் தவிர கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் செடிகளை சப்ளை செய்து வருகிறோம். வீட்டில் செடி வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், அதைப் பராமரிக்க வேண்டுமே என்ற பயம் காரணமாக பலரும் செடி வளர்ப்பதில்லை. தாவரங்களோடு நமக்கு தோழமை ஏற்பட்டால், மனம் சாந்தமடையும். சந்தோஷப்படும். எனவேதான் இடத்தை அடைக்காத, பராமரிப்பு குறைந்த டெக்கோ மற்றும் கப்போ பிளாண்டுகளை ஆராய்ச்சி செய்து உருவாக்கினோம்" என்கிறார் வெங்கட்ராமன்.

"யாருக்காவது பிறந்த நாள் என்றால் ஒரே நாளில் வாடி விடுகிற பூங்கொத்து கொடுத்து வாழ்த்துகிறோம். அதன் விலை குறைந்தது நூறு ரூபாய். அப்படிப்பட்ட தருணங்களில் உயிருள்ள ஒரு செடியைக் குறைந்த செலவில் ஏன் பரிசளிக்கக் கூடாது என்பதுதான் எங்கள் கேள்வி" என்கிறார்கள் கே.வி சகோதரர்கள். நியாயம்தானே!

மண்ணிலே...

சந்திப்பு:
ஸ்ரீசக்கரம்
படங்கள்:
ஸ்ரீஹரி

காலம்: கலி. ஆண்டு: கிலியாண்டு. நேரம்: யமன் பிஸியான நேரம். எருமையை விட்டு ஏரோப்ளேனைத் தூக்கிக் கொண்டு அடுக்குமாடிக் கட்டடங்களுக்குள் பறந்து கொத்துக் கொத்தாக உயிரைக் கொத்துவதும் பவுடர் வடிவில் கும்பலாக மாய்ப்பதுமாய் அவன் 'ஹோல்சேல்' வியாபாரத்தில் இறங்கி விட்டிருந்த பொல்லாத நேரம்.

அழகிய ஆபிஸின் அறையில், அகோரத் திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. "போர்ட் மீட்டிங் நடக்கிற ரூம்ல மொத்த பேரும் அழி யணும். திடீர்னு கவரைத் திறந்து வைச்சு ஃபேனை போட்டுருவேன்'' – மினுக்கென மகேஷ் கண்கள் சிரித்தன.

"அப்புறம்?" குழந்தை போல் கேட்டான் சீனு.

"அப்புறமென்ன? மூச்சு இழுத்த எல்லா பங்காளிகளும் ரெண்டு மூணு நாள்ல க்ளோஸ். எல்லா கம்பெனிகளும், எஸ்டேட்களும், இந்த மகேஷுக்குச் சொந்தமாயிடும்" மார் தட்டி னான்.

"அப்படி.... என்ன... விரோதம்?"

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம்! நல்ல, நல்ல.. சுத்தமான ஆந்த்ராக்ஸ் தர முடியுமா? அதச் சொல்லு!'' பிரகாஷ் ராஜ் நெடி வீச விறுவிறுவென இருந்தது பேச்சு.

"முடியும். அஞ்சு லட்சமாகும்" பசையுள்ள பார்ட்டி என்று தெரிந்தே வந்திருந்தான் சீனு. அவனுக்கும் இது முதல் வியாபாரம். தொழி லுக்குப் புதுசு. இந்தத் தொழிலே நியூ எக்கா னமி.

"அஞ்சென்ன அம்பதுகூட தரத் தயார். அவங்க எல்லாரும் அழியணும். நான் ரோஸி யைக் கட்டிக்கிட்டேன்னு குடும்பத்திலே யிருந்து தள்ளி வைக்கிறாங்களாம்..."

"தள்ளி வைக்கட்டுமே.."

"முட்டாள்! குடும்பம்னா குடும்பமில்ல. குடும்ப பிஸினஸ். எங்க தாத்தா ஆரம்பிச்சு விருட்சமா வளர்ந்த நாநூறு கோடி ரூபா பிசினஸ்..."

"யப்பா!'' பன்னாடை போல இவ னிடம் அஞ்சு லட்சம் கேட்டுத் தொலைத் தோமே என்று வருத்தப்பட்டான் சீனு.

"அபேஸ் பண்ணப் பார்க்கிறாங்க.. என்னை இளிச்சவாயன்னு நினைச் சிட்டாங்க!'' சீனு நாநூறு கோடி தாக்கத்திலிருந்து மீளவில்லை.

''ஏய், நீ என்ன ஒட்டு தாடியா வைச்சிருக்க?'' சட்டென உலுக்கியது அவன் கேள்வி. மீண்டான் சீனு.

''ஆந்த்ராக்ஸ் விக்க வர்றவன் ஒரிஜினல் முகத்தைக் காட்டுவானா?'' சமாளித்தான்.

"பார்த்தியா, எப்படி நான் கண்டுபிடிச் சேன். என்னை இளிச்சவாயன்னு நினைக் கறாங்க. ரோஸிகிட்ட நான் கவுந்திட்டேனாம்."

"ரோஸி?"

"'ஷட் அப்! எப்ப தருவே பவுடர் அதச் சொல்லு..." மறுபடியும் சீரியஸானான் மகேஷ்.

"நாளைக்கு?"

"குட். கோபாலைத் தயாரா வைச்சிருக்கேன். அவன்தான் போர்ட் ரூமிலே போய்க் கவரைத் திறந்து ஃபேனை போடப் போறான்..."

"கோபால்?"

"என்னோட ஆபீஸ் ப்யூன். 'மனித பவுடர் குண்டு!" சொல்லி சப்தமில்லாமல் சிரித்தான் மகேஷ். "இதச் செய்ய அவனுக்குப் பத்து லட்சம், டென் லாக்ஸ் தரேன்."

"அப்ப நீங்க போர்ட் மீட்டிங்கில இருக்க மாட்டீங்க."

'முட்டாள்! நீயும் என்னை இளிச்சவா யன்னு நினைச்சிட்டே. நான் பாதி மீட்டிங்கில டாய்லெட் பக்கம் நகர்ந்து அப்படியே வெளியே போனதும் கோபால் உள்ள வரு வான்.. அப்புறம் தெரியும் மகேஷ் யாருன்னு..."


தீவிரம் நடக்கவிருக்கும் போர்ட் ரூமை ஒருமுறை பார்த்தபடி வெளியேறினான் சீனு.

குறித்த சுபமுகூர்த்தத்தில் சிறிய பொட்டலமும் பெரிய பொட்டலமும் கை



மாறின. மகேஷ் பெரிய மனுஷன் தான். ஆயிரம் ரூபாய் ஐந்து கட்டுகளை யாருக்கும் சந்தேகம் வராதபடி முடிந்த வரை சிறிதாக்கியிருந்தான். டபுள் பிளாஸ்டிக் பாக்கிங். ''திறந்து கிறந்து பார்த்திடாதீங்க'' என்று எச்சரித்து ஆந்த்ராக்சை தந்தான் சீனு.

அடுத்த கட்டமாக ஒட்டு தாடி மீசை இல்லாமல் ஒரிஜினல் சீனுவாக மும்பை போகும் ரயிலில் ஏறிக் கொண்டான்.



சீனுவும் பாதிக்கப்பட்ட ரகம்தான். மகேஷை அவர்கள் குடும்பத்தில் 'இளிச்சவாயன்' என்று சரியாக எடை போட்டிருந்தால் சீனுவிற்கு அவன் வீட்டில் கையாலாகாதவன், தண்டச்சோறு, கோவில் மாடு, புருஷ லட்சணம் என்றெல்லாம் பட்டமளித்திருந்தார்கள். இருவருக்கும் நான் 'ஒரு இது' என்பதை நிரூபிக்க வேண்டிய நிர்பந்தம் ஒரு வெறி. தன் வீட்டாருக்குச் சீனு யார் என்பதைக் காட்டவே ஆந்த்ராக்ஸ் முயற்சி. கெட்டியாகப் பிடித்திருந்த ஐந்து லட்சத்தில் மும்பை சென்று, ஏதாவது பிசினஸ் ஆரம்பித்து செட்டிலாகி திட்டம் போட்டிருந்தான். வீட்டிற்கு மெதுவாக சொல்லிக் கொள்ளலாம்; ஜெயித்த பின் யாரறிவார்? ஒருவேளை மகேஷ் தாத்தா போல பல கோடி மதிப்புள்ள தொழிலதிபராகக்கூட வரலாம் என்றெல்லாம் அவன் சிந்தனை குதூகலத்தில் ஓடியது.

கூடவே 'பக் பக்' தொல்லை வேறு. ஐந்து லட்சத்திற்காக இப்படி ஒரு அநியாயம் செய்யலாமா? இந்நேரம் போர்ட் மீட்டிங் ஆரம்பித்திருக்கும். பத்து பதினைந்து நிமடங்களில் மகேஷ் வெளியேறி கோபால் நுழைவான். களேபரம் தொடங்கும்... நினைத்துப் பார்க்கவே பகீரென்றது அவனுக்கு.

ஆபீஸில் திட்டப்படி, ''எக்ஸ்க்யூஸ் மீ ஜென்டில்மென்...'' என்று மகேஷ் அந்த ரூமிலிருந்து வெளியேற, கோபால் கவரோடு நுழைந்தான். யாருக்கும் தெரியாமல் ஃபேனைத் தட்டினான்.

சிறிது நேரத்தில் ஒரே அமளி துமளி. போர்ட் ரூம் முழுதும் பவுடர் மண்டலம். அலறி அடித்து வெளியே ஓடி வந்தான் கோபால். பலரும் பின் தொடர, அதே சமயம் கீழே தெருவில் நீண்ட ஊர்வலம். "கந்தனுக்கு அரோகரா! முருகனுக்கு அரோகரா! குமரனுக்கு அரோகரா! வேல் வேல் வெற்றிவேல்!" என ஊர்வலம் எழுப்பிய கோஷத்தில கோபால் கூச்சல் அமுங்கிப் போனது.

எந்தவித பதற்றமுமின்றி ரயில் ஓட, பழனி விபூதிக்கு ஐந்து லட்சம் அதிகமோ? என எண்ணினான் சீனு. அதேசமயம் ஆந்த்ராக்சை அஹிம்சை முறையில் பயன்படுத்தியதற்காக தன்னை மெச்சிக் கொள்ள வேண்டுமெனவும் தோன்றியது. இளிச்சவாயனா? என்று அடிக்கடி தன்னைக் கேட்டுக் கொண்டிருந்த மகேஷ் நிலையை நினைத்துப் பார்த்தபோது அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. தன்னை மறந்து சிரித்தான்.

சீனு சிரிக்கலாம். மகேஷ் கொடுத்தவை அரசாங்க நோட்டுக்கள் அல்ல என்று தெரிய வரும் வரை!



பாட்டுக்கு வயது 38; கேட்டவருக்கு 18!

எல்லாமே எக்ஸ்பிரஸ் வேகம். உணவு கூட ஃபாஸ்ட்புட். இதே வரிசையில்தான் தாலாட்டும் மெலடிகளைக் குரல்வளை நெறித்துக் கொன்றுவிட்டு, திருடன் மாதிரி நுழைந்திருக்கிறது, செவிகளில் அமிலம் ஊற்றும் ஃபாஸ்ட் மியூசிக். இந்த ஆதங்கக் காயத்திற்கு மயிலிறகால் மருந்து தடவி, மந்த மாருதத்தால் நீவி விடுவதுபோல வந்திருக்கின்றன தமிழில் முதல் முறையாக கஜல் பாடல்கள்.

தமிழில் கஜல்? நம்புங்கள்! பழமை மாறாத புதுமையோடு, கஜலின் கனிவான குழைவு, நெளிவுகளோடு மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி. மெட்டமைத்திருக்கும் இந்தப் பாடல்களை 'மியூசிக் டுடே' வெளியிட்டிருக்கிறது.

கஜல் என்றால் கவிதைக்கும் அதிக முக்கியத்துவம் ஆயிற்றே. கவிஞர் காமகோடியான் எழுதிய பாட்டுக்களுக்குத் தான் மெட்டுப் போட்டிருக்கிறார் எம்.எஸ்.வி. அதாவது கவிதைகளுக்குக் கஜல் இசை!

'சங்கீதம் சந்தோஷம்' என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடல்களை, ஒலிப் பேழைக்காக பாடிய, எஸ்.பி.பி., ஸ்ரீநிவாஸ், சித்ரா, கல்பனா, எம்.எஸ்.வி. அவரது சீடர் அனந்த நாராயணன் ஆகியோர் காமராஜர் அரங்கில் அவற்றை அரங்கேற்றியபோது ஒவ்வொரு பாடலின் முடிவிலும் தொடர்ச்சியாய் ஐந்து நிமிடம் கரவொலி.

"மெலடியின் மொத்த உருவம் கஜல். அதை அறுபதுகளிலேயே நான் சினிமாவில் முயன்றிருக்கிறேன். 'மன்னவன் வந்தானடி', 'நிலவே என்னிடம் நெருங்காதே' எல்லாம் கஜல் டைப்தான். சமீபத்தில் ஒரு இசைக் கச்சேரி நடத்த திருச்சி சென்றிருந்தேன். நிகழ்ச்சியின் நடுவில் ஒரு இளைஞன் என்னிடம் வந்தான். "எனக்காக, 'இந்த மன்றத்தில் ஓடி வரும்' என்ற உங்கள் பாடலை பாட முடியுமா?" என்றான். அவன் விரும்பிக் கேட்ட பாடலுக்கு முப்பத்தெட்டு வயது. விரும்பிக் கேட்டவனுக்கோ பதினெட்டு வயது. காலம் கடந்து வாழ்பவை மெலடிகள் தான். இசையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்தேன். அதில் ஒரு சதவீதமாவது இந்த தமிழ் கஜல் பாடல்களால் நிறைவேறும் என்று நினைக்கிறேன்'' என்று பேசிவிட்டு பாடத் தொடங்கினார் எம்.எஸ்.வி.

காமராஜர் அரங்கம் மூன்று மணி நேரமும் எம்.எஸ்.வி.யின் மந்திர விரலுக்கும், குரலுக்கும் கட்டுப்பட்டுக் கிடந்தது.

— ஸ்ரீ சக்கரம்




• வீரமணி



மும்பைக்குச் சவால் விடும் சென்னை கேங்வார்!

சென்னை திருவல்லிக்கேணியில் சந்தடி அதிகமில்லாத தெரு அது. திண்ணைகளும், முற்றமும் மாறாத பழைமை அழகோடு, அங்கொரு ஓட்டு வீடு. மும்பை, அமெரிக்கா என்று பெற்ற பிள்ளைகள் பிழைப்புத் தேடி புலம் பெயர்ந்து போய்விட்ட தனிமை, எழுபத்தைந்தைத் தொடும் முதுமை, இரண்டையும் பொருட்படுத்தாமல், அந்த வீட்டில் தைரியமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள் ஒரு முதிய தம்பதி. மதியம் உண்ட களைப்பிற்காகக் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் என்று தலைசாய்த்த ஒரு பிற்பகலில், பத்துப் பதினைந்து பேர் திபுதிபுவென உள்ளே நுழைகிறார்கள். அனுமதியில்லாமல் நுழையும் அவர்களைக் கண்டு மிரண்டு போய், "யார் நீங்க? என்ன வேணும்?" என்று ஈனக்குரலில் கேட்கிறார்கள். இரண்டு பேர் மூதாட்டியின் வாயில் பிளாஸ்திரி கொண்டு ஒட்டுகிறார்கள். இன்னுமிருவர், பளபளக்கும் பட்டாக்கத்தியைச் சட்டைக்குள்ளிருந்து உருவி அதைப் பெரியவரின் கழுத்தில் வைத்து மிரட்டுகின்றனர். உயிருக்குப் பயந்து, டைப் செய்யப்பட்ட ஒரு பத்திரத்தில் கையெழுத்துப் போடுகிறார். அந்த வீட்டை விற்றுக் கொடுக்கும் பவர் ஆஃப் அட்டார்ணிக்கான உரிமையைத்தான், கையெழுத்தாக அவர் கத்திமுனையில் போட்டார். அதன் பிறகு பதினைந்து லட்சத்திற்கு அந்த வீட்டை விற்று, ஐந்து லட்சத்தை மட்டும் அந்த தம்பதியிடம் கொடுக்கிறது அந்தக் கும்பல்.

'மும்பை மாபியா கும்பலுக்கு நாங்கள் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல' என்று சொல்லும் விதமாக, சென்னை தாதாக்களின் சமீபத்திய கேங்வாருக்கு உயர்நீதிமன்ற வளாகம் கூட தப்பவில்லை. சென்னையின் ஏரியாக்களைப் பிரித்துக் கொண்டு அந்தப் பகுதிகளின் குறுநில மன்னர்களைப் போல செயல்படும் இந்த ரவுடிகளின் வேர்களைத் தேடிப் புறப்பட்டதில் நமக்குக் கிடைத்த அதிர்ச்சியூட்டும் ஒரு நிஜசோகம்தான் அந்த முதிய தம்பதியின் உண்மைக் கதை.



கோடிக் கணக்கில் புரளும் பணமுதலைகளோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்து கொடுத்துவிட்டு 'கட்டிங்'(மாமூல்) வாங்குவதுதான் இவர்களின் பிரதான பிழைப்பு. ஒரே பகுதியைச் சேர்ந்த இன்னொரு புது தாதா கொஞ்சம் பிரபலமானவுடன், "எல்லாவற்றையும் இனி நான் பார்த்துக் கொள்கிறேன், அவனுக்கு எதுக்கு கட்டிங்" என்று பழைய தாதா பிழைப்பில் கைவைத்ததும் கோஷ்டி மோதலுக்கான விதை விழுந்து விடுகிறது. இது போன்ற கோஷ்டி மோதலில் யார் கை ஓங்குகிறதோ அவர்களுக்கு அரசியல் ஆதரவு தானாகவே கிடைத்து விடுகிறது.

மேற்படி சிறப்புச் சேவை தவிர 'மட்டை' ஆக்குதல் (கொலை செய்தல்), 'வெட்டி'வுடுதல் (கட்டைப் பஞ்சாயத்து), அபீட் (ஆள்கடத்தல்), அசால்ட் (கை, கால் வெட்டுதல், கொலை முயற்சி), கஞ்சா, அபின், ஹெராயின் உள்ளிட்ட போதைமருந்து வியாபாரம், போலி குளிர்பானம், மதுபானம் தயாரித்தல் போன்றவைதான் இவர்களின் பிரதான தொழில். ஒவ்வொன்றுக்கும் ஒரு ரேட்!

இவர்கள் கையாளும் வீச்சரிவாள் ஆகட்டும், ரிவால்வர் ஆகட்டும் எந்த ஆயுதத்தையும் 'பொருள்' என்றுதான் அழைப்பார்களாம். எல்லாவிதமான பேரங்களையும் ப்ரீபெய்டு செல்போன் மூலம்தான் செய்கிறார்களாம். டீல் லீக் ஆகிவிட்டது என்று தெரிந்தால், உடன் அந்த கார்டை முறித்துப் போட்டு விட்டு, வேறொரு பெட்டிக் கடையில் புதிதாக ஒரு கார்டை வாங்கிச் செருகிக் கொண்டு 'பணி'யைத் தொடர்கிறார்கள்.

இவர்களுக்குத் தகவல் கொடுப்பதற்கென்று காவல் துறையின் இன்டெலிஜன்ஸ் செக்ஷனிலேயே ஆட்கள் (IS) உண்டாம்.

கஞ்சா போன்ற லாபம் குறைவாகக் கிடைக்கும் போதைப் பொருளை விட்டு விட்டு, பிரௌன் சுகர், அபின், ஹெராயின், கொக்கெய்ன் போன்ற காஸ்ட்லி சரக்குகளை, விலை மாதர்கள், சிறுவர்கள், சிறுமிகள், பெட்டிக்கடைக்காரர்கள் மூலம் விற்றுத் தீர்க்கும் இவர்கள், இந்த மருந்துகளை எதைக் கொண்டு அளந்து விற்கிறார்கள் என்று தெரிந்தால் அதிர்ந்து போவீர்கள். சுண்டு விரலில் வளர்க்கப்பட்ட கால்செண்டி மீட்டர் நகத்தால் போதை பவுடரை ஒருமுறை அளந்து, அலுமினிய காகிதத்தில் போட்டு மடித்துக் கொடுப்பதற்கு ரூபாய் முந்நூறு. கட்டை விரல் நகமெனில் ரூபாய் ஐந்நூறு. பவுடர் மருந்துக்கு அடிமையான பலரைக் கொண்டு, இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களைத் திருடிவரச் செய்து விற்று விடுவதையும் இப்போது தொழிலுடன் இணைத்துக் கொண்டிருக்கிறது தாதா கும்பல்.

இப்படி ராஜ்யம் நடத்திக் கொண்டிருந்த தாதாக்களுக்கு, அரசியல் தொடர்புகள் ஏற்பட்டதுதான் தாமதம், புறம்போக்கு நிலத்தை மடக்கி விற்பது, நில ஆக்கிரமிப்பு செய்து அதில் குடிசை போட முன்வரும் ஆட்களிடம் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை (இது அந்தப் பகுதி ஆளும் கட்சியின் மாவட்டச் செயலாளர் நிர்ணயிப்பது) வாங்கிக் கொள்வது போன்ற 'கித்தாப்பு வேலை'களில் ஈடுபடும் இவர்கள்,

'நமக்கு அரசியல் தொடர்பு மிகப் பெரிய பலம்' என்று உணர்ந்து கொண்ட பிறகு மாவட்டச் செயலாளர்களில் தொடங்கி, அமைச்சர்கள் வரையிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு சம்பவத்தை உதாரணமாகச் சொன்னால் அதையும் நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். அயோத்தியா குப்பம் வீரமணியின் தம்பி, வீரகுமாரை எதிர் கோஷ்டி கொலை செய்தபிறகு, அவருக்குக் குப்பத்து முனையில் சிலை வைக்க ஏற்பாடுகள் செய்து, விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அப்போதைய அ.தி.மு.க. அமைச்சர் எஸ்.டி.எஸ்., காலஞ் சென்ற நெடுஞ்செழியன் ஆகியோர் சிலையைத் திறந்து வைக்கிறார்கள் என்று போஸ்டர் எல்லாம் ஒட்டப்பட்டதாம்.

கடைசி தருணத்தில் மத்திய உள்துறைக்குத் தகவல் பறக்க, சிலை திறக்கும் விழா ரத்து செய்யப்பட்டதாம். இப்படித் தொடங்கிய அரசியல் தொடர்புகள், கட்சி ஊர்வலத்தில் புகுந்து தொண்டர்களை அரிவாளால் வெட்டி, பத்திரிகையாளர்களைப் பந்தாடுகிற துணிச்சலைக் கூட கொடுத்துவிட்டது. இத்துடன் கோலிவுட்டிற்குள் புகுந்து நடிகர்களைக் கடத்திப் போவதையும் மும்பைக்கு இணையாக ஆரம்பித்துவிட்டார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் காளிமுத்து சென்னை காவல்துறை ஆணையாளராக இருந்தபோது, கட்சிப்பாகுபாடு இல்லாமல் பல ரவுடிகளைக் 'குண்டாஸ்' பிரிவில் சிறையில் அடைத்ததைப் போலவே, முத்துக்கருப்பன் பதவியேற்ற பிறகும் பல தாதாக்களை குண்டாஸ் பிரிவில் அடைத்தார். இதில் ஆயோத்தியா குப்பம் வீரமணி மட்டும் கவனிக்கப்படாதது. அவருக்கு அரசியல் மட்டத்தில் இருந்த செல்வாக்கை உறுதிப் படுத்தியது. இப்போது உயர்நீதிமன்ற வளாகத்தில் ரவுடி சண்முகம் கொலை முயற்சிக்குப் பிறகுத் தும்பைவிட்டு விட்டு வாலைப் பிடிக்கும் காவல்துறை, வீரமணி வேட்டையில் அதி தீவிரம் காட்டி வருகிறது. அதற்குக் காரணம் கூட வீரமணியைப் பிடிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் பாரபட்சம் பார்க்காத அதிரடி காவல் துறை அதிகாரி சைலேந்திரபாபு என்கிறது காவல் வட்டாரம். கடந்த ஆண்டு, அடையாறு ரேமாண்ட் ஷோரூம் அதிபர் சுனிலைக் கடத்தி ஒரு கோடியே எண்பதுலட்சம் பணயத் தொகை கேட்ட 'டைசன் சீனு'வையும் அவனது கும்பலையும் மடக்கிப்பிடித்து முட்டிக்கு முட்டி தட்டி உள்ளே தள்ளிய இவர், வீரமணியையும் விரைந்து பிடிப்பாரா? அவரையே சந்தித்தோம். "சண்முகம் மீதான கொலை முயற்சியின்போது அவரைத் தாக்கியவர்கள் வந்த வாகனத்தின் தவறான எண்ணை எங்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். எனவே நாங்கள் கொஞ்சம் திசை திரும்பும்படி ஆகிவிட்டது. ஆனாலும் அயோத்தியா குப்பத்திற்கு விரைந்து வீடுவீடாக வீரமணியைத் தேடினோம். அவரது வீட்டை சீல் வைத்து, அவர்கள் பயன்படுத்திய சபாரி, குவாலிஸ் இரண்டு வாகனங்களைப் பறிமுதல் செய்திருக்கிறோம். இந்தக் கட்டுரை வெளிவரும் போது அநேகமாக அவரைப் பிடித்திருப்போம்" என்று தீர்க்கமாய்ச் சொல்கிறார்.

— கட்டு

படம்: ராஜன்

வட்டத்தின் முடிவு

டைமண்ட் இவான்ஸ். இது ஒரு தீவோ துறைமுகமோ அல்ல. ஒரு மனிதனின் பெயர். இந்தப் பெயரில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலோ இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ யாரேனும் டென்னிஸ் ஆட்டக்காரன் இருந்திருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல. டென்னிஸைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ரொம்ப நாட்கள் டென்னிஸும் பேட்மிண்டனும் ஒன்றுதான் என நினைத்திருந்தேன். பிறகு பேட்மிண்டனைவிட டென்னிஸ் மதிப்புக்கூடியது என்பது தெரிந்துவிட்டது. ஒரு விளையாட்டுக்கு ராக்கெட் தேவைப்படுமெனில் அது மதிப்புக்கூடியதுதான்.

டைமண்ட் இவான்ஸ் டென்னிஸ் விளையாடுவான் என்று யாராவது கூறினால் அதை நம்பலாம். அந்த அளவு உடல் பொலிவு மிக்கவன்.

எனக்குத் தெரிய இந்தக் குண்டடம், பல்லடம் வட்டாரங்களில் டென்னிஸ் கோர்ட்டுகள் கிடையாது. ஆனால் இவான்ஸ் ஏதாவது ஒரு கோர்ட்டுக்காவது தகுதியானவன்தான். இவான்ஸ். டைமண்ட் இவான்ஸ் டென்னிஸை எப்படி நேரடியாகப் பார்த்ததில்லையோ அவ்விதமே வைரமாகிய 'டைமண்'டையும் நான் பார்த்ததில்லை. ஒளி வீசுமாம்; டாலடிக்குமாம்; தகதகக்குமாம்; மின்னுமாம்; ஜொலிக்குமாம்; பெண்கள் விருப்பமாம்; அதனாலேயே ஆண்கள் விருப்பமாம். கண் கவருமாம்; காசு கவருமாம். மதிப்போ ஆயிரங்களாம்; லட்சங்களாம். புத்தகங்களிலும் வெண் திரைகளிலும் பார்த்தது. ஹூம். வைரம் அணிந்த ஒரு சீமாட்டியாவது வாழ்வில், ஏன் ரோட்டில் கூட எதிர்ப்பட்டதில்லை.

நான் சந்திப்பதெல்லாம் டைமண்ட் இவான்ஸ் போன்ற ஆட்களைத்தான். சொன்னால் சிரிக்க மாட்டீர்கள் என்று நம்புவதால் சொல்கிறேன். எனக்கும் அந்த ஆளுக்குமான பிரச்னை, மிஞ்சிப் போனால் வாரம் ஒன்றரை ரூபாய் பெறுமானம் உடையது.

பார்த்த முதல் கோணத்திலேயே எனக்கு இவான்ஸைப் பிடித்துப் போய்விட்டது. ஐந்தடி எட்டு அங்குலமோ ஒன்பது அங்குலமோ இருப்பான். காணாமல் போகாமல் இன்னும் கண் முன்னே இருப்பதால் துல்லியமான உயரம் தெரியவில்லை. ஒன்று மட்டும் உறுதி. போதுமான அளவு சில்லறையாக இல்லாது பஸ் ஏறுகிற பயணியின் முன் பனை உயரத்துக்குக் காட்சி அளிக்க வல்லவன்.



மந்திரகிரிக்கும் குண்டடத்துக்கும் டிரிப் அடிக்கிற 11A பேருந்தில் ஒரு நாளில் இவான்ஸ் அளவு வசீகரமான ஆட்கள் ஐவர் அல்லது அறுவர் பயணித்தால் அதிசயம். அவனது அழகுக்கு 'சபாரி சூட்' அணிகிற அதிகாரியாகவாவது ஆகியிருக்க வேண்டும். கலர் கலராய் டிக்கெட் கிழிக்கிற கண்டக்டராய் அவன் ஆகியிருப்பதைப் பார்த்தால் உலகம் அழகை மையம் கொண்டு இயங்கவில்லை என்றாகிறது.

இவான்ஸை அவனது அழகுக்காகவே 'அவர்' என்று எழுத வேண்டும். ஆனால்



வந்தேன். இரண்டே கால் ரூபாய் டிக்கெட். இவான்ஸின் டுட்டியில் எனது முதல் பயணத்திலேயே அவன் தனது வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டான். செயல்படுத்தாமல் இருந்தால் வித்தை மழுங்கிவிடும்.

இரண்டரை ரூபாய் கொடுத்த எனக்கு அவன் மீதிக் கால் ரூபாயைத் தரவில்லை. அதை நான் பொருட்படுத்தவில்லை. பொருட்படுத்தினால் விளைவது துயரமின்றி லாபமில்லை.

நாலணா என்பது ஒரு ஸ்டிக்கர் பொட்டு, அல்லது நெற்றிப் பொட்டுக்கு ஆன மதிப்பே உடையது.

தினந்தோறும் நாலணாக்களை, எப்போதாவது முக்கால் ரூபாயை அவன் மறுத்து வந்தான். மீதிச் சில்லறைக்காக கை நீட்டுகிறபோது "நாலணா இருந்தா குடுங்க ஒரு ரூபாயா வாங்கிக்கலாம்" என்பது அவனது சுலோகமாயிருந்தது.

அவனுக்கு நாலணா சில்லறையாகக் கொடுத்து எனது பைசாக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஒன்றே முக்கால் ரூபாய் பெறுமதி உள்ள சிகரெட்டுகளை பஸ் ஸ்டாண்டில் வாங்கி ஊதினேன்.

க.சீ. சிவகுமார்

என்னை விடவும் வயது குறைந்தவன். சில்லறை விஷயத்தில் வெல்லப்பட முடியாதவன் என்பதாலேயே அவன் என எழுதலாயிற்று.

தூங்கி எழுந்த பின் முகம் கழுவாமலே கூட அவன் அழகாகத்தான் இருப்பான். வயசு இருந்தால் நேற்றைக்கெல்லாம் முப்பது தாண்டாது. பிரயாணிகளை அவன் நடத்துகிற தேர்ச்சி அளப்பரியது. அவன் 'கருவிலே திரு'வாக அதைப் பெற்றிருக்கக் கூடும். எனக்கு அலுவலகம் மந்திரகிரியில். குண்டடத்தில் தங்கிக்கொண்டு தினம் டவுன் பஸ்ஸில் போய்

நாலணாவையோ முக்கால் ரூபாயையோ பெறுவதற்கு இப்படி ஒன்றே முக்கால் ரூபாய் செலவும் செய்து நுரையீரலையும் கெடுத்துக் கொள்வது உங்களுக்கு வினோதமாகத் தோன்றலாம். ஆனால் மனித மனம் செயல்படும் விதம் புகையைப் போன்றதே. அதன் ரூபமும் திசையும் யாரே அறிவர்? எதிரிகள் எங்குதான் இல்லை? சிலபோதுகளில் ஒன்றே முக்கால் ரூபாய் போக மீதி நாலணாவைக் கடைக்காரர்களே மறந்து விடுவார்கள். என்னைத் தவிர வேறு யாருமே நாலணாவை மதிப்பதில்லை என அப்போது நினைப்பேன். நாலணாவை மையமாக வைத்தே நாம் திடங்



"உன் காதலர் கூரியர் சர்வீஸ்ல வேலை பார்க்கிறாராமே...?"

"அதை ஏன் கேட்கறே? லவ் லட்டரைக்கூட இருபது ரூபா குடுத்தா தான் எனக்குத் தர்றார்... அதோட கையெ ழுத்தும் வாங்கிக்கிறார்!"

— அம்பை தேவா

கொள்ள ஆரம்பித்து நாம் எதையும் தாங்கும் இதயத்தைப் பெற வேண்டியதுதான். அதற்கான ஏற்பாடுகள் இங்கு அதிகம்.

நிறைய ஃபோன்கள் செய்து பழகிவிட்டு பில்லில் மூன்று ரூபாய் இருபத்தாறு பைசா என்று வரும்போதெல்லாம் மூணு ஐம்பது தான் கொடுத்து வருகிறேன்.

பில்லின் ஒரு பைசா, வாடிக்கை யாளனின் இருபத்தைந்து பைசாவுக்குச் சமமாகி விடுகிறது. ஆறு பைசாக்களைத் தொலைத் தொடர்புத் துறை கணக்கிட்டுக் கொண்டு வந்ததற்கு நான் நன்றி உடையவனாகவே இருக்கிறேன். ஏனெனில், இந்த ஏற்பாட்டினால் நாம் இழப்பது இருபத்தைந்து பைசா அல்ல. வெறும் இருபத்தி நான்கு பைசாக்கள்தான்.

பஸ்ஸில் ஏறியதும் புறக்காட்சிகளை வேடிக்கை பார்ப்பதையோ புத்தகம் படிப் பதையோ புறக்கணித்துவிட்டு முழு வேலையாய் டைமண்ட் இவான்ஸின் வேலையைக் கவனிப்பதே என் வேலை யாகிவிட்டது.

இப்படிச் சம்பளம் இல்லாத பகுதி நேர வேலைகள் எவ்வளவைத்தான் கவனிப்பது?

யாராவது நாலணா எட்டணா கொடுத்து ரூபாய் பாக்கியை அவனிடம் பெறுவதை நான் கவனித்திருக்கிறேன். ஆனால் அப்படிப் பெற்ற நாலணா, எட் டணாக்களைப் பழைய பாக்கியாளர் களுக்குத் தந்து பைசல் செய்ததை நான் ஒருபோதும் பார்த்ததேயில்லை. அவ ரவர் துயரம் அவரவருடையது என்பது போலத் தான் அவனது நடத்தை இருந் தது.

மீதிச் சில்லறை தராதது மட்டுமல்ல, நாலணா எட்டணா உபரியாக இழந்து பிர யாணம் செய்யும் மக்களை – டிக்கெட்டே வாங்காமல் பயணம் செய்கிறாற்போன்ற குற்ற உணர்ச்சியை உண்டாக்கி விடுவான். அவனது சொற் சாதுரியம் அப்படிப்பட் டது.

"நான் என்ன சொந்தமாக் காசு உருக்கி ஊத்தறேனா?" என்பன போன்ற கேள் விகளை அவனது சாதுரியம் உள்ளடக் கியது. காசுகளை அச்சடிக்கும் பொறுப்பை அரசு அவனுக்காக விடலாம்தான். ஆனால் அதை அவனிடமிருந்து பெறுவதற்கு என்ன ஏற்பாட்டை மேற்கொள்ளும் என்பது எனக்குப் புதிராகத்தான் இருக்கிறது. இப் படியெல்லாம் மீதி தராது சேகரிக்கிற காசுகளை ஏதாவது ஒரு பெருங்கிழமை களில் கற்பூரமோ மெழுகுவர்த்தியோ கொளுத்தி தீர்க்கிறானோ? என்கிற ஐயப் பாடு எனக்குள் எழுந்தவாறேயிருந்தது.

பொது நடவடிக்கையின் ஒற்றைமுகமாக அவனிடம் இது பற்றி கேள்வி எழுப்பத் தோன்றியது. "சில்லறையக் குடு. டிக்கட்ட வாங்கு. உன்ற ஸ்டாப்பிங்ல எறங்கிப் போ" என்று கட்டாயம் சொல்வான். எனது உத்யோகம் அவனது 'ஒருமை'யைத் தாங்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. அவனுடன் கட்டிப்புரண்டு சண்டை போடுகிற காட்சி யையெல்லாம் மனத்திரையில் கண்டு விட்டேன்.

"நாலணாவுக்குச் சண்டை போடத் தானா நீ பிறந்தது?" என்றெல்லாம் கேள் விகள் வருமென வாளாவிருந்தேன். இப் போது தற்காலிகத் தீர்வொன்று கிடைத் துள்ளது.

என் மகளுக்கு அழகானதோர் உண் டியல் வாங்கிக் கொடுத்துள்ளேன். சிறு வட் டத்தில் வைக்கும் காசை பொம்மை நாய் தனது காலில் கவ்வி உள்ளே இழுத்துப் போய் வீட்டில் சேர்க்கும் சிறு தொழில் நுட்ப உண்டியல். இந்த 'நாய் வீடு' உண் டியலின் அகல நீளங்கள் அரை அரை அடிக்கு உட்பட்டவை. செல்லமகள் விளை யாட்டு போல ஆசை ஆசையாய் அதில் காசு சேர்த்து வருகிறாள். பட்டாம் பூச்சிக் கனவுகளோடு அவள் உறங்கும் ஆறு மணி விடியல்களில் நான் அதில் நாலணாக்கள் திருடுகிறேன். ○



சுமி சூப்பர்மார்க்கெட்

சிம்பிள் ட்யூன்; ஆஹா ரகம்!

ரீஸன்டா திருவான்மியூர்ல ஒரு மேரேஜ்க்குப் போயிருந்தேன். கல்யாண மணமேடைக்குப் பக்கத்துல மணமகன் ரூம், மணமகள் ரூம்னு தனித்தனியா இருக்கற மாதிரி மேடைக்கு ஆபோஸிட் சைட்ல ஆலோசனை ரூம்னு ஒண்ணு இருந்ததைப் பார்த்து ஷாக் ஆயிட்டேன். கல்யாண மண்டபத்திலே எதுக்கு ஆலோசனை ரூம்? மேரேஜுக்கு முன்னால தீவிரமா ஆலோசனை பண்ணுறதுக்கா? அல்லது தாலி கட்டினப்புறம் நேரே போய் அங்க உட்கார்ந்து நாம எதுல மாட்டிக்கிட்டிருக்கோம்னு யோசிக்கவா...? என் ஸ்பெக்ஸைத் தூக்கி விட்டுட்டு, ரெண்டு பேர்ட்டே விசாரிச்சா ஸ்மைல் பண்ணிட்டே போயிட்டாங்க. இந்த ரூம் ஏன்கறத பற்றி மன்ற உறுப்பினர்கள் சூப்பர் மார்க்கெட்டுக்கு எழுதினால் சுமி மண்டை வெடிச்சிடாம காப்பாத்துன புண்ணியம் கிட்டும்.


எஹ்ஸாஸ் (EHSAAS) ங்கற இந்திப் படப் பாடல் கேசட் சமீபத்துல கிடைச்சது. அதர் லாங்குவேஜ்னாலும் மியூசிக்குக்கு ஏது லாங்குவேஜ்ங்கறதால போட்டுக் கேட்டேன். ரியலி குட். ஹார்ட்டை டச் பண்ற மாதிரி ரித்மிக் சாங்க்ஸ் எல்லாம். ஃபாதர் உதித் நாராயணனும், சன் ஆதித்ய நாராயணனும் பாடற 'குச் கெஹ்னா ஹை'யும், ஹரிஹரன் பாடற 'யாதீன் யாத் ஆத்தி ஹெய்ன்'ங்கற பாட்டும் சிம்பிள் ட்யூன்; பட் 'ஆஹா' ரகம்! மொத்தம் டென் சாங்ஸ், லிரிக்ஸ் எழுதினவங்க ஏழு பேர்னா, மியூசிக் டைரக்டர்ஸ் அஞ்சு பேர்.



ஒரு படத்துக்குப் பாட்டு எழுதினா எல்லா சாங்க்ஸும் நான்தான் எழுதுவேன்னு அடம் பிடிக்கிற கவிஞர்கள் இருக்கிற நம்மூர்ல அஞ்சு இசையமைப்பாளர்கள் மியூசிக் பண்றது நடக்கற காரியமா என்ன?

நெக்ஸ்ட், 28.10.01 இஷ்யூல வஸந்த் செந்தில் எழுதின கவிதை புக்ல மிஸ்டேக் மழைன்னு நான் பாட்டுக்கு எழுதிட்டு, இறையன்பு புக்கைப் பத்தி எழுதும்போது மிஸ்டேக் பண்ணிட்டேன். 'முகத்தில் தெளித்த சாரல்'ங்கறதுக்குப் பதிலா முகத்தில் தெளிக்கும் சாரல்னு எழுதிட்டேன். எனவே, நான் செய்த தப்புக்கு என் மண்டையிலே 'நறுக்'னு குட்டிக்கிறேன். மண்டை வீங்கினா நெக்ஸ்ட் வீக் லீவு!

— சுமி





• இறை வணக்கம் பாடுகிறார் தீபிகா



கல்கி - ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனம் இணைந்து கடந்த ஜனவரி மாதம் முதல் நடத்தி வரும் நில் கவனி வெற்றிகொள்! - இளைஞர் திருவிழா வரிசையில், பத்தாவது நிகழ்ச்சி அக்டோபர் இருபத்தி எட்டாம் தேதி சென்னை நாரத கான சபா அரங்கில் நடைபெற்றது. அரட்டை அரசர் விசுவும், வழக்கறிஞர் சுமதியும் சூடு பறக்க பேசிய நிகழ்ச்சிக்கான தலைப்பு : சிறை வைக்கிறதா சின்னத்திரை? தமது காரசாரமான பேச்சுக்களால் இவர்கள் கலக்க, ரசிகர்கள் கைதட்டல்களால் கலக்கினார்கள் அரங்கத்தை.

முதல் பிரதி

"சின்னத்திரை நம்மைச் சிறைவைக் கிறது என்பதைவிட, நாம்தான் சின்னத் திரையிடம் சிறைபட் டிருக்கிறோம்! இந்த டி.வி. ஆதிக்கம் மேல்நாடுகளில், சாட்டர்டே ஈவினிங் போஸ்ட், லைஃப் போன்ற பல பிரபல பத்திரிகைகளை மூடும் நிலைக்குத் தள்ளி விட்டது. நல்ல காலம்! இங்கே, டி.வி.யால் பாதிப்பு இருந்தாலும், பத்திரிகைகளை மூடும் சூழ்நிலை ஏற்பட வில்லை" என்றார் நிகழ்ச் சியைத் தொகுத்த கல்கி ராஜேந்திரன்.



• சுமதி

சித்தி :

"என் மகளும், மாப்பிள்ளையும் அமெரிக்கா விலிருந்து வந்திருந்தார்கள். அவர்களைப் பார்க்க, கல்பாக்கத்தில் இருக்கும் மாப்பிள்ளையின் சித்தி, எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் வருவதற்கும், சித்தி தொடர் ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. வந்த சித்தி, அமெரிக் காவிலிருந்து வந்திருப்பவர்களிடம் பேருக்கு இரண்டு வார்த்தை பேசி விட்டு, சீரியல் பார்க்க ஆரம்பித்துவிட்டார். விளம்பர இடைவேளை யின்போதுதான் தலையைத் திருப்பி, மறுபடி ஏதோ பேசினார். அதற்கு இவர் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறபோதே, மறுபடி சீரியல் தொடர், சித்தியின் கவனம் மீண்டும் சித்தி மீதுதான். மறுபடி அவர் வாய் திறந்து பேச, அடுத்த விளம்பர இடைவேளை வரை காத்திருக்க வேண்டியிருந்தது. என் மாப்பிள்ளையும், பெண்ணும் ரொம்பவே நொந்து போய்விட்டார்கள் அந்த அளவுக்கு. இன்று டி.வி.யின் ஆதிக்கம் இருக் கிறது.

காசு மேலை

"இரவு ஏழு மணி

மனத்தை



கோடிக்கணக்கில் பணம் கொட்டி, விளம்பரம் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரைம் டைம் என்றால் ஒவ்வொரு விநாடிக்கும் ஏகப்பட்ட மதிப்பு!" என்று குறிப்பிட்டார் விசு.

நேருக்கு நேர்

தனக்கு அளிக்கப்பட்ட நேரத்தில் மிகக் குறைவாகவே பேசினாலும், கேள்வி - பதில் பகுதிக்கு அதிக நேரம் வழங்கலாம் என்று சொன்ன விசு, அதற்குச் சொன்ன காரணம்,





• விசு



• பெருங்குடி ஞானசேகரன்

முதல் ஒன்பதரை வரையிலான நேரத்தை 'பிரைம் டைம்' என்று விளம்பரதாரர்கள் நினைக்கிறார்கள். ஆபிசிலிருந்து திரும்பிய கணவன், வீட்டிலேயே இருக்கிற அம்மா, அப்பா, ஆபிசிலிருந்து திரும்பிய அல்லது வீட்டிலேயே இருக்கும் மனைவி, பள்ளி, கல்லூரி முடிந்து திரும்பும் பிள்ளைகள் என அனைவரும், தங்களுக்குள் மனம்விட்டுப் பேச வேண்டிய நேரத்தில் அனைவரது கவனமும் டி.வி.மீது. 'இந்த நேரத்தில் அனைத்து தரப்பினரையும் டி.வி.முன் கட்டிப்போட்டுவிட வேண்டும்' என்ற ஆக்ரோஷத்துடன் பலரும்

நில், கவனி, வெற்றிக்கொள்!

ாதிக்கும் விஷம்!

நானே பேசுவதைவிட, பார்வையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து இதனை வாசகர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சியாக அவர் அமையச் செய்ய விரும்பியதுதான்.

அன்புள்ள ஸ்நேகிதியே!


"ஒரு டீ.வி. தொடரில், வக்கீலாக நடித்தார் ஒரு பெண். அந்த கதாபாத்திரத்துக்கும், ஒரு போலீஸ் அதிகாரிக்கும் உரசல். அதற்காக, அந்தப் பெண் வக்கீல், விபசாரத்தில் ஈடுபட்டதாகப் பொய் சொல்லி, கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து, பத்திரிகையாளர்களைக் கூட்டி படம் எடுத்துப் பிரசுரிக்க வைத்து, அவமானப்படுத்துகிறாராம் போலீஸ் அதிகாரி. இப்படி, நடைமுறையில் சாத்தியமில்லாத விஷயங்களை மிகைப் படுத்திக் காட்டுவது கண்டிக்கத்தக்கது. அந்தப் பாத்திரத்தில் நடிக்கும் நடிகை சி.ஏ. படித்திருக்கிறார். இப்படி அபத்தமாக நடிக்கச் சொல்கிறபோது, நடிக்க மறுத்திருக்க வேண்டாமா? பணத்தக் கொடுத்து நடி என்றால், குரங்காகக்கூட நடிக்கத் தயங்கமாட்டார்கள் போலிருக்கிறது" என்று ஆரம்பத்திலேயே வெடித்தார் வழக்கறிஞர் சுமதி.

ஜன்னல்

"என்னிடம், குடும்ப கோர்ட் சம்பந்தப்பட்ட கேஸ்கள் வருவதுண்டு. குடும்பத்தில் என்ன பிரச்னை என்று கேட்டால் உடனே அந்தப் பெண்கள், ஏதோ ஒரு சீரியலின் பெயரைச் சொல்லி, அதில் வருவானே ஒரு சாடிஸ்ட் புருஷன், அதே மாதிரிதான் என் கணவர் என்று உதாரணம் சொல்லுகிறார்கள். இவர்கள், டீ.வி.யில் பார்க்கிற கேரக்டர்களுடன் ஐக்கியமாகி, தன்னைச் சுற்றி இருப்பவர்களையெல்லாம் பல்வேறு சீரியல் கதாபாத்திரங்களிலும் பொருத்திப் பார்த்து, தங்கள் பிரச்னைகளைப் பெரிதாக்கிக் கொள்கிறார்கள்.

"டீ.வி. பார்ப்பதால், நேரம் வீணானால் கூடப் பரவாயில்லை. சுறுசுறுப்பாக இயங்கி, தூக்கத்தைக் குறைத்து சரிகட்டிவிடலாம். ஆனால் டீ.வி. தொடர்களால் ஏற்படுகிற எண்ணச் சிதைவுகளின் விளைவுகள் விபரீதமானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது சிறிது சிறிதாக மனத்தை பாதிக்கும் விஷம்.

"கடந்த ஐம்பதாண்டுகளில், பெரும் முயற்சி செய்து, இந்த சமுதாயத்தில் சில மாற்றங்களை நிகழ்த்துவதற்காக பாராளுமன்றம் மூலமும், கோர்ட்களின் மூலமும் முயன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம், இவர்கள் ஐம்பது எபிசோட்கள் மூலம் கெடுத்து விடுவார்கள் போல



இருக்கிறது!" என்று சிந்திக்க வைத்தார் சுமதி.

குடும்பம் ஒரு கோவில்

"ஒரு கதையைப் படித்தாலோ, பார்த்தாலோ, அது மனிதனின் மனத்தில் உள்ள அழுக்குகளை அகற்றி, மேன்மைபடுத்தும்படியாக இருக்க வேண்டும். குடும்ப உறவுகளைச் செம்மைப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால், இன்று, அதற்கு எதிர்மாறான விளைவுகளைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்." இதுவும் சுமதியின் ஆதங்கம்.

சங்கே முழங்கு

அடுத்து தொடங்கியது நேயர்களின் கேள்வி பதில். அம்பத்தூர் சம்பத்: அரட்டையை ஒரு கலையாகவே ஆக்கிய நீங்கள், சமுதாய நோக்குடன் ஓர் இயக்கம் ஆரம்பிக்கப் போகிறீர்களாமே. உண்மையா?

விசு : ஆமாம்! ஆனால் இப்போது இல்லை. கடந்த எட்டாண்டுகளாகப் போடப்பட்ட அஸ்திவாரத்தின்மீது கட்டப் போகிற கட்டடம் எப்படி இருக்கும் என்பது குறித்து நான் இன்னும் முடிவு செய்யவில்லை.

அரிகிரி அசெம்ளி

அரட்டை அரங்கத்தின் மூலம் என்ன சாதித்திருக்கிறீர்கள்? என்று விசுவைக் கேட்டார் ராஜேஷ் என்ற வாசகர். "சமீபகாலமாக, அரட்டை அரங்கத்தில், உள்ளூர்ப் பிரச்னைகளும் அலசப்படுகின்றன. அண்மையில் தலைவாசலில், பல உயிர்களைப் பலி வாங்கும் ஒரு பாலம் பற்றிக் குறிப்பிடப்பட்டது. உடனடியாக, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் ஒரு விஷயம். பொதுக் காரியங்கள் செய்ய, நான் ஒரு எம்.எல்.ஏ.வோ, அரசு அதிகாரியோ இல்லை. ஒரு தனியார் டீ.வி. சேனலில், நிகழ்ச்சி நடத்துபவன். ஆனால் அதன்மூலம் எந்த அளவுக்கு நல்ல காரியங்கள் செய்ய முடியுமோ அவ்வளவு செய்வதை, என் கடமையாகக் கருதுகிறேன்.

அரட்டை அரங்கம்

விசு தன்னுடைய நிகழ்ச்சிக்கு எப்படி



பெயர் சூட்டப்பட்டது என்றும் கூறினார்.
"ஆரம்பத்தில், இப்படிப்பட்ட விவாதங்களை நடத்தினால், அரசு மற்றும் அரசியல்வாதிகளிடமிருந்து ஏதாவது பிரச்னை வரும் பட்சத்தில் 'சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். சும்மா அரட்டையடிக்கும் விஷயம்தான்' என்று சொல்லி, சமாளிக்கும் நோக்கத்துடன் அரட்டை அரங்கம் என்று பெயர் வைத்தேன்.

நிகழ்ச்சி பிரபலமான பிறகு 'அலசல் அரங்கம்' உட்பட பல பெயர்களை வைக்க ஆலோசனை தரப்பட்டது. சிறுவயதில் சின்னசாமி என்று பெயர் சூட்டப்பட்டவரை, பெரியவரான பின்னும் சின்னசாமி என்றுதான் கூப்பிடுகிறோமே தவிர, பெரியசாமி என்று மாற்றி விடுவதில்லையே. அதுபோலவே, இன்றும் அரட்டை அரங்கம் என்ற பெயரே தொடர்கிறது. இதனை மாற்றும் எண்ணமும் இல்லை.

திரை மசாலா

"மறுபடியும் சினிமா இயக்கும் எண்ணம் உண்டா? மெகா சீரியல்களில் நடிக்கும் எண்ணம் உண்டா?" என்ற கேள்விகளுக்கு, "நான் எடுத்த நாலைந்து படங்கள் வரிசையாய்த் தோல்வி அடைந்தன. எனவே, இனி படம் எடுத்து, என் கைகளைச் சுட்டுக் கொள்ளவும் விரும்பவில்லை. அடுத்தவர் கையைச் சுடும் எண்ணமும் இல்லை.

"மெகா சீரியல்களா? நிச்சயம் நடிக்க ஒப்புக் கொள்ளமாட்டேன். தினம் தினம் என் முகத்தைப் பார்க்க, என் மனைவிக்குக்கூட போரடித்துவிடும். வாராந்திர சீரியல்களில் நடிக்க ஆட்சேபனை ஏதுமில்லை."

மங்கையர் சாய்ஸ்

"சின்னத்திரை சீரியல்களை நிறுத்தலாமா? மனைவிமார்களைத் திருத்தலாமா?" என்ற செந்தில் குமாரின் கேள்விக்கு நகைச் சுவையாய் சுமதி அளித்த பதில் : நீங்கள் முயற்சி செய்தால் உங்கள் மனைவியைக்கூட உங்களால் திருத்திவிட முடியும். ஆனால், சீரியல் எடுப்பவர்களைத் திருத்தவே முடியாது. (ஒரே கைதட்டல்)

சினிமா காரம் காபி

பெருங்குடி ஜானகிராமனின் குற்றச் சாட்டு, "அரட்டை அரங்கம் சினிமாத்தனமாக இருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் உணர்ச்சி பூர்வமாக ஒரு தீர்வைச் சொல்லி, கைத்தட்டல், வாங்கி, நழுவி விடுகிறீர்கள்" என்பது.

இந்தக் குற்றச்சாட்டை விசு ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தரப்பு பதில் : நிகழ்ச்சியில் சினிமாத்தனமும் இல்லை. நான் நழுவவும் இல்லை. உதாரணமாக, இன்றைய சூழ்நிலையில் யார் ஜெயிக்கிறார்கள்? லட்சியவாதிகளா? சுயநலவாதிகளா? யதார்த்தவாதிகளா? என்று குற்றாலத்தில் அரட்டை அரங்கம்.

இன்றைய உலகில், சுயநலவாதிகள்தான் ஜெயித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை நேரடியாய்ச் சொல்ல முடியாது. யதார்த்தவாதிகள் என்றாலும் எடுபடாது. ஆக, லட்சியவாதிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இது ஒரு பொது நல நோக்கில் சொல்லப்படும் முடிவு.

இந்த நாள் இனிய நாள்

"வெள்ளிக்கிழமை என்றால் ஒலியும் ஒளியும், ஞாயிற்றுக்கிழமை தமிழ் சினிமா என்று இருந்த காலம் மலையேறி, இன்று ஏகப்பட்ட சேனல்கள், இடைவிடாத ஒளிபரப்பு. நான் ஸ்டாப் கொண்டாட்டம்தான். அத்தனையையும் மீறி, டெலிவிஷனின் தாக்கம் பற்றிய இந்த சீரியஸான நிகழ்ச்சிக்கு, அரங்கம் நிறைய பார்வையாளர்கள் வந்திருப்பது சந்தோஷமான விஷயம். இன்று இங்கே பேசப்பட்டவை சின்னத் திரை குறித்த உரத்த சிந்தனை, ஆழ்ந்த சிந்தனை, அறிவார்ந்த சிந்தனை" என்று குறிப்பிட்டார் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி தமது நன்றி உரையில்.

நம்பிக்கை

சினிமாவுக்குச் சென்சார் போர்டு போல் டி.வி.க்கும் ஒரு கட்டுப்பாட்டுச் சாதனம் தேவை என்பது வலியுறுத்தப்பட்டது. கட்டுப்பாடு என்ற பெயரில் கருத்துச் சுதந்திரத்துக்குத் தடை விதித்துவிடக்கூடாது என்பதாகவும் கட்டுப்பாடு தேவை என்பது பரவலாக உணரப்படுவதால், அது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்புவதாகவும் விசுவும் சுமதியும் கருத்து தெரிவித்தனர்.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**
படங்கள் : **யோகா**



சமீபத்திய செய்திகளின்படி, காந்தஹார் நகருக்கு வெளியே, நள்ளிரவில், அமெரிக்கத் துருப்புக்கள் நூறு பேர் பாரசூட்டிலிருந்து குதித்து, தலிபான் தலைவர் முல்லா முகமது உமர் தங்கிச் செயல்படுவதாகக் கூறப்படும் கட்டடத்தைச் சரமாரியாகச் சுட்டுவிட்டு, விமானங்களிலும் ஹெலிகாப்டர்களிலும் திரும்பிவிட்டார்கள். கட்டடத்தைச் சேதப்படுத்தாமல், காம்பவுண்டை மட்டுமே சேதப்படுத்தியிருக்கிறார்கள். தரைப்படைத் தாக்குதலின்போது அது முக்கிய இலக்காக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

ஓசாமா பின் லேடனின் இருப்பிடத்தை எப்படியாவது தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்ற முயற்சியில் அமெரிக்கத் தளபதிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

உண்மையில் ஓசாமா எங்கே தான் இருக்கிறார்?



அமெரிக்க உளவுத்துறை, நாநூறு சதுர மைல்களுக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓசாமா இருப்பதாகவும், ஆனால் அதைச் சுற்றிக் குகைகளும், சுரங்கப் பாதைகளுமாக இருப்பதால் எல்லா வழிகளையும் அடைப்பது சுலபம் அல்ல என்றும் கருதுகிறது. ஓசாமாவின் இருப்பிடம் துல்லியமாகத் தெரிந்துவிட்டால், விமானத் தாக்குதல் மூலம் குறி வைத்துத் தாக்கிவிடலாம் என்று கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது. தரைப் படைத் தாக்குதல் இரண்டாவது கட்டம்.

மூன்றாவது கட்டமாக இருக்கப் போவது உளவுத் துறையின் தகவல்களை அடிப்படையாக வைத்து, இலக்கை அடைந்து தாக்குதலை அதிகரித்து, வெற்றி இலக்கை அடைவது. ஆனால் இது சிரமமான காரியம். தோல்விகள் கூட உண்டாகலாம். காரணம் கடினமான தரைப்பகுதி!

ஆனால் இந்த வகைத் தாக்குதலுக்குத் தயாராக, சிறப்பு அதிரடிப்படை இருக்கிறது. எத்தனை மோசமான பகுதிகளிலும் போரிட்டுச் சமாளிக்கக் கூடிய திறன் வாய்ந்த படை

இது. இப்படி ஒரு போர் வந்தால் சமாளிக்கக் கூடிய இந்தப் படையை முன்கூட்டியே எதிர்பார்த்து உருவாக்கி இருக்கிறது பென்டகன் தலைமை! சாதாரணப் போர்வீரனைக் காட்டிலும் கல்வியறிவிலும், புத்திசாலித்தனத்திலும், தேர்ந்தவர்கள் இந்தச் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள்.

விமானங்களிலிருந்து குண்டு பொழிந்தும் எதிர்பார்த்த பலன் கிடைக்காததால், அதிரடிப்படையை அனுப்ப புஷ் அவசரப்படுகிறார். தளபதிகள் தயங்குகிறார்கள். 'குண்டுகள் போட்டுச் சாதிக்க முடிந்தால், இளம் வீரர்களைக் களத்தில் இறக்கி இழப்புக்களைச் சந்திப்பானேன்?' என்பது தளபதிகள் வாதம். புஷ்ஷுக்குத் தலிபான் பாடம் கற்க வேண்டும் என்ற அவசரம். அமெரிக்க மக்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற அவசரம். 'ஆமாம், குண்டுகள் எதிரிகளைத் தேடிப்பிடித்து நம்மிடம் தராது' என்று ஆமோதிக்கிறார் பாதுகாப்புச் செயலர்.

ஆப்கானுக்குள் ரகசியப்படை!

அப்படியானால் இந்தச் சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் எப்படிப்பட்டவர்கள்?

பயங்கரமான பயிற்சி. பாரசூட்டிலிருந்து இருளில் குதிக்கும் திறமை. அதிவேகமாகச் சுடும் திறன். எதிரிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் தாக்கி முன்னேறும் தைரியம். சுமையையும் தூக்கிக் கொண்டு பாறைகளிலும் மலைகளிலும் ஏறுகிற சாமர்த்தியம். ஹெலிகாப்டரிலிருந்து கயிற்றைப் பிடித்துக் கொண்டு தரையானாலும், நீரானாலும் இறங்கி விடுகிற துணிச்சல். தரைப்படம் (மேப்) உதவியின்றியே மீண்டு கொள்ளும் லாகவம். மூன்று மணி - நாலு மணி நேரத் தூக்கம். குறைந்த உணவு, குடிநீர் மட்டுமே உட்கொண்டு சுறுசுறுப்பாக இருக்கிற துணிச்சல். இவர்களை 'ரேஞ்சர்ஸ்' என்கிறார்கள்.

இதைவிட எமன்கள் 'க்ரீன் பெரட்ஸ்'. ஆப்கானிஸ்தானில் வடக்குக் கூட்டணிக்குத் தகுந்த பயிற்சி கொடுக்க வேண்டும் இவர்கள். அந்நிய அரசாங்கங்களுடன் ஒத்துழைக்க வேண்டும். துப்புத் துலக்கும் பணியில் கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். எதிரியின் நடவடிக்கைகளை அருகே இருந்து கண்காணித்துச் செயல்படும் திறன் இருக்க வேண்டும். நாள் கணக்கிலும் வாரக் கணக்கிலும் இதற்காகக் காத்திருக்க வேண்டும்!'

இது மட்டுமல்ல, அந்நிய மொழிகள் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் சரித்திரம் அறிந்திருக்க வேண்டும். எங்கே செயல்பட வேண்டுமோ அந்தப் பகுதியின் கலாசாரம் தெரிந்திருக்க வேண்டும். நடு ராத்திரி தூக்கத்தில் எழுப்பி, 'கிளம்பு' என்றால், மூட்டை முடிச்சோடு கிளம்பியாக வேண்டும்! பல மாதங்கள் இவர்கள் வீட்டை விட்டு வெளியே இருப்பதால், திரும்பி வரும்போது டைவோர்ஸ் நோட்டீஸ் காத்திருக்குமாம், மனைவியிடமிருந்து!

எதிரியை நேருக்கு நேர் சந்தித்துப் போரிடும் டெல்ட்டா ஃபோர்ஸ், பயங்கரவாதிகளை முறியடிக்க என்றே உருவாக்கப்பட்டது. பென்டகன் அதிகாரிகளே இவர்களை அடையாளம் காட்டமாட்டார்கள். அத்தனை ரகசியப்படை இது!

இத்தனை தொழில் நுட்பமும், பயிற்சியும் இருந்தும்கூட இந்தச் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவுகள் அப்படி ஒன்றும் பிரமாதமாகச் சாதித்துவிடவில்லை என்று பென்டகனுக்கு உள்ளேயே ஒரு கருத்து நிலவுகிறது. மேற்படி அதிரடிப்படை வீரர்கள் ஒசாமா பின்லேடனைப் பிடிப்பதில் வெற்றி பெறுவார்களா? என்று ஆப்கானிஸ்தானில் இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் தளபதி, ஜெனரல் டாமி ஃப்ராங்க்ஸ் சந்தேகப்படுகிறாராம். ராணுவ வீரர்களைவிட இவர்கள் ஒன்றும் பிரமாதமாகச் சாதித்துவிடப் போவதில்லை என்கிறார் இவர். படைகளுக்குள் 'யார் பெரியவன்?' என்ற குழப்பம் வந்துவிடாமல் இருக்க, ரேஞ்சர்களையும், க்ரீன் பெரட்ஸையும் ஒரு தனித் தளபதியின்கீழ் பணியாற்ற வைக்கும் எண்ணமும் பென்டகன் அதிகாரிகளிடையே இருக்கிறது.

என்னவானாலும், ஆப்கானிஸ்தான் போர் இப்போதைக்கு முடிகிற மாதிரி தெரியவில்லை. இருட்டில் மாட்டிக் கொள்ளக் கண்ணாடி, எம்-9, எம்-60 பிஸ்டல்கள் துப்பாக்கிகள், கே-பார் கத்திகள் எல்லாம் சிறப்பு அதிரடிப்படை வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்தப் போர் மிக வித்தியாசமானது. அமெரிக்க சாகசங்களுக்கு எல்லாம் சவால் விடக் கூடியது.

தொகுப்பு : **சித்தார்த்**

(நன்றி : **நியூஸ்வீக்**)

நடக்குமென்பார்;

மேஷம்

சிறப்பான கிரக சஞ்சாரம், கூடவே சந்திர பலமும் அசாத்தியமாகக் கூடியிருக்கிறது. உங்கள் எண்ணங்கள் எல்லாமே லட்டு லட்டாக நிறைவேறும். எட்டுத் திசை எதிர்ப்பும், பதினெட்டு சுத்துப்பட்டி எதிரிகளும், எழுந்திரிச்சு, கும்பிட்டு ஓடிப் போவாங்க. விவகாரம், வழக்கு வியாஜ்ஜியம், விளையாட்டு, விநோதம் எல்லாவற்றிலும் வெற்றிலை பாக்கு வைச்சு வெற்றி கொண்டாடுவீங்க! 7ல் சூரியன், சுக்ரன், புதன் என்பதால் வாழ்க்கைத் துணை நலம் கவனம் அவசியம். தெய்வப் பிரார்த்தனை தெம்பு தரும்.

ரிஷபம்

‘ஆனந்தம்’, ‘சமுத்திரம்’ ‘பாண்டவர்பூமி’ மாதிரி உங்கள் குடும்பத்திலும் பாசமழை பொழியும். சுப காரியங்களில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கனிந்து வரும். நயாகரா போல மனத்தில் உற்சாகம் பீறிட்டுப் பொங்கும். இத்தனை அமர்க்களத்துக்கும் காரணம் குரு, சூரியன், புதன் ஆகியோரது ஆசிர்வாதம் தான். பங்கு மார்க்கெட் இனங்கள் டபுள் ஆதாயம் கொண்டு வரும். பயணத்தால் சங்கடம் வரலாம் எச்சரிக்கை!

நவம்பர் 7 முதல் 13 வரை

மிதுனம்

குரு நின்றாலும் சுபம். பார்த்தாலும் சுகம். உங்கள் புத்திசாலித்தனம், திறமை அனைத்தும் அய்யனார் கை அருவாள் போல பளபளக்கும். புதிய பொருள் சேர்க்கை நிகழும். மனை, நிலம் வீடு போன்றவை நன்மை தரும். மாணவர்கள் உழைப்புக்கேற்ற பலன் பெறுவது நிச்சயம். எப்பொருள் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அவசியம். இல்லையென்றால், தேவையில்லாத சிக்கலில் மாட்டிக்கொண்டு சிரமப்பட வேண்டியிருக்கும்.

சிம்மம்

ஒரே ஒரு வழியில், தங்கு தடையில்லாத பணவரவு இருந்தாலே, மனுஷனைக் கையில் பிடிக்க முடியாது. உங்க ராசிக்குப் பாருங்க, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களிலிருந்து வருவாய் வரும் அம்சம் இருக்கு! அப்ப, ‘கே. டீவி.’ மாதிரி நான் ஸ்டாப் கொண்டாட்டம்தான். என்ஜாய். வியாபாரிகளுக்கு வளர்ச்சி, அரசுப் பணியாளர்களுக்கு ஆதாயம், பெண்களுக்கு அபிவிருத்தி, விஞ்ஞானி, ஆசிரியர்களுக்கு உற்சாகம் என சகலமும் சாதகமான சூழ்நிலைதான்.

கடகம்

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த வாரம் விசேஷ பலன்கள் சொல்ல வேண்டியிருப்பதால், ஆண்கள் கொஞ்சம் வெயிட் ப்ளிஸ்! கலைத் துறையோ, ஆன்மிகமோ, எதிரும் புதிருமாகவே இருந்தாலும், பெண்கள் கால் பட்ட இடம் திநகர் ஷாப்பிங் ஏரியாபோல தகதகக்கும். உற்சாகம் உச்சாணி ஏறிக் கொள்ளும். பொது நலப்பணியில் ஈடுபாடு உள்ளவர்களுக்குச் சிறப்புக் கம்பள வரவேற்பு கிடைக்கும். கணவன்-மனைவி உறவு நிலை வெகுசிராக இருக்கும்.

அக்னிசர்மா பக்கம்

கன்னி

கன்னிராசி நேயர்களுக்குச் சுமாரான ராசி பலன்களைச் சொல்லி, முகம் சுணங்க வைக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லைதான். ஆனால் இந்த வாரம் உங்க கிரக சஞ்சாரம் அப்படியொண்ணும் விசேஷமாக இல்லீங்களே! அதனால் அசிரத்தையே கூடாது. எண்ணம், சொல், செயல் எல்லாவற்றிலும் கவனம் பரிபூரணமாக இருக்கணும். பண விஷயத்தில் கண்டிப்பா இருங்க. யாராவது குண்டூர் மிளகாயை தலையில் அரைச்சு விட்டுட்டுப் போயிடுவாங்க!

நடக்கும்!

துலாம்

இந்த 'மனசு' இருக்கிறதே, அது செய்யற மாய்மாலம்தான் உலகத்தில் நடக்கிற அனைத்து கூத்துக்கும் காரணம். உங்கவிஷயத்துல 3ல் உலவும் கேது ஸார், அசாத்தியமான மனோபலத்தைத் தந்து மனப்பூர்வமாக ஆசீர்வதித்துள்ளார். அதனால் துணிச்சல், தன்னம்பிக்கை எல்லாம் தாறுமாறாக கூடி, உங்களை 'படா' மனுஷனாக்கி விடும். செயலில் வேகம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது. வெளிநாட்டுத் தொடர்புகள் பயன் தரும்.

மகரம்

மகர ராசிக்காரர்கள் இந்த வாரம் அதிகம் அலட்டிக்க வேண்டாம். 10ல் உலவும் சூரியன், புதன், சுக்ரன் மற்றும் ராகு உங்களை அலட்டிக்கவும் விடமாட்டார்கள். அப்படியே அலாக்காகத் தூக்கி, அம்சமா அனுகூலம் செஞ்சுத் தந்துடுவாங்க. அப்புறமென்ன அரசாங்க விவகாரங்கள் நன்மை தரும். ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் லாபம் காட்டும். சுபகாரியம் மாவிலைத் தோரணம் கட்டும். சாதுக்கள் தொடர்பு கிட்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கதவைத் தட்டும்.

விருச்சிகம்

எடுத்த காரியத்தை எப்பாடு பட்டாவது நிறைவேற்றி, அதில் வெற்றியும் காண்பீர்கள். ஏதோ இண்டு இடுக்குல இம்சை பண்ணிக்கிட்டிருந்த சஞ்சலமெல்லாம் அடங்கிப் போகும். விளையாட்டு வீரர்கள் வெற்றி வாகை சூடுவார்கள். கூட்டுத் தொழில் முன்னேற்றம் தரும். குருவும் ராகுவும் 8ல் இருப்பதாலும், கேது 2ல் உலவுவதாலும் 'பணம்காசு' பிரச்னை ஏற்படும். சிக்கனமாக இருந்தால், பெருஞ்செலவைச் சமாளிக்கலாம்.

கும்பம்

டல்லடிச்சுக்கிட்டிருந்த பொருளை டாலடிக்க வைக்கிற எல்லா திட்டமும் இந்த வாரம் சூப்பரா வர்க்-அவுட் ஆவும். வியாபாரத்தில் வளர்ச்சி ஏறுமுகம். பொருளாதார நிலைமை அருமை. ரொம்ப நாளா மனசுல நினைச்சுக்கிட்டு, தள்ளிப் போய்க்கிட்டே இருந்த பிரார்த்தனை விஷயங்கள், இந்த வாரம் நிறைவேறும். விண்வெளி ஆராய்ச்சியாளர், விமான ஓட்டிகள் ஆகியோருக்குச் சாதகமான சிநோஷணம், நிலவும்.

தனுசு

பெரியவங்களும், தனவான்களும் உதவிக் கரம் நீட்டினா, 'பக்'குனு பிடிச்சுக்கிட்டு 'மளமள'னு முன்னேறிடுங்க. நல்ல சந்தர்ப்பம் போனா வராது. சூரியன், புதன், குரு ஆகியோர் மிகச்சிறப்பான இடங்களில், மிக மிகச்சிறப்பான அம்சங்களுடன் ஜாலி மூடில் பார்ப்பதால், காலியான உங்கள் பர்ஸ் ஹெவியாகும். அரசியல்வாதிகளின் மதிப்பு, கௌரவம், காய்கறி விலை போல் கிடுகிடு உயர்வு பெறும். புதிய துறைகளில் பிரவேசிக்க இதுவே நல்ல தருணம். பூந்து கலக்குங்க.

மீனம்

அபார துணிவு, அசாத்திய நம்பிக்கை, நிறைய திறமை என்ற காம்பினேஷன் உங்கள் விஷயத்தில் பிரமாதமான பலன்கள் தருகின்றன. பயன்படுத்தி வளம் காண்பீர்கள். சிற்பம், கணிதம், ஓவியம் போன்ற துறைக்காரர்கள் முன்னணிக்கு உயருவார்கள். கணவன் - மனைவி இடையே பரஸ்பரம் அன்னியோன்யம் இருக்கும். உடன் பிறந்தவர்களால் அனுகூலம் தேடி வரும். அலைச்சல் தவிர்க்கவும். மாணவர்கள நிலை உயரப் பெறுவார்கள். ஞானிகள் தொடர்பு நலம் பல தரும்.



மகர ராசிக்காரரான காயத்ரி ரகுராமுக்கு உற்சாகம் உச்சாணிக்கு ஏறுமாம்!



திருப்புகழ் குருஜி ஏ.எஸ். ராகவன் எழுதும்

தலம் தோறும் தமிழ்க் கடவுள்!

உயிரோட்டமான தனுசுவின் படங்களுடன் மெய்சிலிர்க்க வைக்கும் ஆன்மீகத் தொடர்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 * Licensed to post without prepayment